

கல்கி
KALKI
9-11-1958
30 நயா பைசா



இவருக்குத் தெரியும்.... வைடமின்களுக்கும் வர்ணங்களுக்கும் உள்ள சம்பந்தம்!

ஆம். வைடமின்கள் வர்ணங்களை உண்டுபண்ணுகின்றன. தனது ஒளியியக்க மின்சாரக் கருவிகளில் புலனாகும் வர்ணங்களைக் கொண்டு வைடமின்களின் சக்தியைக் கணக்காக அளவிடக்கூடிய நிபுணர் இவர்தான்.

எதற்காக இவ்வளவு நுணுக்கங்கள்? ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்புகளை வாங்குவோராகிய நீங்கள் மாறாத மேன்மையுள்ள சரக்குகளையே எதிர்பார்க்கிறீர்கள் அல்லவா!

சரக்குகளின் தராதர மேம்பாடு இம்மியளவும் மாறுபடாதிருக்கும் பொருட்டு, உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் சரக்குகளை நாங்கள் பன்முறை பரிசோதித்துப் பார்க்கிறோம். இத்தகைய தராதரக் கட்டுப்பாட்டின் நற்பயனாக, தேசத்தின் அரும்பெரும் இயற்கைச் செல்வங்களையும், மூலாதாரமான உற்பத்திக் காலத்தையும் விரயமாகாது காத்துக்கொள்ள முடிகிறது.

ஆகவே, உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான, தரத்திலுயர்ந்த சரக்குகளை நயமான விலையில் உங்களுக்கு வழங்கிவர எங்களால் இயலுகிறது.

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம்புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 17-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 18 இதழ் 15	தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*	விளம்பி ஞு ஐப்பசி 24உ

விஷகுண்டு விவாதம்

விஷகுண்டுகள் வெடிப்பதை உடனே நிறுத்திவிட வேண்டும் என்றும் அணு குண்டு ஆயுதங்களை யுத்தப் பிரயோகத்தினின்று விலக்கிவிட வேண்டும் என்றும் உலகத்தில் பல தேசங்களிலும் தீவிர கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. ஜப்பான் தேசத்தில் இதைப்பற்றி மிக வேகத்துடன் கிளர்ச்சி நடைபெற்றுவருகிறது. அமெரிக்காவில் பல முக்கியமான தேசபக்தர்களும், புகழ்பெற்ற எழுத்தாளர்களும் கலந்து அந்தத் தேசத்துப் பத்திரிகைகளிலும் வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் ஒரு பெரிய அறிக்கை சென்ற வாரத்தில் வெளியிட்டார்கள் அணுகுண்டு விஷவெடிகளை உடனே நிறுத்திவிட வேண்டுமென்று அவர்கள் உலகத்தையாளும் அரசியல் தலைவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம் தேசத்து சர்க்காரும், அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டியும் இந்த அணுகுண்டு ஒழிப்பு விஷயமாகத் தீவிரமான தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள்.

ஜப்பானில் மக்கள் இந்தக் குண்டுகளினால் ஏற்கனவே பெரு நஷ்ட மடைந்திருக்கிறார்கள். இன்னும் பலர் வியாதிகளினால் பீடிக்கப்பட்டு வருகிறார்கள். அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் வல்லரசுகளின் விஷவெடிகள் எல்லாம் ஜப்பான் மக்களுக்குப் பெரும் சேதம் உண்டாக்கும் ஸ்தலங்களில் வெடித்து வருகிறார்கள். ஆகவே, ஜப்பான் மக்களுடைய கிளர்ச்சியை உலகமெல்லாம் கவனிக்க வேண்டியது கடமை. அதைப்பற்றி எங்கோ, ஏதோ நடக்கிறது என்று உதாசீனமாக இருப்பது மானுட தர்மத்துக்குத் துரோகமாகும்.

நம்முடைய பிரதிநிதியான வி. கே. கிருஷ்ணமேனன் அவர்களும் ஆர்தர் லால் அவர்களும் பெரு முயற்சி எடுத்து வருகிறார்கள். எப்படியாவது எல்லா வல்லரசுகளும், இந்த விஷயத்தில் ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.

போட்டி உணர்ச்சியும் எதிராளியை ஏமாற்றும் சூழ்ச்சி சாமர்த்தியமும் இல்லாமல், அணுகுண்டு வெடிப்பதை நிறுத்தி விடுவதற்கு மற்றவர்கள் சம்மதித்தால் ருஷ்யாவும் சம்மதிக்கும் என்று ருஷ்யப் பிரதிநிதி சொல்லி விட்டார். ஆங்கில — அமெரிக்கப் பிரேரணை இந்த விஷயத்தில் திருப்திபளிக்கவில்லை யென்றும் அதில் மோச எண்ணம் கலந்திருக்கிறது என்றும் ருஷ்யப் பிரதிநிதி ஜோரின் சொல்லுகிறார். ஜோரின் அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் நாம் உண்மையைத்தான் காண்கிறோம். ஒரு நிபந்தனையுமின்றி உடனே அனைவரும் ஏகோபித்து நிறுத்தி விடுவதே நலம் என்றும், அதற்கு ருஷ்யா ஒப்புக் கொண்டு கையெழுத்திடுவதற்குத் தயார் என்றும் ருஷ்யப் பிரதிநிதி ஜோரின் சொல்லியிருக்கிறார். இதை ஏன் எல்லாரும் ஒப்புக் கொள்ளக் கூடாது? அதற்குப் பதிலாக 'ஒரு வருஷம் என்று ஒரு காலவரை யிட்டு ஒப்புக் கொள்வோம்' என்று அமெரிக்க அரசாங்கம் சொல்லி வருகிறது. இப்போது வெடிக்க வேண்டிய வெடிகளை யெல்லாம் வெடித்து விட்டார்கள். புது வெடிகள் தயார் செய்வதற்கு ஒரு வருஷம் ஆகும். ஆதலால் இந்தப் பிரேரணை பித்தலாட்டம் என்பது ருஷ்யர்களுடைய வாதம். அதில் உண்மையிருப்பதாகத்தான் தோன்றுகிறது. நிபந்தனையின்றி சகலவித ஒழிப்புக்குச் சம்மதம், உடனே கையெழுத்துப் போடவும் சம்மதம் என்று ருஷ்யாவின் சார்பில் அந்தச் சர்க்காரின் பிரதிநிதி சந்தேகத்

துக்கிடமின்றிச் சொல்லுகிறார். அதை ஒப்புக் கொண்டு தாங்களும் சேர்ந்து உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்குப் பதில் வேறு உருவத்தில் சந்தேகாஸ்பதமான தீர்மானத்தை எல்லாரும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கோருகிறது. ருஷ்யா சொல்வதில் நியாயம் இருக்கிறது. அவர்களுடைய தீர்மானத்தை ஒப்புக் கொள்வதே நலமும் நீதியும்.

எப்படியாவது ஒரு ஏகோபித்த தீர்மானம் நிறைவேற வேண்டும் என்று வாசக சூக்ஷமத்தைக் கொண்டு ஒரு சமாதான தீர்மானம் செய்து விடுவதில் ஒரு லாபமுமில்லை. உண்மையில் அணுகுண்டு வெடிப்பதை நிறுத்தி விடச் செய்வதே இந்தியப் பிரதிநிதியின் கடமையும் நற்சேவையுமாகும். தற்போது நடைபெறும் ஜினிவா ஆலோசனைக் கூட்டம் பேசி முடிந்த பின் மறுபடியும் ஐ. நா. சபையில் இந்தப் பிரச்னையைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அப்போது இந்தியப் பிரதிநிதிகளுக்குப் பணி செய்யும் சந்தர்ப்பம் ஏற்படும்!

புதுப் போப்பாண்டவரும் பெருமதிப்புக்குரிய முறையில் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். போப் பயஸ் அவர்கள் தம் வாழ்நாளில் செய்து வந்த பணியை நிறுத்தாமல் அவருடைய ஸ்தானத்துக்கு வந்திருக்கும் மகானும் தக்க சமயத்தில் அணுகுண்டு விஷயத்தில் அறிக்கை வெளியிட்டிருப்பது அனைவரும் போற்றத் தக்கது.

புதுக்கமிட்டிக்கு யோசனை

நிலப் பிரச்னையைப் பற்றி ஆராய்ந்து ஒரு புதுக்கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள் அல்லவா? அது நல்ல முறையில் பிரச்னையை ஆராயவேண்டும் என்பது நமது கோரிக்கை.

கிராமங்களில் வாழ்ந்து வரும் ஏழை விவசாயிகள், கடைத்தேறுவதற்கு ஒரே ஒரு வழி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற பலவேறு வகை வகுப்பினரும் ஒத்துழைப்பதுதான். அவர்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களை நிறைவேற்றித் தரவேண்டுமே யொழிய, அவர்கள் நன்மை அவர்களுக்குத் தெரியாது என்று வைத்துக்கொண்டு சர்க்கார் பிரவேசித்து, 'இவனுக்கு இவ்வளவு பங்கு; அவனுக்கு அவ்வளவு பங்கு' என்று சட்டங்கள் செய்யலாகாது.

முன்னொரு காலத்தில் ஜமீன்தார்களும் மிராசுதார்களும் அக்கிரமங்கள் செய்து வந்தார்கள் என்பதை வைத்துக் கொண்டு இப்போதும் சட்டங்கள் செய்வது தவறு. எல்லா வகுப்பினரும் இப்பொழுது கண் விழித்திருக்கிறார்கள். அவரவர்கள் தங்களுக்குள் சுதந்திரமாக ஒப்பந்தங்கள் செய்துகொள்வார்கள். வாழ்க்கைக்கு முக்கியமாக வேண்டிய பொருள் உணவு. அதை உண்டாக்காமல் யாரும் சும்மா கிடக்க மாட்டார்கள். புதுச் சட்ட முறைகளைச் சர்க்கார் நிறுத்திக் கொண்டால் உணவு தானாகப் பெருகும். சர்க்காருடைய கடமை மக்களுக்குக் கிடைக்காத எரு, விதை முதலிய பண்டங்களை நியாய விலைக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டியது. போக்குவரவு சௌகரியங்களைச் செய்து தரவேண்டும். விவசாயிகளுக்கும் கிராமவாசிகளுக்கும் வேண்டிய ஆலை உற்பத்திப் பண்டங்களின் விலை விஷம்போல் ஏறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆலையில் வேலை செய்யும் தொழிலாளிகளை இளையதாரமாகப் பாவிக்காமல், விவசாயிகளையும் ஆலைத் தொழிலாளிகளையும் சமமாகப் பாவிக்க வேண்டும். வோட்டு வேட்டையை முற்றிலும் மறந்து விட வேண்டும்.

பாகிஸ்தானின் பயமுறுத்தல்

பாகிஸ்தான் பிரதம மந்திரியாக இருந்த நூன் அவர்கள் இந்தியாவுடன் நேசத்தை வளர்க்கத் தில்லிக்கு வந்து பிரதமர் நேருவுடன் பேசி விட்டுத் திரும்பினார். திரும்பினவுடனே ஜனாதிபதி மிர்ஸா அவரைப் பிரதமர் பதவியிலிருந்து விலக்கி விட்டார். பாகிஸ்தான் அரசியல் நிர்ணயச் சட்டத்தையும் கிழித்தெறிந்தார். 'ராணுவ ஆட்சி' பிரகடனம் செய்தபோது, இந்தியாவுடன் நேசப்பான்மை வளர்த்துக் கொள்ளப் பிரியப்படுகிறது பாகிஸ்தான் என்று தொனிக்கும்படி அறிக்கை விட்டார்!

இப்பொழுது ஜனாதிபதி மிர்ஸாவே தூக்கி எறியப்பட்டார். ராணுவத் தளபதி அயூப் கான் பூரண அதிகாரம் ஏற்றுக் கொண்டு விட்டார். அவரே ஜனாதிபதி; அவரே பிரதம மந்திரி. அவரே எல்லாம்!

இப்போது காஷ்மீர் பிரச்னை விஷயமாக இந்தியாவைப் பயமுறுத்தும் வகையில் பேசியிருக்கிறார். இந்தப் பிரச்னை அவருக்குப் பிடித்த வகையில் தீரவில்லையென்றால், இந்தியாவின் மீது போர் தொடுக்கவும் தயார் என்கிறார்.

தம்மை ஹிட்லராகவே நினைத்துக் கொண்டிருக்கிறார் போலும். முஸ்லிம் பொதுஜனங்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக இந்தியாவின் மீதுள்ள வெறுப்பைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார். இந்தப் பிரசாரத்தினால் மக்களுடைய ஆதரவைத் திரட்டப் பார்க்கிறார்.

நமது பிரதம மந்திரியும் பாகிஸ்தான் புது ராணுவ ஜனாதிபதியின் இந்தப் போக்கைக் கண்டு தம்முடைய அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார். பாகிஸ்தானில் நிகழும் நடவடிக்கைகள் நம்மை நிம்மதியாக இருக்க விடவில்லை என்கிறார்.

ஹிட்லருக்கு ஏற்பட்ட முடிவு ஹிட்லரைப் பின்பற்றப் பார்க்கும் மற்ற உன்மத்தர்

பாகிஸ்தானின் கதை!


ஜனநாயகம் தூக்கிலிடப் பட்டது!
ஜனநாயகம்
அயூப்கான்
பத்திரிகை சுதந்திரம் பறிக்கப் பட்டது!
பாகிஸ்தானிலுள்ள நல்லவர்கள் சிறையில் வைக்கப் பட்டனர்.
ஜனாதிபதி மிர்ஸா தூக்கி எறியப் பட்டார்!
மிர்ஸா
ராணுவ ஆட்சி
விரோத உணர்ச்சி விருத்தி செய்யப் பட்டது.
இந்திய விரோத உணர்ச்சி
இவ்வளவிருந்தும் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அமெரிக்காவும் பாகிஸ்தானும் நேசமாக இருக்கின்றன!
அமெரிக்கா

களுக்கும் ஏற்படுவது நிச்சயம். ஜெர்மனி தேசத்தை ஹிட்லர் பாழ்படுத்தினார். அந்த மக்களுக்குள்ள தீர வீரத்தினால் மறுபடியும் உயிர் பெற்று நிற்கிறார்கள். பாகிஸ்தான் ஒரு தடவை பாழ்பட்டால் அவ்வாறு அங்கேயும் நடக்குமா? ஜெர்மன் மக்களுக்கு இருந்து வந்த சக்தி பாகிஸ்தான் மக்களுக்கு உண்டா? அயூபின் பேச்சைக் கேட்டு இந்தியாவின் பேரில் போர் நடத்தினால் சர்வ நாசம் என்பது நிச்சயம்.

பாகிஸ்தானின் ராணுவப் படைபலத்தைப் பெருக்க அமெரிக்கா கோடிக்கணக்கில் செலவு செய்திருக்கிறது.

பாகிஸ்தானின் இந்த ராணுவ பலத்தைக் கண்டு அஞ்சி இந்தியா தனது வருமானத்தில் கிட்டத்தட்ட பாதியளவு ராணுவத்துக்குச் செலவழித்து வருகிறது. பிறகு தனது பொருளாதாரத் திட்டங்களுக்குப் பணமில்லையே என்று அமெரிக்காவிடம் கடன் கேட்கிறது. கேட்டுச் சமீபத்தில்தான் பல கோடி ரூபாய்கள் கடன் பெற்றிருக்கிறது.

இந்தச் சமயத்தில் பாகிஸ்தானிலிருந்து கிளம்பும் இந்தப் போர்க் குரல் நமது அடுத்த வருஷப் பட்ஜெட்டில் இன்னும் அதிகப்படி ராணுவத்துக்கு ஒதுக்கும்படி செய்யலாம். பிறகு நமது திட்டங்களை நிறைவேற்ற மீண்டும் அமெரிக்காவினிடம் பெருமளவு புதுக் கடன் வாங்கும்படி நேரிடலாம்.

ஆகவே, பாகிஸ்தானும் இந்தியாவும் இரண்டுமே அமெரிக்காவின் புல்லுருவி தாசர்களாகப் போகும். அதாவது பிரிட்டிஷாரிடமிருந்து பெற்ற சுதந்திரத்தை வீணாக்கியதாகும். இரு நாடுகளும் நாட்டின் அரசியல் நிலைமையை மறந்து விட்டாலும் வறுமையில் ஆழ்ந்து உழல வேண்டியதாகும்.

தேன் மணக்கும் தீபாவளி மலர்

தீபாவளித் திருநாள் வருவதற்குச் சில நாட்கள் இருக்கும்போதே அந்தச் சிறுவன் மத்தாப்பும், வாணங்களும், வெடிகளும் கொளுத்த ஆரம்பித்துவிட்டான். கண்களிலே அன்பு பொங்க ஒளி வீசும் அந்த மத்தாப்பைக் கண் கொட்டாமல் பார்க்கிறான். அவனுடைய அக்காள் தலைதீபாவளியை உல்லாசமாகக் கொண்டாட நாளைக்கு வரப்போகும் தன் கணவனைப் பற்றி நினைக்கிறாளா? கங்கா ஸ்நானத்தை முடித்துக் கொண்டு புத்தாடை சரசரக்க வெள்ளித் தட்டில் தின்பண்டங்களை ஏந்தி ஆசையுடன் அன்பரைப் பார்க்கப் போகும் இன்பக் காட்சியைப் பார்க்கிறாளா? நமக்கு எப்படித் தெரியும்?

ஓவியர் லதா தீட்டியிருக்கும் இவ்வார அட்டைப் படம் நமக்குக் கல்கி நேயர்கள் குதூகலமாகக் கொண்டாடப்போகும் தீபாவளித் திருநாளை நினைவூட்டுகிறது. தீபாவளி என்றதும் கூடவே கல்கி தீபாவளி மலரும் ஞாபகம் வராமல் இருக்குமா, என்ன?

இந்த வருஷம் தீபாவளி மலரைப் பார்த்து விட்டு "ஆகா! இவ்வளவு அழகான மலர் எப்பொழுதுமே வெளியிடவில்லை" என்றுதான் நேயர்கள் சொல்லப் போகிறார்கள்.

முக்கியமாக இவ்வருஷ மலர் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகளின் ஸ்ரீமுகம் பெற்றுத் திகழ்கிறது.

கிருஷ்ண தேவராயர் காலத்தில் விஜயநகர சாம்ராஜ்யம் கலைகளிலும் பண்பாட்டிலும் மகோன்னத நிலையை அடைந்திருந்தது. அதற்குச் சான்றாக, ஹம்பியில் கிடக்கும் பாழடைந்த கட்டடங்களும், கோயில்களும், சிற்பங்களும் விளங்குகின்றன என்று சொல்வார்கள். கலையில் ஒரு சிறிது ஆர்வமுள்ளவர்களும் ஹம்பிக்குச் சென்று அக்கலைக் கூடத்தின் சிற்ப அழகுகளைக் கண்டு ஒரே சமயத்தில் வியப்பும் துக்கமும் அடையாமல் இருக்க மாட்டார்கள். ஆனால் நமது ஓவியர் மணியம், நமக்கு ஒரே வியப்பும் இன்பமும் மட்டுமே நல்கியிருக்கிறார். அதற்குக் காரணம் பாழ்பட்டு நிற்கும் சிற்பங்களையும் மாட மாளிகைகளையும் தமது கலைத்திறனால் செப்பனிட்டு முழுமையாக்கித் தந்திருப்பதுதான். அவற்றைப் பார்க்கும்போது விஜயநகர சாம்ராஜ்யம் மகோன்னத நிலையில் இருந்த காலத்துக்கே நாம் போய்விடுகிறோம்.

ஓவியர் ராஜம் தமக்கே உரிய தனிப் பாணியில் புக்கர் பிரானின் வாழ்க்கைக் காட்சிகளை அற்புதமாகத் தீட்டியிருக்கிறார்.

பாண்டிய மன்னன் சமணர்களின் பிடியில் சிக்கி மதுரை சீரழிந்த சமயத்தில் மங்கையர்க்கரசி ஞானசம்பந்தரைத் தருவித்து அவரது அருளால் சைவம் தழைக்கச் செய்த கதையை ஓவியர் வினு அழகாக வரைந்திருக்கிறார்.

சூடிக் கொடுத்த சுடர்க் கொடி ஆண்டாளின் வாழ்க்கைச் சித்திரத்தை ஓவியர் லதாவின் கைவண்ணத்தில் காண்கிறோம்

இன்னும் கனுதேசாய், சாமா, விஜயா, ரத்தினம், உமாபதி கோபா, ஜமால், உபி, ரெலாக், சுதர்சன், மணி ஆகியோரும் தங்கள் கைத்திறனைக் காட்டியிருக்கிறார்கள்.

ராஜாஜி அவர்களுடைய 'மோர்த்துளி' மலருக்குத் தனிச் சிறப்பளிக்கிறது. திரு கு. சந்தானத்தின் கதை உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்துள்ளது. பேராசிரியர் அ. சீநிவாசராகவனின் நாடகம் இன்று சமூகத்தில் நிலவும் ஒரு முக்கிய பிரச்னையை அடிப்படையாகக் கொண்டுள்ள அற்புதப்படைப்பு. திரு பாஸ்கரத் தொண்டைமானின் கட்டுரையைப் படித்து உருகாதவர் இருக்கமாட்டார்கள். திரு ம. பொ. சிவஞானம் தீபாவளித் திருநாளைப் பற்றியே அருமையான கட்டுரை எழுதியிருக்கிறார்கள்.

இன்னும் தனிநாயக அடிகள், பௌராணிகர், டி. கே. ஷண்முகம், அநுத்தமா, தூரன் அகிலன், நா. பார்த்தசாரதி, ஆனந்தி ஆகிய பலரும் விஷய தானம் செய்திருக்கிறார்கள்.

கல்கி தீபாவளி மலர் தமிழ்கூறும் நல்லுலகம் முழுதும் தேன் மணம் பரப்பும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



அருள் வாக்கு

தீபாவளியைப் பகவத் கீதைக்குத் தம்பி என்று சொல்லலாம். ஞான நூல்களில் எப்படிப் பகவத்கீதை எல்லாவற்றையும் விடத் தனிச் சிறப்பு அடைந்திருக்கிறதோ அதே மாதிரி பண்டிகைகளில் தீபாவளி சிறந்தது. இந்த ஒரு பண்டிகை மட்டும்தான் நம் தேசம் முழுவதும் எல்லா ஜாதிக்காரர்களாலும் எல்லா மதத்தினராலும் கொண்டாடப்படுகிறது. பிற தேசத்திலிருந்து வந்த மக்களைத் தவிர, நம் தேசத்திலேயே பிறந்த புத்த ஜைன மதஸ்தர்கள் கூட ராமேசுவரம் முதல் இமாசலம் வரையில் கொண்டாடுகிறார்கள்.

ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு புராணம் இருக்கிறது. ஐப்பசி மாதத்துக்கு துலாமாச மாஹாத்மியம் என்று முப்பது அத்தியாயங்களைக் கொண்ட ஒரு புராணம் இருக்கிறது. அதில் தீபாவளியைப் பற்றிச் சொல்லும் அத்தியாயத்தில் "தைலே லக்ஷ்மீ: ஜலே கங்கா" என்று வருகிறது. கங்கை இல்லாத ஊர்களில் எந்த இடத்தில் அன்றைக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்தாலும் கங்கா ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைக்கிறது என்று புராணம் சொல்லுகிறது. எல்லா ஆசிரமக்காரர்களும், வைராக்கிய சீலர்களும் கூட, தீபாவளியன்று ஸ்நானம் செய்ய வேண்டுமென்று அதில் சொல்லப்பட்டுள்ளது.

அப்யங்கனம் (எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல்) வபனம் (க்ஷவரம் செய்து கொள்ளுதல்) எல்லாம் இன்னின்ன காலங்களில்தான் செய்து கொள்ளலாம் என்று சாஸ்திரம் இருக்கிறது. அப்யங்கனம் உதய காலத்தில் (சூரிய உதயத்திலிருந்து 8-24 வரையில்) பண்ணிக் கொள்ளக் கூடாது. உஷக் காலத்தில் (சூரியோதயத்துக்கு முன்னால் 2 மணி 24 நிமிஷம் வரையில்) எண்ணெய் தேய்த்துக் கொண்டால் மது உண்ட பாவம் என்று தோஷம் சொல்லியிருக்கிறது. ஆனால் இதற்கு நேர் விபரீதமாகத் தீபாவளி அன்றைக்கு உஷக் காலத்திலேயே எண்ணெய் தேய்த்துக் கொண்டு விடவேண்டும். யாராக இருந்தாலும் தேய்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

இப்படிச் செய்ய வேண்டும் என்று நரகாசுரனின் தாயார் பிரார்த்தித்துக் கொண்டாள். இதை விட உயர்ந்த மனப்பான்மை இருக்க முடியுமா? யாராவது இறந்தால் எண்ணெய் தேய்த்துக் கொள்வோமா? புது ஆடைகளை உடுத்திக் கொள்வோமா? விருந்துச் சாப்பாடு சாப்பிட மனம் வருமா? தன் பிள்ளையைப் பறி கொடுத்து விட்டு, "பகவானே. எனக்கு இருக்கிற துக்கம் இருக்கட்டும். லோகம் துக்கப்படக் கூடாது" என்று இவ்வாறு அவள் பிரார்த்தித்துக் கொண்டாள்.

ரணகளத்தில் பகவான் கீதை உபதேசம் பண்ணினாற் போல, பிள்ளையைப் பறி கொடுத்து விட்டுப் புத்திர சோகத்தினால் அழும்போது அவள் லோக க்ஷேமத்தை வேண்டிக் கொள்ளுகிறாள். இது நரகாசுரன் தாயின் உயர்ந்த மனோபாவத்தைக் காட்டுகிறது. அதனால்தான் தீபாவளியைக் கொண்டாடுகிறோம். மற்றப் பண்டிகைகளை விட இதற்கு அதிகக் கியாதி.

ஏதோ புராணக் கதை இது என்று தள்ளிவிடாமல் தலைமுறை தலைமுறையாக இதை ரக்ஷித்துக் கொண்டு இந்தப் பண்டிகையையும் நாம் கொண்டாடி வருகிறோம். இதனால் நமக்குக் கிடைக்கும் ஆத்ம லாபம் என்ன?

மனிதர்களாகப் பிறந்து விட்டதனாலேயே பல துன்பங்கள் நமக்கு ஏற்படத்தான் செய்யும். நாம் துன்பப்படுகிறோம் என்பதற்காக மற்றவர்களும் துன்பப் படட்டும், லோகமும் துன்பப்படட்டும் என்ற நினைவு நமக்கு வரக்கூடாது. நாம் துன்பப்பட்டாலும் லோகம் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதுதான் இந்தத் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதன் பயன். நாம் அறிந்து தெரிந்து கொள்ள வேண்டிய நீதி. இவ்வளவு காலமாக இது சம்பந்தப்பட்ட புராணக் கதையையும் இந்தப் பண்டிகையையும் காப்பாற்றி வருவதற்குக் காரணம் இதுதான். "நாம் கஷ்டப்பட்டாலும் லோகம் க்ஷேமமாக இருக்க நம்மால் ஏதாவது செய்ய முடியுமென்றால் அதை உடனே செய்ய வேண்டும். நம்மைக் காட்டிலும் லோக க்ஷேமந்தான் பெரியது" என்ற ஞானம் இன்றைக்கு நமக்கு உண்டாகட்டும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ◇ காஞ்சிகாமகோடி பீடம்

தமிழரிடையே ஒற்றுமை வேண்டும்

ரஜனி

கொழும்பு, நவம்பர், 1௨

இலங்கை ஜனநாயக காங்கிரஸின் தலைவரான திரு. எஸ். தொண்டைமான் இவ்வாரம் பண்டாரநாயகா அரசாங்கத்துக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையைப் பத்திரிகைகள் மூலம் விடுவித்திருக்கிறார். நாடற்றவர்களாக்கப்பட்டிருக்கும் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்கள் பற்றிப் பொறுப்பற்ற முறையில் வர்த்தக மந்திரியும் வேறு சில மந்திரிகளும் அடிக்கடி பேசி வருவதைத் தொண்டைமான் சுட்டிக்காட்டி, எளிய தோட்டத் தொழிலாளரின் பொறுமை அளவு மீறிச் சோதிக்கப்படுகிறதென்றும், அவர்களது பிரஜாவுரிமைப் பிரச்னையை நீதி நியாயமற்ற முறையில் தீர்க்க முயற்சிசெய்தால் அதன் விளைவு அதி பயங்கரமானதாக இருக்கும் என்றும் கூறியிருக்கிறார். இந்திய வம்சாவளியினர்களை இந்தியாவுக்கு விரட்டி விடலாமென நினைப்பது பகற்கனவு என்றும் முந்திய அரசாங்கத்தின் பிற்போக்குக் கொள்கைகளைப் பலமாகக் கண்டிக்கும் பண்டாரநாயகா அரசாங்கம், அவ்விதம் பிற்போக்கு நடவடிக்கைகளில் ஒன்றான பிரஜாவுரிமைச் சட்டத்தை மட்டும் ஆதரித்து வருவது ஆச்சரியமானது என்றும், ஏற்கனவே குமுறிக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளரை ஆத்திரமூட்டுவது நாட்டுக்கே ஆபத்தானது என்றும் திரு தொண்டைமான் தெரிவித்திருக்கிறார். இதற்கிடையில் இந்திய துவேஷ வெறியாட்டத்தைக் கிளப்பிவிடக் கண்டிப் பகுதி பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் இப்போது மீண்டும் முயன்று வருகிறார்கள். ஸ்ரீலங்கையில் பொதுத் தேர்தல் என்றால் உடனே இந்தியத் துவேஷப் பேச்சுக்களில் இறங்குவதுதான் அரசியல்வாதிகளின் வழக்கம். மக்கள் கவனத்தைக் கவரக்கூடிய வேறு வேலைத் திட்டங்கள் இல்லாத இந்த ராஜ்யவாதிகள் இந்தியர்களை விரட்டி விடுவதாகச் சண்டமாருதப் பிரசங்கங்கள் செய்வதையே தேர்தல் பிரசாரமாகச் சென்ற பல ஆண்டுகளாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றல்ல, நேற்றல்ல சென்ற இருபது வருடங்களுக்கு அதிகமாக நடந்து வருவது இதுதான். இதற்குச் சென்ற பொதுத் தேர்தல் மட்டுமே ஒரு விதி விலக்காக இருந்தது. காரணம் மொழிப் பிரச்னை சென்ற தேர்தலில் முக்கியத்துவம் பெற்றிருந்ததேயாகும். மொழிப் பிரச்னையைக் கிளப்பி விட்டதில் ஏராளமான மக்களின் விழிகள் பெயர்ந்து அபாயகரமான நிலைமை உண்டாகி விட்டதால் அடுத்த தேர்தலில் முன் போல மீண்டும் இந்தியப் பிரச்னையை முதலிடம் கொடுத்துப் பிரசாரம் செய்யச் சில அரசியல்வாதிகள் திட்டமிட்டு வருகிறார்கள். இதற்காகக் கண்டித் தொகுதி எம். பி.க்கள் விரைவில் ஒரு இரகசியக் கூட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் இந்தியர்களுக்கு அநீதி செய்ய முற்பட்டால் வகுப்புக் கலகத்தின் போது ஏற்பட்டதைவிடப் பன்மடங்கு அபாயகரமான நிலைமை உருவாகும் என்று திரு தொண்டைமான் சரியான சமயத்தில் எச்சரித்திருப்பது வரவேற்கத் தகுந்தது.

* * *

தமிழ் மக்களுக்குப் பெரும் சோதனைகள் ஏற்பட்டு வரும் இந்த நெருக்கடியான சமயத்தில் தமிழ்த் தலைவர்களிடையிலும் மித்ரத் துரோகம் செய்து பிரிவினைகளை அதிகரிக்கச் சில நாச சக்திகள் தீவிரமாக முயற்சி செய்து வருகின்றன. பட்டிருப்புத் தொகுதி எம். பி. திரு எதிர்மன்னசிங்கம், மட்டக்களப்பு எம். பி. திரு ராஜதுரை ஆகிய இரு தமிழ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களிடையில் இப்போது நடந்து வரும் பயனற்ற தற்கொலைக்கு ஒப்பான சர்ச்சை ஒரு உதாரணமாகும். திரு ராஜதுரையின் தமிழரசுக் கட்சியைத் தாறுமாறாகக் கண்டித்துத் திரு எதிர்மன்னசிங்கம் அறிக்கைகளை விடுத்து வருவதும், பொதுத் தேர்தலில் போட்டியிட்டுப் பலப் பரிசோதனை செய்ய முன்வருமாறு திரு ராஜதுரை திரு எதிர்மன்னசிங்கத்துக்குச் சவால் விட்டிருப்பதும், பிறர் பார்த்துப் பரிகசிக்க இடமளிப்பதாயும் தமிழ் மக்களின் ஒற்றுமையின்மையை அம்பலப்படுத்துவதாயும் இருக்கின்றன. தமிழன் வீடு தீப்பிடித்து எரியும்போது தலைவர்கள் ஒற்றுமையும் கட்டுப்பாடுமின்றி நவக்கிரகம் போல் மூலைக்கு ஒருவராக வக்கரித்துக் கொண்டு நிற்பது தமிழ் மக்களின் சாபத்தீடுபோலிருக்கிறது. இலங்கைத் தமிழ் மக்களின் நீண்ட சரித்திரத்தில் இன்று ஏற்பட்டுள்ளதைப் போன்ற பேராபத்தான நிலைமை வேறு என்றுமே ஏற்பட்டிருந்ததில்லை. இலங்கையில் தமிழர்கள் வாழ்வதானால் நிரந்தர அடிமைகளாகத்தான் வாழவேண்டுமே தவிர அவர்களுக்கு எவ்விதமான உரிமைகளும் இருக்கக்கூடாதென்பதைச் சட்ட பூர்வமாகத் தீர்மானித்துவிடத் தீவிர முயற்சிகள் நடக்கின்றன. மானம், மரியாதையுடன் இங்கு வாழப் போகிறோமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்று எடுக்கும் நடவடிக்கை தமிழ்ச் சமூகத்தின் தலைவிதியை அடுத்த பல நூற்றாண்டுகளுக்கு நிர்ணயிக்கப் போகிறது. இம்மாதிரியான நெருக்கடியில் கூட அவர்கள் சொந்த ஆசாபாசங்களையும் அரசியல் ஆதிக்க எண்ணங்களையும் தலைமைப் பதவிப் போட்டிகளையும் விட்டு ஒன்றுபடவில்லையென்றால் அதற்கு மன்னிப்பே கிடையாது.

தமிழ் மக்களுக்கு யார் தலைமை வகிப்பது என்பது இன்றையப் பிரச்னையல்ல. ஒற்றுமையையே தமிழ் மக்கள் இன்று ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இந்த வகையில் அவசர நடவடிக்கை எடுப்பது தலைவர்களென்று சொல்லிக் கொள்ளுபவர்களின் முதல் கடமையும் முக்கிய கடமையும் ஆகுமென்பதை எவ்வளவு பலமாக வற்புறுத்தினாலும் மிகையாகாது.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை

ஓ. கே. வனஸ்பதி

தயாரிப்பாளர்கள்

உங்களுக்கு **ரூ. 25,000/-** மதிப்புள்ள

இலவச வெகுமதிகளை

வழங்குகின்றனர்

இதற்குப் பிரவேசக்கட்டணமில்லை... சிக்கலான நிபந்தனைகளுமில்லை...
மிகவும் சுலபமான முறை... இன்றே உங்கள் அதிருஷ்ட தினம்!

இந்த வெகுமதிகள் அனைத்தையும் ஒருமுறை கவனியுங்கள்!

- முச்சக்கர சைகிள்கள்
- பிரெஷர் குக்கர்கள்
- ரேடியோக்கள்
- மின்சார இஸ்திரிப்பெட்டிகள்
- தேக்கோப்பை செட்டுகள்
- மின்சார விசிறிகள்
- தையல் மெஷின்கள்
- கெரோஸின் ஸ்டவ்கள்

குடும்ப மாதர்களுக்கு ஒரு அரிய செய்தி! ஓ. கே. வனஸ்பதி தயாரிப்பாளர்கள் ஓ. கே. வனஸ்பதி உபயோகிக்கும் அதிருஷ்டசாலிகளுக்கு அடுத்த ஆறுமாத காலத்திற்கு [illegible] ஒரு வெகுமதியளிக்க ஏற்பாட்டுள்ளனர். இதற்கு பிரவேசக்கட்டணமில்லை, சிக்கலான நிபந்தனைகளுமில்லை. வாடிக்கையான வியாபாரியிடம் சென்று ஒரு டின் ஓ. கே. வனஸ்பதி வாங்குங்கள். உங்களது அதிருஷ்ட தினத்தில் உள்ளேயிருக்கும் மெல்லிய தகர மூடியைத் திறந்துபார்த்தால் பரிசு டோக்கன் ஒன்றைக் காண்பீர்கள்




இலவச வெகுமதியைப் பெறுவது எங்ஙனம்?

உங்களுக்கு கிடைத்த பரிசு டோக்கனை மானேஜர், தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், முதல் லைன் பீச், சென்னை விலாசத்திற்கோ அல்லது அவரது பிரதிநிதியிடமோ அனுப்பி, அல்லது நீங்கள் ஓ. கே. வனஸ்பதி டின் வாங்கிய வியாபாரியிடமோ கொடுத்து வெகுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளும் பெறலாம். பரிசு டோக்கன்கள் கீழ்க்குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன.-

10 பவுண்ட் டின்களில் — ரேடியோக்கள் அல்லது தையல் மெஷின்களுக்கு
5 பவுண்ட் டின்களில் — பிரெஷர் குக்கர்கள் அல்லது மின்சார விசிறிகளுக்கு
1 & 2 பவு. டின்களில் — தேக்கோப்பை செட்டுகள், முச்சக்கர சைக்கிள்கள், மின்சார இஸ்திரிப் பெட்டிகள் அல்லது கெரோஸின் ஸ்டவ்களுக்கு

எல்லா விஷயங்களிலும் மானேஜரின் தீர்மானமே முடிவானது. பரிசு டோக்கன்கள் உங்களிடமோ, தபாலிலோ காணாமற்போனால் நாங்கள் பொறுப்பாளியாக மாட்டோம். இந்த இலவச வெகுமதித் திட்டம் சம்பந்தமாக எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

இன்றே வாங்குங்கள் - இன்றே உங்கள் அதிருஷ்ட தினம்.
ஓ. கே. வனஸ்பதியில் செய்த சமையல் ருசியும், மணமும் தருகிறது.



55

**தினற்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.**

புலால் உணவுவேண்டுவார் இல்லையானால், ஜீவனத்துக்காக யாரும் கசாப்புத் தொழில் செய்ய மாட்டார்கள். விலைக்கு இறைச்சி விற்கும் தொழில் இராது. உணவுக்கென்று பிராணிகளைக் கொல்ல மாட்டார்கள்.

இறைச்சி விற்பது ஜீவனத்துக்கு ஒரு வழி. அப்படி விற்கப்படும் இறைச்சியை வாங்கிப் புசித்தலில் பாவம் இல்லை என்றும், புலால் உண்பவர்களும் மற்றவர்களைப்போல் இரக்கமுள்ளவர்களே என்றும், வாதிப்பவர்களுக்கு இந்தக் குறள் பதில் சொல்லுகிறது. மற்றொருவனைக் கொல்லச் செய்து வருகிறான் புலால் உண்பவன். தானே கொல்வது போலேதான் அதுவும். ஆகையினால் 'தினற் பொருட்டு கொல்லாது உலகு எனின்' என்றார். இறைச்சி விற்பவர்மேல் பாவத்தைப் போட்டுச் சமாதானப்படுத்திக் கொள்ளலாகாது.

புலால் உண்பவர்கள் கொல்லாமை என்கிற தருமத்தையே கொலை செய்கிறார்கள். உள்ளத்தில் இரக்கம் வைத்திருப்பவர்கள் இது செய்தல் தகாது. அவசியமில்லாமல், அதாவது வேறு உணவு தெய்வம் அமைத்திருக்கப் புலாலை விரும்பித் தருமத்தைப் பாழாக்குகிறார்கள். என்ன மடமை!

**அருள்அல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருள்அல்லது அவ்வூன் தினல்.**

கொல்லாமை விரதத்தை மதிப்பதாகவே சொல்லிக் கொண்டு சில கூட்டத்தார் புலால் உணவு கடையில் வாங்கி வாழ்க்கை நடத்துகிறார்கள். அத்தகையினர் தருமத்தைக் கொல்லுகின்றனர் என்கிறார் முனிவர். கடையில் வாங்கிப் புலால் உண்பவர்கள் நடத்தும் வாழ்க்கையானது அருள் நெறிக்கு நேர் விரோதம். அது பொருளற்ற நடவடிக்கை.

உள்ளத்தில் இரக்கம் வேண்டும். அருள்நெறி மிகச் சிறந்த நெறி. ஆயினும் மக்களின் உணவு முறைப் பழக்கங்களுக்கும் தருமத்துக்கும் சம்பந்தமில்லை என்று சில கூட்டத்தார் வாதிக்கின்றனர். அதற்காக முனிவர் இந்தப்படி ஒரு குறளை அமைத்தார்.

“புலால் வாங்கித் தின்கிறாயா? புலால் என்பது என்ன? உயிருள்ள ஒரு ஜந்துவினுடைய உடலில் உண்டான ஒரு ரணம் — புண். அதை வாங்கி வாய்க்கு ருசியாக இருக்கிறது என்று உண்கிறாயே? வேண்டாம்!” என்கிறார். “யாராவது புண்ணைத் தின்பார்களா? ஊன் உணவு மற்றொரு பிராணியின் புண்தானே?” என்கிறார்.

உண்ணுமை வேண்டும்
புலாஅல் பிறிதொன்றன்
புண்அது உணர்வார்ப்
பெறின்

வெறுப்புக்குப் பொருளாகிய, பிராணி உடலில் தோன்றும் ஒரு புண்ணை, உணர்ச்சி படைத்த மனிதன் வெட்டித் தின்பது என்ன ஆச்சரியம்! உண்மை உணர்ச்சியுள்ளவன் புலாலை மிக வெறுப்பான்.

• • •

அவிசொரிந்து ஆயிரம்
வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணுமை
நன்று.

வேள்விகள் ஆயிரம் செய்து என்ன பயன்? ஒரு உயிரைக் கொன்று அதன் உடலைத் தின்னுமல் இருந்தால் அதுவே சிறந்த வேள்வியாகும்.

இந்தக் குறளில் ஜீவஹிம்சை கலந்த யாகங்களை வேண்டாம் என்று முனிவர் உபதேசிக்கிருர். உயிருள்ள பிராணியைப் பலியாகக் கொடுப்பதனல் சில பயன்கள் பெறுவீர்கள் என்று சில சாஸ்திரங்களில் சொல்லியிருந்த போதிலும், புலால் உண்ணுமை விரதத்தினுல் அந்தப் பயன்களை விட மேலான பயனை அடைவாய் என்கிருர்.

மகாபாரதம் அசுவமேத பர்வம் 94-95 அத்தியாயங்களில் இதைப் பற்றிய உபதேசத்தைப் பார்க்கலாம். அது குருனாசிரியருடைய உபதேசத்தை ஊர்ஜிதப்படுத்தும்.

• • •

புலால் உண்ணுமல் அருள் நெறியில் நிற்பவனைப் பிராணிகள் எல்லாம் தெய்வமாகக் கருதித் தொழும். "இவன் நம்மைக் காப்பாற்றுகிறவன்" என்று உயிர்கள் தொழும். வதைபடும் ஊமைப் பிராணிகள் கைகூப்பித் தொழும் காட்சியை முனிவர் மனத்தில் காண்கிருர். நீ ஒரு தெய்வமே ஆவாய் என்று எடுத்துக் காட்டி இறைஞ்சுகிருர்

கொல்லான் புலாலை
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும்
தொழும்.

அறிவிப்பு

மருந்துச் சரக்குகளின் விலை ஏற்றம் காரணமாகவும் உற்பத்திச் செலவு கூடி விட்டதாலும், சரக்குகள் கிடைப்பதிலேயே அதிக சிரமம் இருப்பதாலும் **ஜம்பியின் லிவர்க்யூர்** விலையைப் பழைய நிலையிலேயே வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை. எங்கள் வாடிக்கைக்காரர்களின் சௌகரியத்தை உத்தேசித்து இதுவரை மிகுந்த சிரமத்துடன் அதே விலைக்குக் கொடுத்து வந்தோம்

இனியும் சாத்தியமில்லையாதலால் 1-11-58லிருந்து மருந்தின் விலையைச் சிறிது உயர்த்தவேண்டியிருக்கிறது. உயர்த்தப்பட்ட விலை விவரங்கள் :

ஜம்பியின் **'லிவர்க்யூர்'** சிம்பிள் மாத்திரைகள் **ரூ. 4/–**
(15 நாட்களுக்கு)


ஜம்பியின் **'லிவர்க்யூர்'** காம்ப்லக்ஸ் மாத்திரைகள் **ரூ. 8/–**
(15 நாட்களுக்கு)

ஜம்பி வெங்கடரமணய்யா அண்ட் சன்ஸ்

தலைமை ஆபீஸ் : **சென்னை – 4**

டில்லி, கல்கத்தா, பாட்னா, பம்பாய்–4, லக்னோ, நாக்பூர், பெங்களூர் சிடி. திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், விஜயவாடா – 2 & விஜயநகரம் சிடி.

அனைவருக்கும் எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!





‘ஸிட்ரா’ ஆராய்ச்சிக் கழகம்

எம். எஸ். சிவஸ்வாமி


தென்னிந்தியாவின் லங்காஷயர் என்று பெருமை கொண்டது கோவைமா நகரம். இந்த ஊர்ப் பெயரைச் சொன்னதும் அங்கேயுள்ள பஞ்சாலைகள்தான் கவனத்துக்கு வரும். அந்த நகரம் பொருட்செல்வத்தில் வளம் பெற்றிருப்பதற்கு அங்குள்ளதும், அதன் சுற்றுப்புறங்களிலுள்ளதுமான பஞ்சாலைகளும், நூற்பு ஆலைகளும், நெசவு ஆலைகளுமே காரணம். அங்கே சுமார் 62க்கும் மேற்பட்ட ஆலைகள் உள்ளன. சுமார் எட்டு ஆலைகளே ஆடைகள் நெய்யும் வசதியுள்ளவை. மற்றவை யெல்லாம் நூல் நூற்கும் ஆலைகள். மோட்டா நூல்கள் எனப்படும் 10-ம் நெம்பரிலிருந்து 100-ம் நெம்பர் மெல்லிய நூல்வரையில் இங்கே நூற்கப்பட்டுக் கைத்தறிகளுக்கு அளிக்கப்படுகின்றன. நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும் கோவை ஆலைகளுக்கும் இந்த விஷயத்தில் தொடர்பு உண்டு.

சீரும் செழிப்புமாகக் கொழித்த இந்த ஆலைத் தொழிலுக்குச் சமீபத்தில் நலிவு ஏற்பட்டுள்ளது. சரக்கு தேங்கி விட்டது. நூற் கட்டுகள் செலவாகவில்லை. வியாபாரம் மந்தமடைந்து விட்டது. பணம் முடங்கி விட்டது. நஷ்டத்தில் ஆலைகள் நடக்கின்றன. எனவே பரிகாரம் தேடவேண்டியது அவசியமாகி விட்டது.

பரிகாரங்கள் பலவகை. உற்பத்தியாகும் சரக்கின் தரத்தை உயர்த்துவது ஒன்று. அடக்க விலையைக் குறைக்கப் பார்ப்பது மற்றொன்று; நிர்வாகத்தின் செலவில் சிக்கனம் செய்வது மேலும் ஒன்று; நிர்வாகத்தினருக்கும் தொழிலாளிகளுக்குமிடையே நல்லுறவை வளர்ப்பது ஒன்று; உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம் விலையைக் குறைப்பது ஒன்று. இப்படிப் பல வகை உண்டு. இவை யெல்லாவற்றுக்கும் விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சிகள் அடிப்படை. எந்த முன்னேற்றத்துக்கும் அத்துடன் சம்பந்தப்பட்ட முறைகளில் ஆராய்ச்சிகள் நடக்க வேண்டும். முன்னேற்றத்துக்கு வழி வகுத்துக் கொள்ள வேண்டும். இதைத் தொழிலதிபர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். அரசாங்கமும் நன்றாக உணர்ந்திருக்கிறது.


உடலுக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ, அப்படியே தொழில் வளர்ச்சிக்கு ஆராய்ச்சி முக்கியம். சதா முன்னேறிக் கொண்டே இருக்கும் இவ்வுலகில் பல துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படத்தான் வேண்டும். மாறுதல் நிலைகளுக்கேற்ப வழிகளையும், கொள்கைகளையும் தொழில்கள் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

எந்தெந்த வழிகளில் இம் மாற்றங்களைச் செய்யலாம், செய்யவேண்டும் என்ற ஆராய்ச்சியைத்தான் தென்னிந்திய நெசவு ஆராய்ச்சிக் கழகம் சில ஆண்டுகளாகச் செய்து வருகிறது. இந்தக் கழகம்தான் ‘ஸிட்ரா’ என்று சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. “யுனெஸ்கோ” “ஈகாபே” முதலிய ஐ. நா. ஸ்தாபனங்களின் நீளமான பெயர்களெல்லாம் உச்சரிப்புக்காகச் சுருங்கிவிட்டது போல் ‘ஸவுத் இந்தியன் டெக்ஸ்டைல் ரிஸர்ச் அஸோஸியேஷ’னும் அதன் முதல் எழுத்துக்களைக் கொண்டு ‘ஸிட்ரா’ (Sitra) ஆகிவிட்டது.



ஸிட்ரா டைரக்டர்
திரு கே. சீனிவாசன்

தென்னிந்தியாவில் நெசவு ஆலைகளின் அபிவிருத்திக்காகத் தோன்றிய இந்த ஸ்தாபனம் ஒரு கூட்டுமுயற்சியினால் தோன்றியது. அரசாங்கமும் தொழில் அதிபர்களும் இணைந்து உருவாக்கியது. காலஞ் சென்ற டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரின் முயற்சியால் 1951-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு 1948-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட செஸ் நிதி ஆராய்ச்சி வளர்ச்



'ஸிட்ரா' பரிசோதனைச்சாலையின் ஒரு பகுதி.
நூலின் குறுக்களவை அளக்கும் கருவி.

சிக்கும் பஞ்சு ஜவுளித் தொழில் ஏற்றுமதி அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்டது. இந்த நிதியை நிர்வகிக்கப் பஞ்சு ஜவுளி நிதிக் கமிட்டியை இந்திய சர்க்கார் அமைத்தனர். ஜவுளித் தொழில் பரவலாக இருப்பதாலும் இத் தொழில் உற்பத்தி செய்யும் பண்டங்கள் பலவகைப்பட்டதாக இருப்பதாலும், நிலைமைகள் பலதரப்பட்டவையாக இருப்பதாலும் ஒரு ஆராய்ச்சிக் கூடம் போதாது என்று, பம்பாய், அஹமதாபாத், கான்பூர், கோயமுத்தூர் முதலிய இடங்களில் தனித் தனி ஆராய்ச்சிக் கூடங்கள் அமைக்கச் சர்க்கார் முடிவு செய்தனர். இதன்படி அஹமதாபாத்தில் ஆராய்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுச் சுமார் எட்டு வருஷங்களாகச் செயல் புரிந்து வருகிறது. பம்பாயில் ஒன்று ஆரம்பித்துச் சுமார் இரண்டு வருஷங்களாக வேலை செய்கிறது. கோவையில் 'ஸிட்ரா' ஏழு வருஷங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டு, 34½ ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு இடத்தையும் வாங்கிக் கழகக் கட்டடத்துக்குப் பிரதமர் நேருவைக் கொண்டு 1955-ல் அஸ்திவாரக் கல்லும் நாட்டப்பட்டது. மூன்று வருஷங்களுக்குள் ரூ. 10 லட்சம் செலவில் நவீன முறையில் எழுப்பப்பட்ட உன்னதமான கட்டடம் முடிவு பெற்று ஆரம்ப விழாவும் சென்ற அக்டோபர் 13-ம் தேதி யன்று உப ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

கோவையிலிருந்து சென்னைக்கு வரும் நெடுஞ்சாலையில் கோவைக்குக் கிழக்கே விமான நிலையத்துக்குச் சமீபத்தில் அமையப்பெற்ற இந்த ஆராய்ச்சி நிலையம் பிரத்தியேகக் கவர்ச்சியுடன் கூடியது. 40,000 சதுர அடி பரப்புள்ள இந்த இரண்டு மாடிக் கட்டடம் மற்றக் கட்டடங்களைக் காட்டிலும் மாறுபட்ட தோற்றமுள்ளது. செங்குத்தாகவும் நெருக்கமாகவும் பலகைகள் அடுக்கி வைத்திருப்பது போல் தென்படும் தோற்றம் அழகுக்காக மட்டும் அமைந்ததல்ல. அவசியமானதும் கூட. அதனால் கட்டடத்துக்குள்ளே இயற்கையான குளுமைக் காற்று வீசுகிறது. வெப்பம் தெரியாது; ஜவுளி ஆராய்ச்சிக்கு இது முக்கியம். சுமார் ரூ. 15 லட்சம் மதிப்புள்ள சாதனங்கள் இக் கழகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. பிரதான ஆராய்ச்சிக்கூடத்தில்குளிர்ச்சி சாதனம் அமைக்கப் பட்டுள்ளது. ஆராய்ச்சியின் பல்வேறு பகுதிகளும், நூல் நிலையமும் கட்டடத்தில் ஒன்றன் பின் ஒன்றாக இருக்கின்றன. இதற்கு அடுத்தாற்போல் ஒரு குட்டிப் பஞ்சாலையே நிறுவப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிகள் நடத்துவதற்காகத்தான்.

ஆராய்ச்சிகள்தான் எத்தனை விதங்கள்! அதற்கேற்ற சாதனங்கள்தான்எத்தனைரகங்கள்!

தென்னிந்தியாவிலுள்ள ஆலைகளில் பெரும்பாலானவை கைத்தறிகளுக்கு நூல் விநியோகம் செய்யும் நூற்பு ஆலைகளாதலால் தற்போதைக்கு ஆராய்ச்சிகள் நூல் சம்பந்தமானது. நூல்கள் ஒரே சமானமாக இருக்கின்றனவா என்பதைப் பரிசோதிக்கிறது ஒரு ஆராய்ச்சிக் கருவி. பருமனும் மெல்லியதும் ஒரே நூலில் காணப்பட்டால் பஞ்சு சுத்தப்படுத்தியதில் தவறு என்று நிர்ணயம் செய்வதுடன், என்ன தவறு என்பதும் சொல்லப்படுகிறது. நூல்களின் முறுக்கை நிர்த்தாரணம் செய்கிறது மற்றொரு கருவி. பஞ்சின் இழைகளைப் பரிசோதிக்கிறது மேலும் ஒரு சாதனம். பஞ்சு சுத்தப்படுத்துவதிலும், கலப்படம் செய்வதிலும் அசுத்தப் பொருள்களை அப்புறப்படுத்துவதிலும் உள்ள குறைபாடுகளை அந்தந்த ஆலைகளிலிருந்து பஞ்சு 'சாம்பிள்'களை வாங்கி வந்து ஆராய்ந்து சொல்ல உதவுகிறது மற்றொரு யந்திர சாதனம். பஞ்சின் தராதரத்தை நிர்ணயம் செய்து தாரதம்யத்தை எடுத்துக் காட்ட மேலும் ஒரு சாதனம் உதவுகிறது. பஞ்சுகளில் எவ்வளவு தண்ணீர் கலக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறது ஒரு கருவி. அறுபடாமல் நூல் எவ்வளவு கனத்தைத் தாங்கவல்லது என்று ஆராய்ச்சி செய்கிறது ஒரு கருவி. பஞ்சுக்கும், பஞ்சின் இழைகளுக்கும் நூலின் தரத்துக்கும் உள்ள சம்பந்தங்களைப் படம் வரைந்து காட்டுவதுபோல் விளக்கப்படுகிறது ஒரு ஆராய்ச்சி அறையில். இப்படி ஆராய்ச்சிகள் பலவகை.

பஞ்சைப் பற்றித்தான் அதிகப்படியாக விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காரணம் ஊகிப்பது கஷ்டமல்ல. நூற்பு ஆலையில் நூற்கப்படும் நூலின் உற்பத்தி விலையில் 60 சத விகிதம் பஞ்சின் விலை. தரம் உயர்வாக இருப்பதற்கு 90 சத அளவுக்குப் பஞ்சின் தரம் காரணம். எனவே இவ்வாராய்ச்சிகளின் முடிவுகள் ஆலைகளுக்கு நடைமுறையில் பலனளிக்க வல்லது. பஞ்சுகளைத் தரம் பார்த்து வாங்கவும், கிடைக்கும்


தீபாவளித் திருக்கோலம்
வந்தது வந்தது, தீபத் திருநாள்!
வனப்புற அணியவும் அழகுபடுத்தவும்,
வசீகர வண்ணங்கள்—
திறமான நெசவுகள்—
மனங்கவர் வடிவு (டிசைன்)கள்
கொண்ட துணிகளையே
தேர்ந்தெடுங்கள்!
அவைகளே—
கைத்தறி துணிகள்
1958 நவம்பர் 15உ. வரை
தனிச்சலுகை ரூபாய்க்கு
12 நயா பைசா தள்ளுபடி
கைத்தறி துணிகள்
அகில இந்திய கைத்தறி போர்டு,
ஷாகிபாக் அவுஸ், விட்டட் ரோடு, பம்பாய்

அவரைப் பாருங்கள்!

- அவருக்குச் சளி மூண்டிருக்கிறது அல்லது தொண்டையில் கபம்.
- அவர் படுக்கையில் உட்காருகிறார் அல்லது ஜன்னலை நோக்கி ஓடுகிறார்.
- அவருக்கு மூச்சை யடைப்பதுபோல இருக்கிறது! மூச்சுவிட அவஸ்தைப் படுகிறார்.
- அவர் உள் மூச்சு குறுகியும் விரைவாயும் இருக்கிறது.
- அவர் வெளி மூச்சு கடினமாகவும் நீண்டும் இருக்கிறது.
- இருமும்போது அவருக்கு வேர்க்கிறது.
- அவர் உதடுகள் வெளுத்திருக்கின்றன.
- அவர் முகம் ஒரு கதையைக் கூறுகிறது.

அதுதான் ஆஸ்த்மா

கவலையும் பச்சாத்தாபமும் தோய்ந்த கண்ணீருக்கும் அப்பாற்பட்ட உருவமாக அவர் காட்சியளிக்கிறார்

நவரத்னகல்பம்

உட்கொண்டு பாருங்கள்.

ஆனந்தமும் உற்சாகமும் உள்ளவராக அவரை அப்படியே மாற்றிவிடும்

●○●

வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம், பவழம்: முத்து, கோமேதகம், வைடூரியம் ஆகிய ஒன்பது உயர்ந்த கற்களின் கலவையே நவரத்ன கல்பம்

கவிராஜ்
பண்டிட்
துர்க்காதத்த சர்மா
வைத்திய வாசஸ்பதி
அவர்களால்
கண்டுபிடிக்கப்பட்டது




○●○

NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (India)

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

உயர்தரமான...



வைரங்கள்

முத்துக்கள் &
நகைகளுக்கு

சாந்திலால் P. மேத்தா


வைர வியாபாரம்

15/522, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்



ராமா

கூந்தல் வளர்க்கும் டானிக்



டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் 'ஸிட்ரா'வின் குட்டிப் பஞ்சாலையைப் பார்வையிடுகிறார். இடதுபுறம் இருப்பவர் 'ஸிட்ரா கௌன்ஸி'ல் தலைவர் திரு ஜி. கே. தேவராஜுலு. வலது புறம் டாக்டர் திரு கே. சீனிவாசன் விளக்கம் செய்துகொண்டு செல்கிறார். பின்னால் இருப்பவர் கலெக்டர் திரு டி. என். லட்சுமிநாராயணன்.

பஞ்சின் தரத்தை நிர்ணயிக்கவும், பல்வேறு தரமுள்ள பஞ்சுகளைக் கலப்பது, கலப்பு விகிதம், பஞ்சு சுத்தம் செய்தல் முதலிய பல வகைகளில் உபயோகமாகின்றன.

ஸிட்ராவின் ஆராய்ச்சி இத்துடன் நின்று விடவில்லை. உண்மையில் மேலே கூறியவை அனைத்தும் பரிசோதனை என்னும் ஒரு பிரிவின் வேலை. இதைப்போல் வேறு மூன்று பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று ஆலை யந்திரங்களின் நுட்பங்களையும், கருவிகளின் தராதரங்களையும், முன்னேற்றத்துக்கான யந்திரங்களின் மேன்மைகளையும் ஆராய்ந்து கூறுகிறது. ஒரு ஆலையின் உற்பத்தி விலை நிரந்தரமாக உயர்வாக இருந்தால் பழங் காலத்திய அல்லது தேய்ந்துபோன யந்திர சாதனங்கள் எவ்வளவு தூரம் அதற்குக் காரணம் என்பதை இந்தப் பிரிவு ஆராய்ந்துரைக்க வல்லது. எந்தெந்த யந்திரங்களை மாற்ற வேண்டும், எந்தெந்த இனங்களில் நுட்பம் மிகுந்த புது முறை யந்திரக் கருவிகள் பயன்படும் என்பதை யெல்லாம் ஆராய்ந்து ஆலோசனை சொல்லும் இப் பிரிவு.

மற்றொன்று புள்ளி விவரங்கள் சேகரித்துத் தர நிர்ணயம் செய்யும் பகுதி. ஆலைகளுக்குச் சென்று நிலைமையை ஸ்தலத்திலேயே கவனித்து ஆலைகளில் நடக்கும் பல்வேறு நடவடிக்கைகளையும் ஆராய்ந்து குறைபாடுகள் எங்கெங்கே இருக்கின்றன, கவனக் குறைவு எங்கே இருக்கிறது, எவ்வாறு இக் குறைகளைத் தடுக்கலாம் என்று யோசனை கூறும் ஆற்றல் வாய்ந்தது இப்பிரிவு. உதாரணமாக, மெஷினில் சிறு சில்லறை மாறுதல்களைச் செய்து கொள்வதன் மூலம் ஒரு சாதாரண மில் தான் உற்பத்தி செய்யும் நூலின் தரத்தைப் பாதிக்காமல் வருஷத்துக்குச் சுமார் ரூ. 20,000 மிச்சம் பிடிக்க முடியும் என்பதை ஒரு ஆராய்ச்சி மூலம் எடுத்துக் காட்டப்பட்டது. 20 ஆலைகளில் இப்போது புள்ளி விவரத் தரக் கட்டுப்பாடு புகுத்தப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிலும் முக்கியமான பிரிவு தொழிலாளி-நிர்வாகத்தினரிடையே நிலவும் உறவை வளர்ப்பது. நிர்வாகத்தினரிடையே காணும் குறைபாடுகளை எடுத்துச் சொல்லவும், அவர்கள் எவ்வாறு திருத்திக் கொள்ள வேண்டுமென்பதைக் கூறவும், அதேபோன்று வேலைப் பளு, வேலை விகிதம், வேலை விதங்கள் முதலியவை பற்றி ஆராய்ச்சி செய்யவும் ஏற்பட்டது இந்தப் பகுதி. ஆராய்ச்சியைக் காட்டிலும் இப் பிரிவினர் செயல்படும் விதம் சிறப்பு வாய்ந்தது. தொழிலாளிக்குத் தேவையான சுமுகமான சூழ்நிலையையும், ஆலைகளில் போதிய வசதிகளும், காற்றோட்டம், வெளிச்சம், சுத்தமான இடம் முதலியவை நன்கு அமைந்து விட்டால் ஒவ்வொரு தொழிலாளி செய்யும் வேலையும் தானாகவே அதிகரிக்கும் என்பது ஒரு ஆராய்ச்சியின் முடிவு. அதே போல் உற்பத்திப் பெருக்கைச் சாதிக்கப் புது மாதிரி சாதனங்களைப் புகுத்த நேரும்போது தொழிலாளிகளையும் நிர்வாகத்தினர்களையும் கலந்து பேசிய பின்னர் அவர்கள் கூட்டுச் சம்மதத்தின் பேரில் புது முறைகளை மேற்கொள்ளுவது பயனளிக்கும் என்பது இப் பிரிவினர் அனுஷ்டிக்கும் ஆராய்ச்சி முறை. தொழிலாளிகளையும் நிர்வாகத்தினர்களையும் நெருங்கச் செய்து ஆலைகள் அபிவிருத்தியில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்ற உணர்ச்சியை விஞ்ஞான முறையில் வளர்ப்பது இந்தப் பிரிவின் முக்கியமான வேலை.

சிக்கலான பிரச்னைகளை ஆராய்வதற்குத் தகுதி வாய்ந்தது இந்த ஆராய்ச்சிக் கூடம் என்பது இதிலிருந்து விளங்கும். அதற்குத் தகுதி வாய்ந்த நிபுணர்கள் ஒவ்வொரு பிரிவிலும் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் துறையில் வல்லுநர். ஏற்கனவே பல ஆராய்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார்கள். கோவையிலுள்ள ஆலைகளில் உற்பத்தி அளவை எப்படி இருக்கிறதென்று ஸிட்ரா 1956-ம் ஆண்டில் ஆராய்ச்சி நடத்தியது. ஆலைக்கு ஆலை வித்தியாசம் இருப்பது தெரிந்தது. உற்பத்திக் குறைவுக்குக் காரணங்கள்



இளம் கலைஞர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிக் கலை வளர்க்கும் பணியை மிகச் சிறந்த முறையில் செய்து வருகிறது "சென்னை சமூக கலாசார சங்கம்". இந்தச் சங்கத்தின் ஆதரவில் சென்ற மாதம் குமாரி இந்திராணி எம். ஏ. அவர்களின் நடனக் கச்சேரி சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்துக்குத் தலைமைதாங்கிய நீதிபதி என். கணபதியா பிள்ளை அவர்கள் குமாரி இந்திராணியின் நாட்டியத் திறமையை வெகுவாய்ப் பாராட்டினார். எதிர்காலத்தில் மிகச் சிறந்த நாட்டிய நட்சத்திரமாகலாம் என்று அவர் ஆசி கூறினார்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

கண்டு பிடிக்கப்பட்டன. இதன் முடிவுகள் ஆலைகளுக்குப் பெரிதும் பயன்பட்டன. இப்போது ஆறுமாதத்திற்கு ஒரு முறை இதை மாமூல் ஆராய்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மில் சூபர்வைசர்களுக்குக்கூடப் பயிற்சி அளிக்கிறது ஸிட்ரா. இதுவரையில் சுமார் 200 பேர்களுக்கு இப்படிப் பயிற்சி அளித்திருக்கிறது. தாங்களே மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளைத் தவிர, நெசவு ஆலை சம்பந்தமாகப் பிரத்தியேக ஆராய்ச்சிகள் நடத்தித் தரவேண்டும் என்று கோரப்படும் விஷயங்களைப் பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுகிறது இந்த ஸ்தாபனம்.

அவர்கள் கண்ட முடிவுகளை யெல்லாம் அவ்வப்போது புத்தக வடிவத்தில் மற்றவர்களுக்குப் பயன்படுமாறு பிரசுரிக்கின்றனர். இது வரையில் சுமார் 120 பரிசீலனை அறிக்கைகள் வெளியிட்டிருக்கின்றனர். இவை தவிர நிர்வாகத்தினருக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும்படியாக ஆலை நிர்வாகம் பற்றிய கைப்புத்தகம் கூடத் தமிழிலேயே தயார் செய்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

இவ் வாராய்ச்சியின் பலன் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும்தானே? முதலாளிகள் ஸ்தாபனம் ஆலைகளுக்குச் சாதகமாகத்தான் செயல்புரியுமோ என்று சந்தேகிப்பவர்களுக்கு ஆணித்தரமாக "இல்லை" என்று உறுதி சொல்லுகிறார்கள் இந் நிலைய நிர்வாகிகள். அதன் ஆராய்ச்சிகளின் பலன் ஐந்து பேர்களுக்குப் பட்சபாதமின்றி நன்மை பயக்கும் என்கிறார்கள் அவர்கள். மலிந்த விலையில் மக்களுக்குத் தேவையான நல்ல ஆடைகளை உண்டாக்க உற்பத்தியாளர்களுக்கு வழி சொல்லுவதன் மூலம் அப் பொருள்களை உபயோகிப்போர்களுக்கு நன்மை; ஆராய்ச்சிகளின் நன்மைகளை உணர்த்துவதன் மூலம் தொழிலுக்கு முன்னேற்றம்; விஞ்ஞான ரீதியில் வேலைகளைச் செய்து அதிக ஊதியம் பெற வகை செய்வதன் மூலம் தொழிலாளிக்கும் நலம்; நுட்பமான முறைகளை எடுத்துக் காட்டுவதன் மூலம் நிர்வாகத்தினருக்கு நன்மை; உற்பத்திப் பெருக்கின் மூலம் விலைகளைக் குறைப்பதனால் ஆலைகளுக்கு நன்மை. உயர்தர நூல்களை விநியோகிப்பதன் மூலம் கைத்தறி நெசவாளிகளுக்கும் நன்மை:— இப்படி ஸிட்ராவின் சேவை எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கும்.

இந்த ஆராய்ச்சிக் கழகத்தில் தற்போது சுமார் 20 லக்ஷம் கதிர்களைக் கொண்ட 47 ஆலைகள் அங்கத்தினர்களாக இருக்கின்றன.

இம்மாதிரி ஒரு ஆராய்ச்சிக் கூடம் கோவையில் இருப்பது பற்றித் தென்னாடு பெருமை கொள்ள வேண்டும். இதைத் திறம்பட நிர்வகிக்கும் பொறுப்பைத் திரு ஜி. கே. தேவராஜுலுவைத் தலைவராகக் கொண்டு பதினேழு பேர்கள்கொண்ட ஒரு கௌன்ஸில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆலை நிர்வாகிகளைத் தவிர கைத்தறியாளர்கள் சார்பில் இருவரும், பம்பாய், அஹமதாபாத் ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து இருவரும் இதர அரசாங்க ஆராய்ச்சிக் கூடங்களிலிருந்து இருவரும் இக்கௌன்ஸிலில் இடம் பெறுகின்றனர்.

'ஸிட்ரா' கட்டடத்தை மூன்று வருஷங்களுக்குள்ளாக முடித்துக் கொடுப்பதற்குக் காரணமாக இருந்த திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலு கமிட்டியினரும், ஆராய்ச்சிக்காகச் சுமார் 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவிகளையும், சாதனங்களையும் உள்நாட்டிலிருக்கும் ஆலை யந்திரங்கள் உற்பத்தி செய்யும் கம்பெனியார்களிடமிருந்தும், சென்னை, பம்பாய் முதலிய இதர நகரங்களிலிருந்தும், செக்கோஸ்லோவேகியா போன்ற வெளி நாடுகளிலிருந்தும் சம்பாதித்து நிரப்பிய திரு ஜி. கே. தேவராஜுலு கமிட்டியினரும், ஆராய்ச்சிகளை இடைவிடாத கண்காணிப்புடன் சொந்தக் காரியம் போல் தம்முடைய மேற்பார்வையில் திறம்பட நிர்வகித்து நடத்தும் டைரக்டர் திரு கே. சீனிவாசனும் ஸிட்ராவுக்கு அஸ்திவாரம் போன்றவர்கள். மனிதப் பண்பையும் மனித நலனையும் வளர்க்கவே ஆராய்ச்சிகள் பயன்பட வேண்டுமென்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டு செயல் முறை இயங்குவது ஸிட்ராவின் சிறப்பு. அக்டோபரில் நடந்த ஸிட்ரா கட்டடத் திறப்புவிழாவின்போது அவர்கள் செய்திருந்த ஏற்பாடுகள் பிரமிக்கத் தக்கவை. அவை 'ஸிட்ரா'வைப் போலவே முதல்தரமாக இருந்தன.

தீபாவளித் திருநாளில் நண்பர்களுக்கும் அபிமானிகளுக்கும்
எங்களது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்!

தீபாவளி மற்றும் கல்யாண வைபவங்களுக்கு

விஜயம் செய்தீர்களா?

தற்கால நாகரீகத்துக்கேற்ற அற்புதமான கலர்களும் பார்டர்களில் காஞ்சீபுரம், பனாரஸ், பெங்களூர், கும்பகோணம், ஆரணி பட்டுப் புடவைகள், ஜரிகை வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், நூல் புடவைகள் மில் ஜவுளிகள், ஸில்க்குகள், வெல்வெட் மற்றும் நைலான், ஜப்பான் ரகங்களும் குறைந்த விலையில் ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்


இன்றே விஜயம் செய்யுங்கள்

★

ஸ்ரீ லக்ஷ்மி ஸில்க் எம்போரியம்

(K. N. & CO.)

227, ராஜ வீதி - - - - கோயமுத்தூர்



தீபாவளிச் சரக்கு

சுப்பு: ஏது, புது மாப்பிள்ளை! ஜரிகை வேஷ்டி, அங்கவஸ்திரம், ஸில்க் ஜுப்பா, தடபுடலாக இருக்கிறதே! தீபாவளிக்கு மாமனார் வீட்டு பிரஸெண்டா!

குப்பு: ஆமாமப்பா! இதுலே இன்னொரு விசேஷம் தெரியுமோ? இதெல்லாம் அசல் சுத்த கதர்!

சுப்பு: அடடே, அப்படியா! நிஜமாகவா? நம்பவே முடியவில்லையே! எங்கே வாங்கினீர்களாம்?

குப்பு: சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்தில்தான்!

*

சரசு: ஏது, லக்ஷ்மி! இந்தப் புடவை பிரமாதமாக இருக்கிறதே! ஜரிகை பேட்டும், முந்தானியும் கலரும் ரொம்ப ஜோராக இருக்கின்றன. உனக்கு அமைந்திருக்கிறது! புடவையால் நீ அதிக அழகாகத் தோன்றுகிறாயா, நீ உடுத்தியதால் புடவை அழகாக இருக்கிறதா என்று சொல்ல முடியவில்லையே!

லக்ஷ்மி: இரண்டையும் விட இது கதர்ப் பட்டுப் புடவை என்பதால்தான் அழகு அதிகம்.

சரசு: கதர்ப்பட்டா? நான் ஏதோ கும்பகோணம், காஞ்சீபுரம் ஸில்க் புடவையாக்கும் என்று நினைத்தேன்.

லக்ஷ்மி: கதர்ப் பட்டுப் புடவைகள் இப்போது கும்பகோணத்திலும், காஞ்சீபுரத்திலும் தினுசு தினுசாகச் சர்க்கார் கதர்ப்பட்டு உற்பத்தி நிலையங்களில் போடுகிறார்களே! இது ஒரு தினுசுதானா? பல மாதிரி புடவைகள் போடுகிறார்கள் கதர்ப்பட்டில்!



சரசு: அப்படியா! ஆனால் விலை?

லக்ஷ்மி: விலை சல்லிசு தான். மற்றப் புடவைகளை விட விலை சரசமாகவே கதர்ப்பட்டில் கிடைக்கிறது. ரூபாய்க்கு மூன்றணா தள்ளி வேறு கொடுக்கிறார்களா? அதனால் அறுபது எழுபது ரூபாய்க்கு நல்ல ஜரிகை போட்ட கதர்ப் பட்டுப் புடவை கிடைக்கிறது. பார்த்துக் கொண்டேன்.

சரசு: அப்படியா எங்கே இந்தக் கதர்ப் பட்டுப் புடவை யெல்லாம் கிடைக்கிறது?

லக்ஷ்மி: **சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்தில்தான்!**

*

மோகன்: ஹல்லோ ராம்! ஏதப்பா! Fancy Figure Print ஸ்லாக் ஷர்ட் எல்லாம் கண்ணைப் பறிக்கிறதே! எங்கே பார்ப்போம், கொஞ்சம் கிட்டே வா! அடடே, கதர் மாதிரி இருக்கிறதே!

ராம்: ஷ்யூர், ஆம்! கதர்தான். ரொம்ப நாளாக நமக்கு ஒரு ஆசை. இந்த மாதிரி பொம்மை போட்ட சீட்டியிலே ஸ்லாக் அடிக்கணும் என்று. நேற்று நம்ம Friend கோபுவுடன் சும்மா கதர் டிப்போவுக்குப் போனேன். இது 'ரெடிமேடா'கக் கண்ணில் பளிச்சென்று பட்டது. 'சீப்'பாகவும் இருந்தது. எடுத்தேன்.

மோகன்: ஓ! தேவலையே! நீ ரொம்ப 'இம்ப்ரூவ்' ஆகிவிட்டாயே! என்ன விலை இது?

ராம்: ஆறு ரூபாய் சொச்சம்தான் கொடுத்தேன். 'எயிட் அண்ட் ஆட்' போட்டிருந்தது. ரூபாய்க்கு மூன்றரை அணா ரிபேட் போக ஸிக்ஸ் அண்ட் ஆட் கொடுத்தேன்.

மோகன்: எங்கே பிரதர் கிடைக்கிறது?

ராம்: சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்தில்தான். கோபு வேறு எங்கே போவான்? அங்கே நல்ல 'வெரயிடி' இருக்கிறது என்றான்.



மோகன்: அப்போ நான் கூட 'ட்ரை' பண்ணப் போகிறேன் ஒன்று. ஆனால் எனக்கு இந்தக் கோலம் போட்ட பாட்டர்ன் எல்லாம் பிடிக்காது. 'பிளெயின்' ஸில்க் இந்த மாதிரி இருந்தால் தேவலை.

ராம்: பேஷாக இருக்கிறது.

மோகன்: அப்படியானால் சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்துக்கே போய்ப் பார்க்கிறேன்.

ராம்: ரைட்! செய்!

சென்னை அரசாங்ககாதி விற்பனைநிலையங்கள்:

சென்னை நகரம்: 86, பிராட்வே, சென்னை-1. 22, தியாகராய ரோடு, தியாகராய நகர் சென்னை-17. 3, பைக்ராப்ட்ஸ் ரோடு திருவல்லிக்கேணி, சென்னை - 5. 60, வாலாஜா ரோடு, சென்னை-2. 82, ராயப்பேட்டை ஹைரோடு, மைலாப்பூர், சென்னை-4. 6, தாணுத் தெரு, புரசைவாக்கம், சென்னை-7.

இதர இடங்களில்: 261/17, மேலமாசி வீதி, **மதுரை**. 17/116, ஒப்பணக்கார வீதி, **கோயமுத்தூர்**. 100 JS. 1487-89, கும்பேஸ்வரன் வடக்கு வீதி, **கும்பகோணம்**. 27, சின்னக்கடை வீதி, **திருச்சிராப்பள்ளி**. 27/29, வண்டிப்பாளையம் ரோடு, திருப்பாதிரிப்புலியூர் **கடலூர்**. 8/199, கடைவீதி, **கொடைக்கானல்**. கமிஷனர் ரோடு, டூரிஸ்ட் ஸெண்டருக்கருகில், **உதகமண்டலம்** 63-E பாரத் பில்டிங்ஸ் செக்காலை ரோடு, **காரைக்குடி** துரைசாமி நிலையம், தேர் நிலை, **சேலம்**. 78 ஆற்காடுசாலை, **வேலூர்**. எஸ். எம். வி. கட்டடம், கேப் சாலை, **நாகர்கோயில்**. விஜயலக்ஷ்மி விலாசம், காந்தி சாலை **காஞ்சீபுரம்**. கைத்தொழில் எம்போரியம் பில்டிங், திருநெல்வேலி ஜங்ஷன், **திருநெல்வேலி**.

தீபாவளியை முன்னிட்டு இந்த விற்பனை நிலையங்கள் தினந்தோறும் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், பிற்பகல் 2 மணி முதல் மாலை 9 மணிவரை திறந்து வைக்கப்படும். தீபாவளி வாரத்தில் விடுமுறையில்லாமல் தினசரி திறந்து வைக்கப்படும்.

சென்னை அரசாங்க காதி இலாகா.

முதலைத் தீர்த்தம்



பவானி பட்டாச்சார்யா

பெரும் போராட்டத்துக்குக் கொடிகட்டியாகி விட்டது. எங்கும் பரபரப்பு உச்ச நிலையை அடைந்தது. வங்காளத்தைச் சேர்ந்த வருணா கிராமத்தின் சரித்திரத்திலேயே அதற்கு முன் ஒரு காலத்திலும் அத்தகைய பிளவு உண்டாகி நெருக்கடியான நிலை ஏற்பட்டதில்லை. கொள்கை சம்பந்தமாக ஏற்பட்ட உற்பாதத்தினால் மக்கள் உணர்ச்சி வசப்பட்டுத் தங்களை மறந்தனர்.

எல்லாம் அந்த ஊர் சிவன் குளம் காரணமாக ஏற்பட்ட தகராறுதான். சிவன் குளம் என்று ஒரு காலத்தில் வழங்கப்பட்டு வந்த அந்தத் தடாகத்தை இப்போது எல்லோரும் முதலைத் தீர்த்தம் என்றே குறிப்பிட்டனர். அது வருணா கிராமத்தின் மத்தியில் உள்ள ஒரு பழைய கோவிலைச் சேர்ந்தது.

பல ஆண்டுகளுக்கு முன் மேகமாலா நதியில் வெள்ளம் ஏற்பட்டு, அதன் கரை உடைத்துக் கொண்ட போது, கிராமம் எங்கும் தண்ணீர் மயமாகியது. அப்போது மிகவும் வயதான ஒரு பெரும் முதலை வெள்ளத்துடன் கோவிலுக்குள் வந்து விட்டதாம். பின்னர் ஜலம் வற்றியபோது, அந்த முதலை சிவன் குளத்தில் அடைக்கலம் புகுந்து விட்டதாம்.

ஒவ்வொரு நாளும் இரவில் கிராம மக்கள் துயிலில் ஆழ்ந்திருக்கும் போது, அந்த முதலை மெதுவாகக் குளத்திலிருந்து ஊர்ந்து வந்து கோவிலின் மூல விக்கிரகத்துக்கு எதிரில் கண்களை மூடிக் கொண்டு ஆடாமல் அசையாமல் பிரார்த்தனை செய்வது வழக்கம். இந்தச் சம்பவத்தைக் கோவில் குருக்கள் வர்ணித்துக் கூறும் போது எவருக்கும் மெய்சிலிர்க்கும். முன் பிறவியில் சிவபக்தனாக இருந்த ஒரு அந்தணர் கர்ம வினையால் இந்த ஜன்மத்தில் முதலையாகப் பிறந்து, சிவ சன்னதியில் அனுதினம் பிரார்த்தனை செய்கிறார் என்பதே குருக்களின் உறுதியான அபிப்பிராயம்; அசைக்க முடியாத நம்பிக்கை.

சிவபக்தி ததும்பும் அந்த முதலை அங்கு வந்த பிறகுதான் முழுதும் பச்சைப் பசேலென்று ஆகாசத் தாமரை இலைகளாலும் புஷ்பங்களாலும் மறைக்கப்பட்டது. குளம் பச்சைக் கம்பளத்தால் மூடப் பட்டது போலாகி விட்டது. குளத்தில் வாழும் பக்த முதலையைத் தொந்தரவு செய்ய யாரும் விரும்பாததால், அந்தத் தீர்த்தத்தில் மக்கள் ஸ்நானம் செய்வது அடியோடு நின்று போய் விட்டது!

நாளடைவில் குளக்கரை சரியத் தொடங்கியது. தண்ணீர் சேறும்சகதியுமாகிக் கொடிய தொத்து நோய்களுக்குக் காரணமான கொசுக்களுக்கு இருப்பிடமாகியது.

* * *

ஹரீந்திரர் ஒரு சிறந்த சமூகத் தொண்டர்; மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரரான தலைவராகத் திகழ்ந்தார். முதலைத் தீர்த்தத்தின் பயங்கர நிலை பற்றிக் குருக்களுடன் வாதித்தார். அந்தக் குளத்தைச் சுத்தம் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். ஓர் ஆள் உயரத்துக்குக் குளத்தில் மண்டிக் கிடக்கும் ஆகாசத் தாமரைகளையெல்லாம் அகற்றி, குளத்தை ஆழமாக வெட்ட வேண்டும் என்றார். கிராமத்தில் தொத்து நோய்களை ஒழிப்பதற்கான போர் இயக்கத்தின் முதற்படி அதுதான் என்பதையும் அவர் விளக்கினார்.

ஹரீந்திரர் கூறியதைக் கேட்டதும், குருக்களுக்கு ஒருபுறம் வியப்பும் மற்றொருபுறம் கோபமும் உண்டாயின.

“இது என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு? மிருக உருவத்தில் இங்கு வாழும் ஒரு பக்தனுக்குத் தொல்லை கொடுப்பதா? இந்தப் புனிதப் பிரதேசத்தில் வீண் கொந்தளிப்பை உண்டாக்குவதா?”

குருக்களின் கூற்றைக் கேட்ட ஹரீந்திரர் சிரித்துக் கொண்டே, “மாமா! ஒரு பக்தனுக்கு அப்படியெல்லாம் வீண் தொந்தரவு கொடுக்க விரும்புவேனா? எனக்கு என்ன அறிவில்லையா?” என்றார்.

ஹரீந்திரரின் வார்த்தைகளில் குருக்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை.

எனினும் ஹரீந்திரர் விடவில்லை. “இந்த முதலை மகான் அதிக ஆனந்தமாக வாழ்வதற்கு வேறு ஒரு நல்ல இடமாகப் பார்த்து விடுகிறேன். அதைக் கவனித்து அதற்கு சிசுருஷை செய்ய வேலைக்காரர்களை அமர்த்தி விடுவோம். தினம் அதற்கு உணவாக வேண்டிய அளவு வெள்ளாட்டு இறைச்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்” என்றார்.

குருக்களின் வெண்மையான தாடியும், பருத்த சரீரமும் கூட ஹரீந்திரரின் மனத்தில் அவர் மீது மதிப்பை உண்டாக்கவில்லை!

ஹரீந்திரரின் கூற்றைக் கேட்டதும் குருக்கள், “சிவா, சிவா!” என்று காதுகளைப் பொத்திக் கொண்டார். “ஆட்டிறைச்சியா! சிவ பக்தனுக்கு அந்த உணவா? ஹரீந்திரா, நீ ஒரு முட்டாள் பையன். அன்னிய நாட்டுக் கல்வி உன் மனத்தைக் கெடுத்துவிட்டது. அது கிடக்கட்டும். அந்த பக்தன் வாழ்வதற்குப் புதிய இடம் அளிப்பதாகக் கூறினாய் அல்லவா!

அந்த இடம் எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டார் குருக்கள்.

"நீங்கள் கோபித்துக் கொள்ளாமல் நான் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள். குளத்துக்குள் வாழும் பக்தரைக் கல்கத்தாவில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் கொண்டு போய் விட்டு விடுவோம். அங்குள்ள குட்டையில் அவரது இனத்தைச்சேர்ந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அங்கு அவர் சிவநாமாவைப் பஜனை செய்து கொண்டிருக்கலாம். மற்ற முதலைகளையும் புனிதமாக்கிப் பக்தர்களாக்க முயற்சி செய்யலாம்.''

"ஹரீந்திரா! போ, போ, போ. இங்கு நிற்காதே. உன் அனுச்சாரமான மூச்சுக்கூட இந்தக் கோவிலில் படக்கூடாது. போ, தொலைவில் போ'' என்று கத்தினார் குருக்கள்.

"மாமா! நான் கூறுவதை யோசித்துப் பாருங்கள்'' என்று மேலும் ஏதோ சொல்லத் தொடங்கினார் ஹரீந்திரர். ஆனால், அதற்குக் குருக்கள் இடம் கொடுக்கவில்லை.



"சிவா, சிவா!'' என்று காதைப் பொத்திக் கொண்டு கடும் கோபத்துடன் அங்கிருந்து வெகு வேகமாகப் போய் விட்டார்.

ஹரீந்திரர் அவ்விஷயமாக மேற்கொண்டு தமது இட்டம் என்ன என்பதைத் தமது சகாக்களுக்கு விளக்கிக் கூறினார்.

"'ஒருநாள் விடியற்காலம் ஒருவருக்கும் தெரியாமல் நாம் எல்லோரும் அரிவாள், மண்வெட்டிகளுடன் கோவிலில் கூடி, குளத்தில் மண்டிக் கிடக்கும் ஆகாசத் தாமரைச் செடிகளை வெட்டி அகற்ற வேண்டும். காலையில் குருக்கள் வந்து பார்ப்பதற்குமுன் வெகுதூரம் வரையில் செடிகளை வெட்டித் தள்ளிவிட வேண்டும். அவர் வந்ததும் கத்துவார், கூத்தாடுவார், கடவுள் நம் எல்லோருக்கும் கடுமையான தண்டனை கொடுப்பார் என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்வார். நாம் எதையும் லட்சியம் செய்யக் கூடாது. மௌனமாகச் செடி வெட்டும் படலத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். பிறகு, குருக்கள் மூட நம்பிக்கையுள்ள கிராம மக்களை அழைத்துக் கொண்டு வருவார். நாம் சாந்தமாக இருக்க வேண்டும். சச்சரவு ஏற்படும் போல் தோன்றினால், குளத்திலிருந்து வெளியேறி விட வேண்டும்.

"பிறகு திடீரென்று மற்றொரு நாள் விடியற்காலம் வந்து வேலையைத் தொடங்க வேண்டும். அவ்விதமே குளத்தில் உள்ள செடிகள் யாவும் மறையும் வரையில் நம் முயற்சியை விடாமல் செய்து வர வேண்டும்.

"அரிவாள், மண் வெட்டிகளுடன் நம்மிடம் ஒரு படகும் ஈட்டிகளும் இருக்க வேண்டும். ஏனெனில், கிழட்டு முதலையால் ஆபத்து ஏற்படாமல் இருக்க வேண்டும் அல்லவா? ஈட்டிகள் இருந்தால் முதலையின் வாயிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.''

"குருக்கள் நம் மீது கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தால் என்ன செய்வது?'' என்று ஒருவர் கேட்டார்.

இதற்கு ஹரீந்திரர் மிகுந்த குதூகலத்துடன் பதில் அளித்தார்:

"வழக்குத் தொடர்ந்தால் மிகவும் நல்லது. முயற்சியும் செலவும் இல்லாமலேயே நமக்கு விளம்பரம் கிடைக்கும். வங்காளம் முழுதும் நமது போராட்டத்தின் பெருமையை அறிந்து கொள்ளும்... இந்தக் குருக்களுக்கு அவ்வளவு தைரியம் உண்டா? கோர்ட்டார் நம் எல்லோருக்கும் அபராதம் விதிக்கலாம். ஏன், சிறைத் தண்டனை கிடைத்தால், வெற்றி நம்முடையதுதான். இப் பிரச்னையில் சிக்கல் எதுவும் இல்லை. நாம் செய்ய விரும்புவது அக்கிரமமான காரியமல்ல. கிராம மக்களின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்ய விரும்புகிறோம். கொடிய மலேரியாக் கொசுக்களை அழித்து, ஆயிரக் கணக்கானவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாப்பு அளிக்க விரும்புகிறோம். நமது உயர்ந்த லட்சியம் வெற்றி பெறுகிறதா, அல்லது குருக்களின் மூடபக்தியும் போலிக் கூற்றும் வெற்றி பெறுகின்றனவா என்பதைப் பார்த்து விடலாம்.''

அவ்வளவுதான்! குளத்தைத் துப்புரவு செய்வதென முடிவாகி விட்டது. ஆகாசத் தாமரைகளை வெட்டி எறியும் கைங்கர்யத்தைத் தொடங்கும் தேதியும் நிர்ணயமாகி விட்டது. அதற்கான எல்லா ஏற்பாடுகளும் இரகசியமாகச் செய்தாகி விட்டன.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் யாரும் எதிர்பாராத விதமாக ஒரு பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தது.

"அப்பனே! எங்கள் பிண்டுவை யாராவது கண்டீர்களா? இன்று பகல் முழுவதும் அவனைக் காணவில்லை. இருட்டி விட்டது. இன்னும் அவன் வீடு வந்து சேரவில்லை.''

இவ்விதம் குருக்கள் வீடு வீடாகச் சென்று ஒவ்வொருவரையும் கேட்டார். அவரது முகம் சோகத்தில் ஆழ்ந்து கிடந்தது.

ஆறு வயதான குருக்களின் பேரப் பிள்ளை காணாமற் போய்விட்டான். பகல் முழுதும் தேடியாகி விட்டது.

குருக்களின் மகள் தன் மகன் பிண்டுவுடன் ஒரு மாதம் பிறந்தகத்தில் தங்குவதற்காக வந்திருந்தாள். பிண்டுவைக் கண்டுபிடிக்காமல் வீட்டுக்குத் திரும்பிச் செல்லக் குருக்கள் விரும்பவில்லை. கடைசியாக, வெறும் கையோடு திரும்பி வந்த அவரைக் கண்டு மகள் 'ஐயோ முறையோ' என்று அழத் தொடங்கினாள். மகளின் பிரலாபத்தைக் கண்டு குருக்களின் இருதயம் சுக்குநூறாக வெடித்துவிடும் போலிருந்தது.

"அப்பா! அந்தப் பாழும் குளம்தான் என் அருமை பிஸ்துவை விழுங்கிவிட்டது" என்றாள் குருக்களின் மகள்.

இதைக் கேட்டதும் குருக்களுக்குக் கால்கள் தள்ளாடின. அவர் கைகளை முகத்தில் புதைத்துக் கொண்டு விம்மினார். பிஸ்துவைக் குளம் விழுங்கியிருந்தால், அதாவது குளத்தில் உள்ள கிழட்டு முதலை விழுங்கியிருந்தால், இனி யார் என்ன செய்ய முடியும்?

அந்தப் பரிதாபமான செய்தி கிராமம் முழுதும் பரவி மக்களை வெருண்டு எழும்படி செய்தது. ஹரீந்திரரின் செவியிலும் மேற்படி செய்தி விழுந்தது. ஹரீந்திரர் உடனே காரியத்தில் இறங்கினார்.

அரை மணி நேரத்தில் அவரும் அவரது நண்பர்களும் படகுடனும், அரிவாள், மண்வெட்டி, ஈட்டி முதலிய ஆயுதங்களுடனும் குளத்தில் இறங்கி விட்டார்கள். எங்கும் லாந்தல் விளக்குகள் பிரகாசித்தன. பல வருஷங்களாகக் குளத்தில் மண்டிக் கிடந்த ஆகாசத் தாமரைச் செடிகள் வெகு விரைவில் அழியத் தொடங்கின. கோரைகளையும் செடிகளையும் அழிக்கும் கைங்கர்யத்தில் கிராம மக்களும் ஈடுபட்டனர். எந்த விநாடியிலும் முதலை தென்படலாம் என்றும், அதன் வயிற்றில் பிஸ்து இருக்கலாம் என்றும் எல்லோரும் எதிர்பார்த்தவண்ணம் வேலை செய்தனர்.

குருக்கள் கோவிலுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு கடவுளைப் பிரார்த்திக்க ஆரம்பித்தார்.

மகனை இழந்த தாய் தரையில் படுத்துக் கொண்டு, "கண்ணே பிஸ்து, அருமை மகனே!" என்று புலம்பினாள்.

"சிவபூஜை செய்யும் குருக்களின் பேரன் கடைசியில் முதலைக்கா இரையாக வேண்டும்? என்ன விதி, என்ன பயங்கரம்!" என்று பலரும் அங்கலாய்த்தார்கள்.

இரவு முழுதும் எல்லோரும் ஆகாசத் தாமரைகளை யெல்லாம் வெட்டி அப்புறப் படுத்தி விட்டார்கள்.

பொழுது விடிந்து, சூரியனும் உதயமாயிற்று. எல்லோரும் களைத்துப் போய்க் குளக்கரையில் உட்கார்ந்தார்கள்.

அப்போது அவர்களில் ஒருவருடைய முகம் பயங்கரமாக மாறியது. "அதோ பாருங்கள், பிஸ்துவின் ஆவி" என்று அலறிக்கொண்டே அவர் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினார். அவர் காட்டிய திசையைப் பார்த்ததும் எல்லோரும் நடுங்கி விட்டார்கள். இனி எப்போதும் அந்த ஆவி குளத்தைச் சுற்றிக் கொண்டிருக்கும் அல்லவா?

ஏக காலத்தில் எல்லோரும் "பிஸ்து" "பிஸ்து" என்று உரக்கக் கத்தினார்கள்.

அரைத் தூக்கத்துடன் இருந்த பிஸ்துவை ஒரு வயோதிக விவசாயி அழைத்துக்கொண்டு வந்தார். விவசாயி தாம் வந்த காரியத்தை விளக்கலானார்.

"பக்கத்திலுள்ள ஸோஹக்பூர் கிராமத்திலிருந்து வருகிறேன். இந்தக் குழந்தை வழி தவறி எங்கள் கிராமத்துக்கு வந்துவிட்டான். இரவு எங்கள் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கும்படி கூறினேன். தனக்கு எந்த ஊர் என்று சொல்ல இந்தப் பையனுக்குத் தெரியவில்லை. 'கோயிலுக்குள் முதலைத் தீர்த்தம் இருக்கும் ஊர்தான் என்னுடைய ஊர்' என்று உளறிக் கொட்டினான். கடைசியில் இந்த ஊராகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு அவனை இங்கு அழைத்து வந்தேன்" என்றார் விவசாயி.

தூட்டான் பூச்சிகளைப் பிடிக்க முயற்சி செய்துகொண்டே சென்றதில் வழி தவறிப் பக்கத்துக் கிராமத்துக்குப் போய்விட்டதாகப் பிஸ்து உளறிக் கொட்டி விளங்க வைத்தான்.

பிஸ்துவைக் கண்டதும் குருக்களும் அவரது மகளும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். "கண்ணே! என் வயிற்றில் பாலை வார்த்தாயே!" என்று மகள் குழந்தையை இறுகத் தழுவிக் கொண்டாள்.

குளத்தைப் பார்த்ததும் குருக்களுக்குப் பகீர் என்றது. அவரது மன நிலையை அறிந்து கொண்ட ஹரீந்திரர் அவருக்கு அருகில் வந்து, "சிவ பக்தர் முதலையாக வந்திருக்கிறார் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது. நீங்கள் குறிப்பிட்ட அந்த பக்த முதலை யார் எங்கே? முதலை இங்கு எக்காலத்திலும் இருந்ததில்லை என்பது தெரிந்தே இப்படியெல்லாம் கதை கட்டி விட்டீர்களோ, என்னவோ?" என்றார்.


குருக்களின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவரது கண்கள் சிவந்தன. உதடும் தாடியும் துடித்தன.

"முட்டாள்! இந்தச் சாதாரண உண்மை கூட உனக்குத் தெரியவில்லையா? முதலை ரூபத்திலே இந்தத் தீர்த்தத்தில் வாழ்ந்து, தினந்தோறும் சிவபூஜை செய்து வந்த பக்தர், உங்களுடைய அக்கிரமமான செயலைக் கண்டு மறைந்து விட்டாரடா. அந்த பக்தர் வேறு ஒரு கிராமத்தில் உள்ள குளத்துக்குப் போய் விட்டார். இனி அந்தக் கிராம மக்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது பார். அந்தக் குளத்தில் முளைக்கப் போகும் ஆகாசத் தாமரைகளாகிற பசும் போர்வைக்குள் அந்த சிவ பக்தர் இனி மறைந்து வாழ்வார். கூடிய சீக்கிரம் இந்த உண்மையை எல்லோரும் அறிந்து கொள்ளப் போகிறீர்கள், பார்!" என்று ஆவேசம் வந்தவர் போல் குருக்கள் சொல்லி முடித்தார்.

குருக்களின் வார்த்தைகளைக் கேட்ட அப்பாவிகளான கிராம மக்கள் நடுங்கினர்! சிவ பக்தரின் கோபத்தால் என்ன நேருமோ என்று கலங்கினர். ஆனால், குருக்களின் கூற்றைக் கேட்டு ஹரீந்திரருக்கும் அவரது நண்பர்களுக்கும் சிரிப்பு தாங்க முடியவில்லை.

"இந்தக் கிராமத்தைப் பிடித்திருந்த துரதிர்ஷ்டம் தீர்ந்தது. இனி இந்தக் குளத்தில் ஆகாசத் தாமரை முளைத்து, மக்களுக்குப் பேராபத்தை உண்டாக்கும் கொசுக்கள் உற்பத்தியாக விடமாட்டோம். நூற்றுக் கணக்கான மூட நம்பிக்கைகளைப் போல் இந்த மூட நம்பிக்கையும் மண்ணோடு மண்ணாகிவிட்டது. இனி நாம் பிற்போக்கான சக்திகளை வீழ்த்தி விட்டு முன்னேறுவோம்; முன்னேற்றம் அடைந்தே தீருவோம்."

இவ்விதம் அங்குள்ள மக்களிடம் ஜெயகோஷம் செய்த ஹரீந்திரரின் கண்கள் ஆனந்தத்தால் ஜொலித்தன.



தீபாவளி விற்பனை!

[illegible]

கொள்ளேகாலம் பட்டுப் புடவைகள், பாவாடைகள், சோளி பீஸ்கள், நூல் சேலைகள், கைத்தறி வேஷ்டிகள்

மற்றும் பல நவீன மில் ரகங்களும் ஸ்டாக் செய்துள்ளோம்

நவம்பர் 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

(கொள்ளேகால் பட்டு ஜவுளி வியாபாரம்)

84, பாண்டி பஜார்-தியாகராய நகர் சென்னை-17

(டெலிபோன்: 88041)

பிராஞ்சுகள்

சென்னை: வடக்கு மாடவீதி, மயிலாப்பூர்

பம்பாய்: பீம்டிவாலா பில்டிங்ஸ், மாதுங்கா-19 (C. Ry.)

புது டில்லி: C/O தி கான்பூர் ஸ்டோர்ஸ், 6/90, W.E.A.R. கரோல்பாக்

ஸ்டாக்கிஸ்ட்: கான்பூர்: [illegible] 8/81, [illegible]



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிமிடெட்

5. சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414 . . . மதராஸ் - 5

தந்தி: 'EVERMANS' . . . போன்: 85834

சேரக் கடைசி தேதி 13-11-1958 ... முதல் ஏலத் தேதி 15-11-1958

25 மாதங்கள்	மாதாந்திர சீட்டுகள் (3-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

[illegible] எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

[illegible] B-5, [illegible] III, [illegible] 1019, [illegible] ● [illegible] ● [illegible] 17-A, [illegible] பம்பாய்-22

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

10. துருவ சரிதம்

ஸ்வாயம்புவ மனுவுக்கு உத்தானபாதர் என்று ஒரு புதல்வர் பிறந்தார் என்று இதற்கு முன் கூறினோம். உத்தானபாதருக்கு இரண்டு மனைவிமார். மூத்தவள் ஸுநீதி. இளையவள் ஸுருசி. மன்னருக்கு இளைய மனையாள் ஸுருசியிடம்தான் அன்பும் ஆசையும் இருந்தன! ஸுநீதிக்குத் துருவன் என்று ஒரு மகனும், ஸுருசிக்கு உத்தமன் என்ற ஒரு மகனும் பிறந்தார்கள். ஒரு நாள் உத்தானபாதர் ஸுருசி மகன் உத்தமனைத் தன் மடி மேல் வைத்துக் குலாவிக் கொண்டிருக்கையில், தானும் தன் தகப்பன் மடிமேல் ஏறி உட்கார வேண்டும் என்று துருவன் அரசரை அண்டினான். அரசன் துருவனை வரவேற்கவில்லை. வேண்டாம் என்று புறக்கணித்து விட்டான்.

அப்பொழுது, மதம் மேலிட்ட மாற்றாந் தாயான ஸுருசி, ஐந்து வயது பாலகனான துருவனிடம், "மன்னருக்கு மகனானாலும் என் வயிற்றில் பிறக்காத நீ சிங்காதனம் ஏற முடியாது. அந்தோ! உனக்குச் சிறுவயது. வேறொருத்திக்குப் பிறந்தாய் என்று அறியாய் போலும். போ! பரம்பொருளை நினைத்துத் தவம் செய். மறு பிறப்பிலாவது என் மகனாகப் பிறக்க வேண்டும் என்று வரம் கேள். அப்பொழுது நீ அரசனுக்குரிய ஆசனத்தில் ஏறி அமரலாம்" என்று பகையுடன் பேசினாள்.

இக் கொடுஞ் சொற்களைக் கேட்ட துருவன் கம்பால் அடித்த கட்செவியெனக் கோபத்தால் சீறினான். பேச்சின்றிப் பார்த்துக் கொண்டு நின்ற தந்தையை விட்டு விலகித் தன் தாயிடம் அலறிக் கொண்டு ஓடினான். உதடு துடிக்கத் தேம்பும் மகனை ஸுநீதி வாரி அணைத்து, 'நடந்ததைச் சொல்' என்று வினவினாள். சக்களத்தி செயலைக் கேட்டுக் காட்டுத் தீயால் எரிந்த கொடியைப் போல் கருண்டு வதங்கித் தானும் அழுதாள். அவளுக்கு வழியொன்றும் தெரியவில்லை. தன் மகனிடம் சமாதானம் சொன்னாள். "அருமை மகனே! பிறர் தவறைப் பொருட்படுத்தாதே. முன் பிறவியில் தான் செய்த கெடுதலுக்குப் பயனை இப்பிறவியில் மனிதன் அனுபவிக்கிறான். ஸுருசி சொன்ன வார்த்தை உண்மையே. இப்பாவியின் வயிற்றில் பிறந்த உனக்கு நாராயணனுடைய தாமரைத்தாள்கள்தான் கதி" என்றாள்.

தாய் சொன்ன சொல்லை மனத்தில் வாங்கிக் கொண்டு, துருவன் காட்டை நோக்கி விரைந்து வெளியேறினான். துருவன் இவ்வாறு தனிமையில் தவம் செய்ய விரும்புகிறான் என்று செவியுற்ற நாரதர், க்ஷத்திரியனின் மன உறுதியை மெச்சி, போகும் வழியில் துருவனைச் சந்தித்துப் பின்வருமாறு உபதேசம் செய்தார்.

"சிறுவனான உனக்குத் தகுந்தது, தகாதது என்று என்ன இருக்கிறது? முன்செய்ததற்குப் பின் அநுபவிப்பது என்பது வாழ்க்கையின் இயல்பு. அகப்பட்டதை வைத்துக் கொண்டு ஆனந்தப் படுவது பெரியோர் வழக்கம். மனத்தை அடக்கி எண்ணற்ற பிறவிகளாய்த் தவம் செய்யும் முனிவரும் காணாத கடவுளை நீ எவ்வாறு காண்பாய்? ஆகையால் இந்தப் பிடிவாதத்தை விடு" என்றார்.

அதற்கு துருவன் "சுகமும் துக்கமும் கலந்த வாழ்வெனும் நோய்க்கு நீங்கள் காட்டும் வழியே தகுந்த மருந்து. ஆனால்



மாற்றாந் தாய் வாக்கால் புண்பட்ட என் மனத்துக்கு அது இசையவில்லை. க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்து அடங்காத நெஞ்சம் படைத்த நான் வேறு கதியைத் தேடுகிறேன். முனிவரே! மூவுலகிலும் நிகரற்றதும், இதுவரை என் முன்னோரும் பிறரும் அடையாததுமான பதவியை நான் அடைய வேண்டும். அதற்கு வழி சொல்லுங்கள்'' என்றான்.

பாலன் சொல் கேட்ட நாரதர், மகிழ்ந்து. மனமுருகி, அவனுக்குக் கடவுளை வழிபடும் முறையை உபதேசம் செய்தார்.

''அறம், பொருள், இன்பம், வீடு என்ற பேறுகளை அடைவதற்கு ஹரியின் தாள்களைச் சேவிப்பது ஒன்றுதான் வழி. யமுனா நதியின் கரையில் மது வனம் இருக்கிறது. தெய்வீகம் பொருந்திய அவ்விடம் சென்று, ஹரியின் உருவை மனத்தில் இடைவிடாமல் தியானம் செய். இவ்வாறு செய்து கொண்டு வந்தால் மனமானது ஆனந்தத்தில் பரவசம் அடைந்து வேறு ஒன்றிலும் நழுவாது.

''இரகசியமான மகா மந்திரத்தையும் உரைக்கிறேன், கேள். அதுதான் 'ஓம், நமோ பகவதே வாசுதேவாய' என்பது. இதை, ஹரியின் ரூபத்தை மனத்தில் தியானம் செய்யுங்கால் கூடவே உச்சரிக்க வேண்டும். பூ, பழம், தண்ணீர், துளசி இவைகளால் கடவுளுடைய பிம்பத்தை பூஜை செய்யும் பொழுதும் இந்த மந்திரத்தையே சொல்ல வேண்டும்.

''இவ்வாறு மனம், வாக்கு, காயம் மூன்றாலும் ஈசனை வழிபட்டால் அவர் நம்முடைய பக்தியையும் அதிகரித்து தர்மம் முதலிய வாழ்க்கைப் பெருமைகளையும் நல்குவார். வாழ்க்கையில் பற்றில்லாதவர், முக்தி அடைவதற்கும் உறுதியான பக்தியே வழியாகும்.''



இவ்விதம் நாரதரால் உபதேசம் செய்யப்பட்ட துருவன், அவரை வணங்கி விட்டு, ஹரி சரணத்தால் புண்ணியம்பெற்ற மதுவனம் சென்றான்.

நாரதர் உத்தானபாதரிடம் சென்றார். அரசர் துயரத்தால் வருந்துவதைப் பார்த்து அதன் காரணத்தைத் தெரியாதவர் போல் வினவினார். ''ஐயோ! ஐந்து வயதுப் பாலகனான ஒரு மகனை நான் நாட்டைவிட்டு விரட்டி விட்டேன். காட்டில் ஓநாய் போன்ற விலங்குகள் துருவனைக் கொன்று தின்று விடும். என்னுடைய கொடுஞ்செயலை எண்ணி வருந்துகிறேன்'' என்று அரசர் சோகத்துடன் பதில் உரைத்தார். நாரதர் உத்தானபாதரைத் தேற்றினார்.

''துருவனை நினைத்து வருந்த வேண்டாம். அவனுக்கு ஹரியின் அருள் இருக்கிறது. லோக பாலகர்களாலும் சாதிக்க முடியாத செயல்களைச் செய்து பெரும் புகழ் அடையப் போகிறான்'' என்றார்.

மதுவனத்தில் துருவன், யமுனையில் நீராடி, இரவில் உபவாசம் இருந்து, முனிவர் சொன்னபடி ஹரியை தியானம் செய்தான். மூன்று நாட்களுக்கு ஒரு தரம், உயிர் நிலைக்க வேண்டிய அளவு விளாம் பழத்தையும் இலந்தைப் பழத்தையும் உட்கொண்டு, ஒரு மாதம் ஹரியை அர்ச்சனை செய்தான். இரண்டாவது மாதத்தில், ஆறு தினங்களுக்கு ஒரு தரம் இலை, புல் இவைகளைத் தின்று பூஜையை நடத்தினான். மூன்றாவது மாதத்தில், சமாதியில் அமர்ந்து ஒன்பது நாட்களுக்கு ஒருதரம் வெறும் நீரை அருந்தி வந்தான். மூச்சை அடக்கிக் கொண்டு, பன்னிரண்டு நாட்களுக்கு ஒரு தடவை காற்றைப் புசித்து, நான்காவது மாதத்தை ஹரி தியானத்தில் கழித்தான். ஐந்தாவது மாதம், அரசகுமாரன் கம்பத்தைப் போல் ஒரு காலால் நின்று கொண்டு, மூச்சைப் பூராவும் அடக்கி, மனத்தை ஒரே நிலையாய் ஹரியினிடம் நிறுத்தி விட்டான். இத் தவத்தின் தீவிரத்தால் மூவுலகும் நடுங்கின. துருவன் நிற்கும் பாரத்தைத் தாங்காமல் யானையிருக்கும் படகெனப் பூமி ஒரு பக்கமாகச் சாய்ந்தது. இந்தத் தவத்தினால் விண்ணவரும் மூச்சுத் திணறலாயினர். எல்லோரும் சேர்ந்து ஹரியிடம் போய் முறையிட்டார்கள். பகவான் ''பயப்படாதீர்கள். துருவன் தன்



ஆத்மாவை என்னிடம் லயிக்கச் செய்து விட்டான். அதனால்தான் அனைவருக்கும் இந்தக் கஷ்டம். நான் சென்று இப்பொழுதே அவனுடைய தவத்தை முடித்து வைக்கிறேன்'' என்றார்.

நாராயணன் கருடன் மீதேறி மது வனம் வந்தார். மின்னற்கொடியென ஒரு வினாடி துருவன் அவ்வுருவத்தைத் தன் மனத்தில் கண்டான். ஆனால் திடீரென்று மறைந்து விட்டது. கண்ணைத் திறந்து பார்த்தான். எதிரே அதே உருவம் நிற்கக் கண்டான். வியந்து, தாள் வணங்கிக் கண்களால் அந்த மேனியைப் பருகினான். துருவனுக்கு உள்ளும் இருக்கும் ஹரியானவர், துதி செய்யத் தெரியாமல் துருவன் தவிப்பதை அறிந்து, வேதத்தின் உருவான தன் சங்கினால் அவன் கன்னத்தில் தொட்டார். உடனே ஞானமும் பேச்சும் ஒருங்கே பெற்று, துருவன் ஹரியைத் துதித்தான்.

ஒன்றுயிருந்து பலவாகி மாயையால் உண்மையை மறைத்திடும் மாயவனே, மாசற்ற மனத்தோடு பக்தி செய்யும் பெரியோர் கூட்டத்தில் கலந்து, இந்தப் பிறப்பிறும் கரைகாணுக் கடலைக் கடந்து, எந்நாளும் இன்புற்றிருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். ஹரி, துருவனிடம் கருணை கூர்ந்து பதில் அளித்தார். ''உன் மனத்தில் குடி கொண்டிருக்கும் அவாவை நான் அறிவேன். இதுவரை ஒருவரும் அடையாத பதவியை உனக்குத் தருகிறேன். நீ இருக்கும் இடத்தை நட்சத்திர மண்டலமானது, களத்தின் நடுவே நட்டிருக்கும் கம்பத்தைப் போர் மிதிக்கும் காளைகளைச் சுற்றி வரும். பிரமதேவனின் நாளையும் அது கடந்து நிற்கும். அதற்கு முன் நீ இப்புவியில் முப்பத்தி ஆறுயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்வாய். உன் மாற்றாந்தாயின் மகன் உத்தமன் வேட்டையாடி உயிர் இழக்க, மகனைத் தேடிச் செல்லும் தாயும் தீயில் விழுந்து மடிந்து போவாள். எனக்குப் பிரியமான வேள்விகள் பல நடத்தி, மண்ணுலகில் கிடைக்கக்கூடிய இன்பங்கள் அனைத்தையும் அனுபவித்து விட்டு, சப்தரிஷிகள் வாழும் மண்டலத்துக்கும் மேலிருக்கும் என் இடத்தை வந்து அடைவாய்.''

இவ்வாறு வரம் அளித்து விட்டுப் பரமன் மறைந்தார். ஆனால் துருவனுக்கு அமைதி ஏற்படவில்லை. ''அந்தோ! மாற்றாந்தாய் வாக்கினால் வருந்திய என் மனம், முகுந்தனிடம் முக்தியைக் கேளாமல், அழியும் பதவியை விரும்பியதே! தங்களுக்கு இல்லாத பெருமை எனக்கு வரக்கூடாதென்று விண்ணவர் என் மனத்தைக் கலைத்து விட்டனரா? இறந்தவனுக்கு நல்கிய மருந்துபோல் ஆகி விட்டதே என் கதி! அரசனிடம் சென்று அவலைக் கேட்ட ஆண்டிபோல் ஆனேன்'' என்று துயருற்றான்.

ஒருவிதமாக மனத்தைத் தேற்றிக் கொண்டு மெதுவாக நகர் திரும்பினான் துருவன். தன் மகன் திரும்பி வருகிறான் என்று கேட்ட உத்தானபாதருக்கு மகிழ்ச்சி மிகுந்தது. ரதமேறிப் பரிவாரங்கள் சூழ, எதிர்கொண்டு அழைக்க

விரைந்தார். துருவனைக் கண்டதும் தேரிலிருந்து குதித்து, மகனை அணைத்து உச்சி முகர்ந்து ஆனந்தக் கண்ணீரால் அவனை நனைத்தார். துருவனும் தாய் தந்தையரை வணங்கினான். விழுந்த மைந்தனை வாரி எடுத்து 'நீ நீடூழி வாழவேண்டும்' என்று ஆசி கூறினாள் மாற்றாந்தாயான சுருசி. மன்னனும் துருவனும் கோலாகலத்துடன் தலைநகரை அடைந்தார்கள்.

நாரதர் முன்சொன்ன பெருமையை நேராகத் தம் மகனிடம் கண்டு உத்தானபாதர் வியந்தார். நாளடைவில் நாட்டைத் துருவனிடம் ஒப்புவித்துவிட்டு உத்தானபாதர் காட்டை அடைந்து ஆத்மசிந்தனையில் எஞ்சிய நாட்களைக் கழித்தார்.

துருவனுக்கு இரண்டு மனைவிமார். முதல் மனைவி பிரமி என்பவளுக்கு இரண்டு ஆண் மக்களும், இரண்டாவது மனைவி இலா என்பவளுக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர்.

துருவனுடைய மாற்றாந்தாய் மகன் உத்தமன் ஒரு நாள் வேட்டையாடுகையில் ஒரு யக்ஷனால் கொல்லப்பட்டான். இதைக் கேட்டுச் சினம் கொண்ட துருவன், தன் தேரில் ஏறிக்கொண்டு யக்ஷனுடைய தலைநகரமாகிய அளகாபுரியை அடைந்து, தன் சங்கை ஊதினான். போருக்கு வந்த துருவனை யக்ஷகணங்கள் எதிர்த்தன. பெரும் போர் நிகழ்ந்தது. மலைமீது பெய்த மாரியெனப் பாயும் அம்புகளால் மறைக்கப்பட்டான் துருவன். ஆனால் மறுகணமே மேகத்திலிருந்து வெளிவந்த கதிரவன் போல் தோன்றி, எதிரிகளைத் தலை வேறு உடல் வேறாய்த் துண்டித்து வீழ்த்தினான். மிஞ்சியவர் பயம் கொண்டு ஓடினர். ஆனால் போர் முடியவில்லை. திடீரென்று வானம் இருண்டது. இடி இடித்தது; மின்னல் வீசியது. வானத்தில் ஒரு மலை தோன்றி வாளையும் ஈட்டியையும் கல்லையும் கக்கியது. கடல் பொங்கி மண்மீது புரண்டோடிற்று. இந்த மாயத்தைக் கண்ணுற்ற முனிவர்கள் துருவனுக்குத் தீமை அணுகாதிருக்க நாராயணனைத் துதித்தனர்.

ஆனால் துருவன் அஞ்சவில்லை. வில்லை எடுத்து அம்பைத் தொடுத்து நாராயணாஸ்திரத்தை மந்திரித்தான். அப்பொழுதே மாயாவிகள் மறைந்து விட்டார்கள். வில்லினின்று வெளி ஏறிய பாணங்கள் யக்ஷர்களைக் கணக்கின்றிக் கொன்றன. அப்பொழுது துருவனுடைய பாட்டனார் மனுவானவர் அங்கு தோன்றி, போரை நிறுத்தும்படி துருவனை வேண்டிக் கொண்டார். உத்தமனைக் கொன்றது யக்ஷன் அல்லவென்றும், விதி என்ற வேடம் பூண்ட கடவுளே என்றும் உபதேசம் செய்தார். சிவனுக்குச் சேவகனை குபேரனுடைய ஆட்களைக் கொல்வது சரி அல்ல என்றும் எச்சரித்தார்.

துருவனுக்குக் கோபம் தணிந்தது. உடனே, துருவன் முன் குபேரன் தோன்றி, "வேண்டிய வரத்தைக் கேள்" என்று கூறினான். மன்னர் மன்னனான குபேரனால் தூண்டப்பட்ட துருவன் "பிறப்பெனும் ஆழிக்கு அப்பால் அழைத்துச் செல்வதற்குத் திறம் வாய்ந்த ஹரியின் நினைவு இடைவிடாமல் இருக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

மண்ணுலகுக்கு மீண்டும் வந்து, துருவன் பல்லாண்டு புவிமீது ஆணை செலுத்தினான். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் அமோகமாய் அனுபவித்த பிறகு, முடிவில் தன் மகன் உத்கலனிடம் நாட்டை ஒப்புவித்து விட்டு, பத்ரிகாச்ரமத்துக்குப் போய், தவம் செய்தான். கடவுளை எண்ணி எண்ணி, மனம் உருகிக் கண்ணீர் பெருகி, உடல் நடுங்கத் 'தான்' என்ற எண்ணத்தையே துருவன் இழந்து நிற்கும்பொழுது, ஆகாயத்தினின்று ஒரு விமானம் இறங்கி வந்தது. அதிலிருந்து விஷ்ணுவின் உருவம் படைத்த இருவர் இறங்கி, "உங்களை நாராயணனுடைய இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்ல வந்திருக்கிறோம். முனிவருக்கும் கிடைக்காத விஷ்ணுபதத்தைத் தாங்கள் அடைந்திருக்கிறீர்கள். சூரிய மண்டலம் அவ்விடத்தைச் சுற்றி வலம் வருகிறது. அவ்விடத்தை உங்கள் முன்னோர் எவரும் அடைந்ததில்லை" என்றுரைத்தார்கள். வானவர் மலர்மாரி பொழிய, கந்தர்வர் கானம் செய்ய, பேரிகை ஒலிக்க, துருவன் விமானத்தில் ஏறிக்கொண்டு ஒவ்வொரு உலகமாகத் தாண்டி, விஷ்ணுவின் பதத்தை அடைந்தான்.

இந்த வைபவத்தைக் கண்ட நாரதர், பிற்காலத்தில் பிரசேதர்கள் செய்த யாகத்தில் பின்வருமாறு பாடினார்:

தவப்பயனால் துருவன் சென்ற பேரிடத்தை
ஒருநாளும்
வேள்விசெய்யும் அந்தணரும் பெரியோரும்
அடையாரேல்
நிறையாத மனதோடு மாந்தரை ஆண்டுவரும்
அரசர்கள் அணுகுவதும் ஆகாத செயலே

அறியாத வயதினிலே மாற்றாந்தாய் சொல
தைக்கக்
கானகத்துக் கேகுங்கால் உபதேசம் நான்
செய்தேன்:
பக்தருக்கே வெற்றிதரும் தோல்வியில்லாப்
பெருமானை
வழிபட்டு வழுவாத மேலிடத்தைத்
தானடைந்தான்.

ஆறுண்டு நிரம்பாத பாலகனும் கருணையினால்
தாமதமே இல்லாது பெற்ற இத்தனிப்
பெருமை
மன்னவரின் மைந்தர்களுள் யாரேனும்
இங்குளரோ
பல்லாண்டு தவித்தாலும் உழைத்தாலும்
பெறவல்லோர்?


Whatever the pleasure
Player's complete it
PLAYER'S Navy Cut smokers, the world over, will tell you that PLAYER'S has everything that goes into the making of a good cigarette.
Player's Please
PL/812
Issued by The Imperial Tobacco Company of India Limited

பாண்டிமாதேவி



நா. பார்த்தசாரதி

அத்தியாயம் 36

கனவு கலைந்தது!

அன்றைக்குப் பொழுது புலர்ந்தபோது இடையாற்றுமங்கலம், இடையாற்றுமங்கலமாக இல்லை. அந்தத் தீவில் சோகமும், ஏமாற்றமும், ஏக்கமும் ஒன்று சேர்ந்து நிரம்பி விட்டது போல் ஒருவகை அமைதி பரவியிருந்தது. மகாமண்டலேசுவரரின் மாளிகை, சாவு நடந்து விட்ட வீடுபோல் களையில்லாமல் காட்சியளித்தது. வைகறையில் அங்கு ஒலிக்கும் வழக்கமான இன்னிசைக் கருவிகளின் மங்கல ஒலி கேட்கவில்லை. மாளிகையிலுள்ள சிவன் கோவிலில் அடிகள்மார் ஊனும், உயிரும் உருகும் வண்ணம் பாடும் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களின் பூபாளப் பண்ணொலி கேட்கவில்லை. மாளிகையைச் சுற்றியிருந்த நந்தவனங்களில் பூத்திருந்த பூக்கள் யாரும் கொய்வாரின்றிக் கிடந்தன.



பெண்களின் கைவளை ஒலி, பாதங்களின் சிலம்பொலி, கதவுகளைத் திறந்து மூடும் மணி ஓசை, முரசுகளின் முழக்கம், சங்குகளின் ஒலி, கன்னிமாடத்துக் குமரி நங்கையரின் குதூகலமான கலகலப்பு, — எதுவும், எங்கும் இன்றி அளவிட முடியாத துன்பத்துள் அடங்கி ஒடுங்கி முழுகி விட்டது போலிருந்தது செம்பவழத் தீவு முழுதும்.



கன்னி மாடத்து வாசற்படியில் கன்னத்தில் கையூன்றித் துயரமே உருவாக வீற்றிருந்தாள் குழல்மொழி. தூங்கி விழித்த சோர்வு கூட இன்னும் மாறவில்லை, அவள் முகத்தில். தூக்கத்தில் கலைந்திருந்த கரிகுழல் காதோரங்களிலும், முன்நெற்றியிலும் சுருண்டு வளையமிட்டிருந்தது. உறங்கி விழித்த இளஞ்சிவப்புப் படிந்த கண்களின் செருகினாற் போன்ற ஒடுங்கிய பார்வையில் அலுப்பும் ஒரு அழகு மயக்கத்தை உண்டாக்கியது. பகலின் ஒளி மருவி உறவாடிய அந்தித் தாமரை போல் சோகம் மருவித் துவண்ட அந்த முகத்தில் இனம் புரியாத



ஏக்கம் தெரிந்தது! அதைவிட அதிகமாக ஏமாற்றம் தெரிந்தது.

புறத்தாய நாட்டு அரண்மனையில் கூற்றத் தலைவர் கூட்டத்துக்காகப் போயிருந்த தன் தந்தைக்கு அம்பலவன் வேளான் மூலமாக நடந்த செய்தியைச் சொல்லி அனுப்பிவிட்டு மேலே என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து வீற்றிருந்தாள் அவள். இதயம் எண்ணங்களின் சுமைகளால் கனத்தது. இன்ப துன்ப உணர்ச்சிகளெல்லாம் பாழாய்ப் போன மனித இதயத்துக்குத்தான் உண்டு போலிருக்கிறது. அவள் கண் பார்வைக்கு முன்னால் நேற்றைக்கு இருந்தது போலவே பறளியாறு கவலையின்றி ஓடிக் கொண்டிருந்தது. கரையோரத்துக் கொன்றை கொத்துக் கொத்தாகப் பொன் பூத்திருந்தது. மரக்கிளையில் பறவைகள் மகிழ்ச்சிக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன. "நேற்றிரவு கொள்ளை போனதைப் பற்றி இவை சிறிதாவது பொருட்படுத்தினவா? சிறிதாவது கவலைப்பட்டனவா?"—குழல்மொழி நெடுமூச்சு விட்டாள். "உணரத் தெரிந்த உள்ளத்துக்குத்தான் துன்பமெல்லாம்!"—தனக்குள் அவள் முணுமுணுத்துக் கொண்டாள்.

அவள் இருந்த நிலையைப் பார்த்தபோது அருகில் நெருங்கவோ, ஆறுதல் கூறவோ, துணிவின்றி அஞ்சினார்கள், உடனிருந்த பணிப்பெண்கள்.

சுந்தர முடியும், வீர வாளும், பொற் சிம்மாசனமும், கொள்ளை போன துயரத்துக்கு மேல் தன்னுடைய உள்ளம் கொள்ளை போன துயரம் பெரிதாக இருந்தது அவளுக்கு. துறவுக் கோலத்தில் மறைந்து நின்ற அந்த இளமையின் சிரிக்கும் முகத்தை, திரண்ட தோள்களை, பரந்த மார்பை, உருவெளியில் ஒன்றுக்கி நிறுத்திக் கண்களை மூடிக் கொண்டு பார்க்க முயன்றாள் குழல்மொழி. கண்முன் இருப்பவரை விழித்துக் கொண்டால்தான் பார்க்க முடியும்! கண்முன் இல்லாதவரையோ கண்கள் மூடிக் கொண்டால்தானே பார்க்க முடிகிறது? புறக் கண்ணால் எதிரில் இருப்பவரைப் பார்க்கும் போது அகக் கண்மூடிவிடுகிறது. அகக் கண்ணால் எங்கோ இருப்பவரை நினைவில் கொணர்ந்து பார்க்க முயலும் போது புறக்கண்கள் தாமே மூடிக் கொள்கின்றன. தியானம் செய்யும் போது தன் தந்தை கண்களை மூடிக் கொள்ளும் காட்சி குழல்மொழிக்கு நினைவு வந்தது. துறவியாக வந்தவர் யார் என்று தன் உள்ளத்துக்குப் புதிதாகத் தெரிந்த உண்மையோடு அவர் அழகையும் இணைத்து எண்ணிப் பார்த்தபோது அவளுக்கும் ஏக்கம் ஏக்கமாக வந்தது. சொந்தக்காரன் தனக்குச் சொந்தமான பொருள்களை எடுத்துக் கொண்டு போனதைக் கொள்ளை என்று ஒப்புக் கொள்ள அவள் மனம் தயாராயில்லை. சொந்தமில்லாத அவள் உள்ளத்தையும் புதிதாகச் சொந்தமாக்கிக் கொண்டு போனதைக் கொள்ளை என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லுவது? எப்படிக் குறிப்பிடுவது? தன் தந்தை கூற்றத் தலைவர் கூட்டத்துக்காக அரண்மனைக்குப் புறப்பட்டுப் போன பின் துறவிக்கும், தனக்கும், இடையே நடந்த பேச்சுக்களை — நிகழ்ச்சிகளைக் கூடியவரை அவரிடம் கூறாமல் மறைத்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டிருந்தாள் அவள். துறவிக்கு மாளிகையைச் சுற்றிக் காட்டியது, அப்படிச் சுற்றிக் காட்டும்போது அவரைப் பற்றித் தான் அறிந்த ஒரு பெரிய உண்மை, அதன் பின் அரசுரிமைப் பொருள்கள் வைத்திருந்த அறைக்கு அவரை அழைத்







துச் சென்றது ஆகிய நிகழ்ச்சிகளை யெல்லாம் தன் தந்தையிடம் கூறி னால் அவர் தன்னையே கோபித்துக் கொள் வாரோ என்று அச்சம் உள்ளூற அவ ளுக்கு இருக்கத்தான் செய்தது.

''துறவி இல்லறென்ற உண்மை தனக்கும் முன்பே தன் தந்தைக்குத் தெரியாமல் இருந்திருக்காது. அன்று விழிஞத்திலிருந்து அழைத்து வரும் போதே அவருக்கு அது தெரிந்துதான் இருக்கும். வேண்டுமென்றே என்னிடம் அவர் அதை மறைத்திருக்க லாம்!'' - நினைக்க நினைக்க என்னென்னவோ செய்தது. மனம் குழம்பியது குழல்மொழிக்கு.

ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டு, சிந்தனையைக் குழப்பிக் கொண்டிருந்த அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. கவலைகளும், மனக் குழப்பமும், அதிகமாக உள்ள சமயங் களில் பசுமையான சோலைகள், மலர்க் கூட்டங்கள், நீர்ப் பிரவாகங்கள் இவற் றைப் பார்த்தால் சிறிது நிம்மதி உண்டாகும். சிறு பருவத்திலிருந்தே அப்படி ஒரு பழக்கம் அவளுக்கு. தந்தை எதற்காவது அவளைக் கண்டித்தால், தோழிகளோடு எந்தக் காரணத்திலா வது பிணக்கு ஏற்பட்டால், நந்தவனத் துக்கோ, பறளியாற்றங் கரைக்கோ போய்த் தனியாக உட்கார்ந்து விடுவாள் அவள். கண்ணுக் கெட்டிய தூரம் பசுமையை, நீர்ப்பரப்பை அல்லது மலைத் தொடரைப் பார்த்துக் கொண்டு இருந்தால் அவை மனத்தைப் புதுமை

யாக்கி அனுப்பி விடுகின்றனர். பித்துப் பிடித்தாற் போல் கன்னி மாடத்து வாசலில் அமர்ந்திருந்த குழல்மொழி எழுந்திருந்து வெளியே நடந்தாள். மாளிகையைச் சுற்றியிருந்த தோட்டங்களில், மலர் வனங்களில், மண்டபங்களில், ஆற்றங்கரையில், இன்னும், எங்கெங்கோ தன் மன நிம்மதியைத் தேடி உலாவினாள் அவள். அகத்தின் நிம்மதி புறத்தில் கிடைப்பதற்குப் பதிலாக ஒவ்வோர் இடமும் ஒவ்வோர் நினைவை உண்டாக்கிக்கொண்டிருந்தது.

வசந்த மண்டபம் கண்களில் தென்பட்டபோது அவர் அங்கே தங்கியிருந்தது நினைவுக்கு வந்தது. நீராழி மண்டபத்தினருகே அவர் சென்றபோது அவர் அங்கே நீராடியதை நினைத்தாள். நந்தவனத்தில் நுழைந்து மலர்களைப் பார்த்தபோது அவருடைய வழிபாட்டுக்காக மலர் கொய்ததை நினைத்துக் கொண்டாள். வசந்தமண்டபத்து மலர்ச் சோலை வழிகளில் விளையாட்டுத்தனமாகப் பேசிக் கொண்ட பேச்சுக்களையெல்லாம் எண்ணினாள்.

நண்பகலின் உச்சி வெய்யில் மேலேறிக் காயும் வரையில் அப்படியே தன் நினைவின்றித் திரிந்து கொண்டிருந்தாள். அந்தப் பேதைப் பெண். இனிமையான, நல்ல கனவு ஒன்றைக் கண்டு கொண்டிருந்தபோது யாரோ முரட்டுத்தனமாக அடித்து எழுப்பிக் கலைத்து விட்டது போன்றிருந்தது அவளுடைய நிலை.

அதற்கு மேல் பணிப்பெண்கள் வந்து அவளை வற்புறுத்தி அழைத்துச் சென்று நீராடச் செய்தனர். உணவு கொள்ளச் செய்தனர். தன் விருப்பமின்றி அவர்களுடைய வற்புறுத்தலுக்காக அவள் நீராடினாள்; உண்டாள். வீரர்களும் மெய்காவற் பணி புரிவோரும் அரசுரிமைப் பொருள்கள் களவு போய் விட்டனவே என்று கலங்கிப் போய்ச் செய்வதறியாது திகைத்திருந்தனர். அவளோ உள்ளம் களவு போய் விட்டதே என்று உன்மத்தம் பிடித்தவள் போலிருந்தாள்.

நீண்ட பகல் நேரம் எப்படியோ சிறிது சிறிதாகக் கழிந்தது. பால்வாய்ப் பிறைப் பிள்ளையை இடுப்பில் எடுத்துக் கொண்டு பகல் என்னும் கணவனைப் பறிகொடுத்த மேற்றிசைப் பெண் புலம்பும் மாலை நேரம் வந்தது. இருள் ஒளியைச் சிறிது சிறிதாக விழுங்கத் தொடங்கியிருந்தது. முதல் நாளிரவு நடந்துவிட்ட கொள்ளையால் அரண்டு போயிருந்த காவல் வீரர்கள் அன்றும் பயந்து போய் ஏராளமான காவல் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். மாளிகையின் எல்லாப் பகுதிகளிலும் வசந்த மண்டபம் உட்படச் சிறிதும் இருளின்றித் தீபங்களை எரிய விட்டிருந்தார்கள். பொழுது விடிகிற வரை அவற்றை எவரும் அணைக்கக் கூடாதென்று முன்னெச்சரிக்கை செய்யப் பட்டிருந்தது.

மாளிகையின் நான்குபுறமும் பறளியாற்றங் கரையை ஒட்டினாற் போல் சுற்றிலும் ஆயுதபாணிகளாக வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டார்கள். வழக்கமான மாளிகைப் படகைத் தவிர புதிய படகுகளோ, புதிய ஆட்களோ அனுமதிக்கப்படக் கூடாதென்று கடுமையாக உத்தரவிடப்பட்டிருந்தது.

களவு போனபின் மறுநாள் செய்யப்படும் அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்த்தபோது குழல்மொழிக்குச் சிரிப்புத்தான் வந்தது. காவலுக்கு ஆட்கள் நிறுத்தி வைக்கப்படாத இடங்கள் பறளியாற்று நீர்ப்பரப்பும், கரைமேலிருந்த உயரமான மரங்களின் உச்சிகளும் தான். கரையோரமாக இரண்டு மூன்று பாக தூரத்துக்கு ஒருவராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல் வீரர்கள் வெளிச்சத்துக்காகப் பிடித்துக் கொண்டிருந்த தீப்பந்தங்கள் தீவைச் சுற்றிக் கரை நெடுகக் கார்த்திகைச் சோதி எடுத்தது போல் தூரப் பார்வைக்குத் தோன்றியது. வீரர்கள் ஒருவருக்கொருவர் எச்சரிக்கை செய்து கொள்ளுகிற பாராக் குரலோசை இரவின் அமைதியில் அலை அலையாகப் பரவி எதிரொலித்தது.

உறக்கம் வராத குழல்மொழி கன்னி மாடத்து முகப்பில் அமர்ந்து இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். காலை அரும்பிப் பகலெல்லாம் நினைவாகி மாலை மலர்ந்த மன நோய் அவள் துயிலைக் கெடுத்து உட்காரச் செய்திருந்தது. உட்கார்ந்திருந்ததும் வீண் போகவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பணிப் பெண் ஓடி வந்து, "நாராயணன் சேந்தனும், அம்பலவன் வேளானும் அரண்மனையிலிருந்து வந்திருக்கிறார்கள்" என்று கூறினாள்.

"எப்போது வந்தார்கள்?" என்று வியப்புடன் அந்தப் பெண்ணைக் கேட்டாள் குழல்மொழி.


"இப்போதுதான் படகிலிருந்து இறங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். தங்களை அவசரமாகச் சந்திக்க வேண்டுமாம்."

"இப்போது எங்கே இருக்கிறார்கள்?"

"மாளிகையின் கீழ்ப்பகுதியில் மெய்க் காவல் வீரர்களிடம் ஏதோ பேசிக் கொண்டு நிற்கிறார்கள்."

"அங்கேயே இருக்கச் சொல்! இதோ நானே வருகிறேன்."

பணிப்பெண் அதைப் போய்ச் சொல்வதற்குக் கீழே இறங்கிச் சென்றாள். சில



விநாடிகளில் குழல்மொழியும் கீழே இறங்கிச் சென்றான்.

பாதி இறங்கிச் சென்றுகொண்டிருக்கும்போது நாராயணன் சேந்தன் யாரிடமோ இரைந்து பேசிக் கொண்டிருப்பது அரைகுறையாக அவன் காதில் விழுந்தது. அவன் திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டான்.

“யாரைச் சொல்லி என்ன ஐயா ஆற்றும்? மகாமண்டலேசுவரரின் புதல்விக்கு அவர் அதிகாரச் செல்வம் கொடுத்துவிட்டதால் வந்த வினைதான் இவ்வளவும்!”—சேந்தனுடைய இந்தச் சொற்களைக் கேட்டு நடந்து கொண்டிருந்தவன் அப்படியே திகைத்துப் போய் நின்றான்.

அத்தியாயம் 37

நெஞ்சமெனும் கடல் நிறைய....

கீழே மணற் பரப்பிலிருந்து மதிவதனியின் பெயரைச் சொல்லி யாரோ அழைக்கும் குரலைக் கேட்டு முகத்தில் கலவரம் தோன்ற அவளைப் பார்த்தான் குமார பாண்டியன். “இரவு நேரத்தில் கடலோரத்துத் தனிமையில் உயரமான மரக்கிளையின் மேல் அப்படி ஒரு அழகிய பெண்ணோடு நிற்கும் இளைஞனை மூன்றாவது மனிதன் பார்த்தால் எவ்வளவு தவறாகக் கற்பனை செய்து கொள்ள முடியும்?” இதை நினைக்கும்போது ஒரு துன்பத்திலிருந்து நீங்கி இன்னொரு துன்பத்தில் சிக்கிக் கொண்டு விட்டது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அவன் அஞ்சினான். அந்த அச்சம் அவனுடைய முகத்தில், பார்வையில், பேச்சில் வெளிப்பட்டுத் தெரிந்தது.

“மதிவதனி! கீழேயிருந்து யாரோ உன்னைக் கூப்பிடுகிறார்களே?”

“வேறு யாருமில்லை. என் தந்தைதான் நேரமாயிற்றே என்று என்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்.”

“ஐயோ! இந்த நிலையில் உன்னோடு என்னை இங்கே பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வார்?”

அவனுடைய கேள்வியின் உட்பொருள் விளங்காதவள் போல் அவன் முகத்தைச் சாதாரணமாகப் பார்த்தாள் அவள். பின்பு மெல்லச் சிரித்தாள். சிறிது சிறிதாகச் செந்நிற மலர் போல் நடு இதழில் மலர்ந்த அந்தச் சிரிப்பு இதழ் முடியும் இடத்தில் வலது கன்னத்தில் ஒரு சிறு குழியாகத் தேங்கி மறைந்தது. அவள் சிரிக்கும்போதெல்லாம் தென்படும் அந்த நளினக் குழிப்பு சிரிப்பின் இங்கிதத்தையெல்லாம் மொத்தமாக ஒன்று சேர்த்துக் காட்டும் இறுதி முத்திரையாக அமைந்தது. எதிரே நின்று காண்பவரின் எண்ணங்களைத் தேக்கிச் சிறைப் பிடிக்கும் அந்த இங்கிதச் சிரிப்பில் சற்றே கிறங்கி நின்றான் இராசசிம்மன்.

அப்போது இரண்டாவது முறையாகக் கீழேயிருந்து அவள் தந்தை அவளை இரைந்து கூப்பிடும் ஒலி எழுந்தது.

“மதிவதனி! பேசாமல் நீ மட்டும் கீழே இறங்கிப் போய் விடு. நான் இப்படியே மரக்கிளையில் ஒளிந்து கொண்டு விடுகிறேன்.”

அவனுடைய குரலில் இருந்த நடுக்கத்தையும் பதற்றத்தையும் உணர்ந்து அவள் மீண்டும் புன்முறுவல் பூத்தாள். அவனுக்கோ இரைந்து பேசவே நா எழவில்லை.

“ஏன்தான் இப்படிப் பயப்படுகிறீர்களோ நீங்கள்? மரியாதையாக என்னோடு கீழே இறங்கி வரப்போகிறீர்களா? அல்லது நான் கீழே இறங்கிப் போய் மரத்தில் ஒரு திருடன் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று என் தந்தையிடம் சொல்லட்டுமா?”

“ஐயோ, வேண்டாம் பெண்ணே! நானே வந்து விடுகிறேன்.”

முதலில் மரக்கிளையிலிருந்து கீழே இறங்கிக் கால் வைத்துக் கொண்டு, கையை நீட்டிக் குமார பாண்டியனை இறக்கி விட்டாள் அவள்.

மரத்திலிருந்து முன்பின் அறிமுகமில்லாத இளைஞன் ஒருவனோடு தம் பெண் இறங்குவதைக் கண்டு ஒன்றும் விளங்காமல் திகைப்பும் சிறிது சினமும் அடைந்தார் கீழே நின்று கொண்டிருந்த மதிவதனியின் தந்தை.

“அப்பா! இவர்தான் நமது வலம்புரிச் சங்கை விலைக்கு வாங்கியவர்” என்று அவனை இழுத்துக் கொண்டு போய்த் தன் தந்தைக்கு அறிமுகம் செய்து வைத்தாள். சிறு குழந்தை வீட்டில் பெரியவர்களுக்குத் தெரியாமல் கண்டெடுத்த விளையாட்டுப் பொம்மையை அடக்க முடியாத ஆசைத் துடிப்போடு பெரியவர்களிடம் கொண்டு போய்க் காட்டுவது போன்ற மகிழ்ச்சித் துள்ளல் மதிவதனியிடம் இருந்தது. முதலைக்கு வலை விரித்துக் கொண்டு மரத்தின் மேல் காத்திருந்தது. அப்போது அவன் எவராலோ துரத்தப்பட்டு வலையின் குறுக்கே ஓடி வந்தது, அவனைக் காப்பாற்றுவதற்காகத் தான்

வலையைத் தூக்கியது ஆகிய எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரே மூச்சில் தன் தந்தையிடம் சொல்லி விட்டான் அவன்.

விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்புதான் அந்த மனிதருடைய முகத்தில் மலர்ச்சியைக் காண முடிந்தது.

'விலைமதிப்பற்ற இந்தச் சங்கை வாங்குவதற்கு யார் வரப் போகிறார்கள் என்று நெடு நாட்கள் காத்திருந்தோம். இத்தனை நாட்களுக்குப் பிறகு நீங்கள் அந்தப் பாக்கியத்தை அடைந்திருக்கிறீர்கள்?'' என்று சொல்லிக் கொண்டே குமார பாண்டியனின் கையிலிருந்த சங்கை வாங்கி மேலும் கீழும் திருப்பிப் பார்த்தார். பின்பு அந்தச் சங்கை வைத்திருப்பவருக்கு அதனால் என்ன நன்மைகள் ஏற்படும் என்பதை விவரித்து விட்டு அதை அவனிடமே மறுபடியும் திருப்பிக் கொடுத்து விட்டார்.

கணக்குப் பாராமல் பொற்கழஞ்சுகளை அள்ளிக் கொடுத்து வலம்புரிச் சங்கை விலைக்கு வாங்கிய அவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன், எந்த நகரத்தில் வசிப்பவன், என்ன பெயரினன் என்பவற்றை யெல்லாம் அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டினார் மதிவதனியின் அருமைத் தந்தை.

''காவிரிப்பூம் பட்டினத்தில் ஏதோ ஒரு பெரிய பொன் வணிகரின் புதல்வன்'' என்று அவர் நம்பும் விதத்தில் பொய் சொல்லித் தப்பித்துக் கொண்டான் குமாரபாண்டியன். மேலும் தொடர்ந்து அவர் கேட்ட கேள்விகளுக்கு ஒவ்வொரு பொய்யாக மனத்துக்குள் உருவாக்கித் தடுமாற்றமின்றி வெளியிட்டுக் கொண்டிருந்தான் அவன். பழகி விட்டால் பொய்யைக்கூட அழகாகச் சொல்ல முடிகிறது. மாபெரும் கற்பனைக் காவியங்களைப் படைத்த மகா கவிகளே அந்த வேலையைத் திறம்படச் செய்திருக்கும்போது தென்பாண்டி நாட்டுத் தமிழ் இளவரசனால் மட்டும் முடியாமல் போய் விடுமா?

''திருட்டுப் பயமே இல்லாத இந்தத் தீவில் உங்களை யார் எதற்காகத் துரத்திக் கொண்டு வருவார்கள்? அவர்களால் உங்களுக்கு எத்தகைய துன்பம் நேர இருந்தது?'' என்று மதிவதனியின் தந்தை அவனைக் கேட்டபோது, ''தீவின் கரையோரமாகப் போய்க் கொண்டிருந்தேன். என் கையிலிருந்த இந்தச் சங்கைப் பறிப்பதற்காகவோ என்னவோ, யாரோ என்னைத் துரத்திக் கொண்டு வந்தார்கள். உங்கள் பெண் மட்டும் என்னைக் காப்பாற்றியிரா விட்டால் நான் அவர்களிடம் சிக்கிக் கொள்ள நேர்ந்திருக்கும். உங்கள் பெண் மதிவதனிக்கு நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று அவரிடம் கூறினான் அவன். அப்போது அவன் கண்களின் கடையோரத்தில் மிதந்த கள்ளக் குறும்புப் பார்வை அவள் மேல் சென்றது. அந்தப் பார்வையின் விளைவாக அவள் பூத்த புன்னகை படர்ந்து இதழ்க் கோடியில் கழிந்து மறைந்தது.

''ஐயா, பெரியவரே! உங்கள் பெண் துணிவு மிகுந்தவள்'' என்று அவளையும் அருகில் வைத்துக் கொண்டே அவரிடம் பிரமாதமாகப் புகழத் தொடங்கினான் குமார பாண்டியன்.

''சிறு வயதிலிருந்தே தாயில்லாமல் வளர்ந்தவள். இன்னும் விளையாட்டுப் புத்தி போகவில்லை. துடுக்குத்தனம் அதிகமாக இருக்கிறது. நினைவு தெரிந்து பொறுப்பு வரவேண்டுமே என்றுதான் எனக்கு இடைவிடாத கவலை.''

பெரியவர் அவனிடம் குறைப்பட்டுக் கொண்டார். பேசிக்கொண்டே மூவரும் அங்கிருந்து நடந்தார்கள்.

"அப்பா! முதலைக்காக வலை விரித்துக் காத்திருந்ததுதான் மீதம். ஒரு முதலை கூட வரவில்லை. இந்த மனிதர் வலையில் விழுந்து நேரத்தை வீணாக்கியிராவிட்டால் ஒரு முதலையாவது தப்பித் தவறி வந்திருக்கும்." பேசாமல் நடந்துகொண்டிருந்த அவளைப் பேச வைக்க நினைத்த மதிவதனி தன் சொற்களால் வம்புக்கு இழுத்தாள்.

"தான் செய்த குற்றத்துக்குப் பிறர் மேல் குற்றம் சுமத்துவதுதான் செம்பவழத் தீவின் நடைமுறை வழக்கமோ? தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தவனை வலைக்குள் இழுத்துச் சுருக்கி மேலே தூக்கியதுமில்லாமல் என் மேல் பழி கூறவும் செய்கிறீர்களே!"

"அடே அப்பா! ஒரு வார்த்தை சொல்வதற்குள் இவருக்கு எவ்வளவு கோபம் வருகிறது, பாருங்கள் அப்பா!"

"போதும்! விளையாட்டுத்தனமாக எதையாவது பேசிக் குறும்பு செய்வதே உனக்கு வழக்கமாகப் போயிற்று."

தந்தையின் வார்த்தைகளிலிருந்த கண்டிப்பின் கடுமை அவள் பேச்சுக்கு அணையிட்டது. மூவரும் பேசாமல் கரையோரமாகவே நடந்தார்கள்.

"நீங்கள் எந்த இடத்துக்குப் போக வேண்டும்? உங்களுக்கு வழி தெரியாவிட்டால் நாங்கள் உடன் வந்து காண்பித்து விட்டுப் பின்பு வீடு செல்வோம்" என்றார் பெரியவர்.

"வேண்டாம்! நானே போய்க் கொள்வேன். அதோ கடலோரத்தில் நிற்கிறதே ஒரு கப்பல்: அதற்கு அருகில் கரையில் எங்கள் கூடாரம்." இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்படத் தயாரானான் குமார பாண்டியன். கடைசியாக அந்தப் பெண்ணின் முகத்தை ஒரு முறை காணும் ஆவலோடு அவன் கண்கள் திரும்பியபோது அவள் கண்கள் அதற்காகவே காத்திருப்பது போல் அவனைப் பருகிக் கொண்டிருந்தன. "இங்கிருந்து என்றைக்கு உங்கள் கப்பல் புறப்படுகிறது?" என்று பெரியவர் அவனைக் கேட்டார்.

"நாளை வைகறையில் நாங்கள் புறப்படுகிறோம்."

"மறந்து விடாதீர்கள். எத்தனையோ எண்ணங்களுக்கு நடுவே எங்களையும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். திரும்பும் போது உங்கள் கப்பல் இந்தப் பாதையாக வந்தால் உங்களை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பை எங்களுக்கு அளியுங்கள்." — பெரியவர் தழுதழுக்கும் குரலில் வேண்டிக் கொண்டார்.

"உங்களை நினைப்பதற்காக நான் அதிகம் துன்பப்பட வேண்டியதேயில்லை, பெரியவரே! இந்தச் சங்கு என் கையில் இருக்கிற வரையில் உங்களையும் உங்கள் பெண்ணையும் நான் நினைக்காமல் இருக்க முடியாது. இதைக் காணும்போது, தீண்டும்போது, ஒலிக்கும்போது உங்களை நினைத்து மகிழ்வேன்."

"அதுதான் எங்களுக்குப் பெருமை! போய் வாருங்கள். வணக்கம்." பெரியவரும், மதிவதனியும் கைகூப்பி வணங்கி விடைகொடுத்தனர். நீண்ட செம்மையான தாமரைப் பூக்கள் இரண்டு அளவாக, அழகாக ஒன்றுபட்டுக் குவிந்தது போல் குவிந்த மதிவதனியின் கூப்பிய கரங்களை, அவற்றின் காட்சியை அப்படியே தன் நினைவில் பதித்துக் கொண்டு திரும்பி நடந்தான் குமார பாண்டியன். போகும் போது கையிலிருந்த சங்கை மார்போடு அணைத்துக் கொண்டான். அவன் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டு அதைச் செய்



தானோ? இரண்டு வழிகளிலும் சென்ற நான்கு கண்கள் சிறிது தொலைவு செல்வதற்குள் எத்தனை முறைகள் திரும்பிப் பார்த்துக் கொண்டன என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

எதிரே சக்கசேனாபதி தேடிக் கொண்டு வந்திருக்கா விட்டால் குமாரபாண்டியனுக்குச் சுய நினைவு வர இன்னும் எவ்வளவு நேரமாகியிருக்குமென்றும் சொல்ல முடியாது.

"இளவரசே! நீங்கள் நாளைக் காலையில் பயணம் செய்ய வேண்டியதை மறந்து இப்படிச் சுற்றிக் கொண்டிருந்தால் உடல் என்ன ஆகும்? போகும் போது சொல்லிக் கொள்ளாமல் வேறு போய் விட்டீர்கள். இரவில் நேரங்கெட்ட நேரத்தில் நான் எங்கே வந்து உங்களைத் தேடுவேன்?"

"சும்மா கடல் ஓரமாகச் சிறிது தொலைவு உலாவி விட்டு வந்தேன்.

பகலில் உறங்கி விட்டதால் எனக்கு உறக்கம் வரவில்லை.''

போன இடத்தில் நடந்த நிகழ்ச்சியை அவன் சக்கசேனாபதியிடம் கூறவில்லை. இருவரும் கூடாரத்தில் போய்ப் படுத்துக் கொண்டார்கள்.

இரவு நேரம் கழித்துப் படுத்துக் கொண்டதனால் காலையில் விடிந்தபோது பொழுது வழக்கத்தைவிட விரைவாகவே புலர்ந்து விட்டது போலிருந்தது. சக்கசேனாபதி விரைவாகவே பயண ஏற்பாடுகளையெல்லாம் முழுமையாகச் செய்து வைத்திருந்தார்.

பொழுது புலர்ந்தும், புலராமலும் மங்கலாக இருந்த நேரத்தில் அவர்களுடைய கப்பல் புறப்பட்டது. காலை நேரத்தின் மணத்தோடு கூடிய ஒருவகை குளிர் காற்று செம் பவழத் தீவின் உயிர்க் குலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக எழுப்பிக் கொண்டிருக்கும் சமயத்தில் அவர்கள் அங்கிருந்து கிளம்பி விட்டார்கள். குமார பாண்டியனும் சக்கசேனாபதியும் கப்பலின் மேல்தளத்துத் திறந்த வெளியில் நின்று கொண்டிருந்தார்கள். மேலே வைகறையின் வான வெளி பாலில் நனைத்துப் பரப்பிய நீலத் துணி போல் எல்லையற்றுப் படர்ந்து கிடந்தது. அந்த வெண்ணீலத் துணியின் கீழ் அடியோரத்தில் நெருப்பு நிறத்தில் சிவப்புச் சரிகை மினுமினுப்பது போல் சூரியன் உதயமாகியது.

இளவரசன் இராசசிம்மனின் கையிலிருந்த பொன்னிற வலம்புரிச் சங்கு அவ்வானத்து ஒளியை வாங்கி உமிழ்ந்த வண்ணம் காட்டியது. ஆட்டமின்றி மெல்ல நகர்ந்து கொண்டிருக்கும் கப்பலின் தளத்தில் நின்றுகொண்டு அந்த அழகைச் சுவைப்பதற்கு ஆசையாக இருந்தது அவனுக்கு.

அந்தச் சங்கு தான் அவன் மனத்துக்கு எவ்வளவு நினைவுகளைக் கொடுத்து உதவுகிறது? அதன் நிறத்தை மட்டும் பிரித்து நினைத்தால் அவனுக்கு மதிவதனியின் நிறம் நினைவுக்கு வருகிறது. அதில் பதித்துள்ள முத்துக்கள் அவள் சிரிப்பு. பவழங்கள் அவள் இதழ்கள். சங்கு வளைந்திருக்கும் இடத்திலுள்ள குழிப்பு அவள் சிரிக்கும்போது கன்னத்தில் விழும் குழிப்பு. அதன் கூம்பிய தோற்றம் அவள் கைகள் செலுத்திய வணக்கம். அந்தச் சங்கை ஏந்தி நிற்கும் அவன் உள்ளங் கைகளுக்கு அவளையே ஏந்திக் கொண்டிருப்பதாக ஓர் இனிய பிரமை.

கரையிலிருந்து யாரோ கைதட்டிக் கூப்பிடும் ஒலி மங்கலாகக் கேட்டது. சங்கை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்த இராசசிம்மன் நிமிர்ந்துதிரும்பிப் பார்த்தான். தீவின் கரையிலிருந்த மணல் திட்டுஒன்றில் மதிவதனி இரண்டு கைகளையும் உயர்த்திக் கொண்டு நின்றாள். அவள் தெரிந்தாள். அவளுடைய சொற்கள் அவனுக்குக் கேட்கவில்லை. அவள் தனக்கு விடை கொடுக்க வந்ததைத் தான் கண்டு கொண்டதை எந்தக் குரலால், எந்த அடையாளத்தால் அவளுக்குத் தெரிவிப்பதென்று தெரியாமல் தயங்கினான் இராசசிம்மன். கப்பல் நகர நகர அவள் உருவம் சிறிது சிறிதாக மங்கியது.

அதேபோல் அவன் உருவமும் அவள் கண்களுக்கு மங்கியிருக்கும். அவன் உயிரைக் காப்பாற்றி உதவிய அந்தப் பேதைப் பெண் தன் நெஞ்சின் அன்பையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து அவனுக்கு விடை கொடுக்கிறாள். அதை ஏற்றுக் கொண்ட நன்றியை எப்படித் தெரிவிப்பது? வார்த்தைகளில் கூறினால் அந்த ஒலி அவள் செவிகளை அடைவதற்குமுன் கடல் காற்று வாரிக்கொண்டு போய் விடும்! அவளைப் போல் கைகளை ஆட்டித் தெரிவிக்கலாமென்றால் அதைப் பார்த்து, ''நீ திரும்பிப் போ!'' என்று அவளைத் துரத்துவதாக அவள் தப்பர்த்தம் செய்து கொள்வாளோ என்று பயம் உண்டாயிற்று.


குமார பாண்டியன் இப்படிக் குழம்பிக் கொண்டிருந்த போது அவன் கையிலிருந்த வலம்புரிச் சங்கு அவனுக்குச் சமயசஞ்சீவியாகப் பயன்பட்டது. அதன் ஊதுவாயில் தன் இதழ்களைப் பொருத்தி, மூச்சை அடக்கிப் பலங்கொண்ட மட்டும் ஊதினான். அந்தச் சங்கொலி கரையை எட்டியிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அவனை நினைத்து நெஞ்சின் ஆழம் வரை வற்றிக் கொண்டிருக்கும் ஒரு பேதைப் பெண்ணின் உள்ளக் கடலை அந்தச் சங்கொலி பரிபூரணமாக நிறைத்துப் பொங்கச் செய்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

கப்பல் வெகு தூரம் வந்து செம் பவழத் தீவின் தோற்றம் மங்கி மறைந்த பின்னும், ''நான் இன்னும் பல முறை இந்தத் தீவுக்கு வரவேண்டும். எந்த வகையிலோ நான் தள்ள முடியாத, தவிர்க்க முடியாத ஒரு கவர்ச்சி என்னை இந்தத் தீவுக்கு மறுபடியும் வரவேண்டுமென்று நினைக்கச் செய்கிறது' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான் குமார பாண்டியன். ''இளவரசே! வெய்யில் அதிகமாகுமுன் கீழ்த் தளத்துக்குப் போய் விடலாம். வாருங்கள்'' என்றார் சக்கசேனாபதி.

முதல் பாகம் முற்றிற்று

கால்கேட் குளோரோபில்* ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப்பலப்படுத்துகிறது.

வாய்நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

வேறு சாதாரண பற்பசையை விட மிக மிகத்தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனுமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற் பசையிலும் இதை விட அதிக வீரிய குளோரோபில் இல்லை!



இதோ! பெரிய எக்கானமி அளவில் கிடைக்கிறது

கோத்ரெஜின்


நங்கூரம் ⚓ மார்க்

புதிய தயாரிப்பு

நவ்-தால்

நவீன பித்தளை பாட்லாக்

60 ஆண்டுகளாக பலவித ரகமான
சிறந்த பூட்டுகள் தயாரித்த முதிர்ந்த
அனுபவத்தைக்கொண்டு, கோத்ரெஜ்
நவ்-தால் பாட்லாக் தயாரிக்கப்பட்டது.
அது உறுதியாகவும், பார்ப்பதற்கு
அழகாகவும் இருக்கும். சிறந்த முறையில்
அதில் அமைக்கப்பட்டுள்ள
இயந்திர நுணுக்கங்கள், இதர சாவிகள்
திறப்பதற்கு இடம் கொடுப்பதில்லை—
நவ்-தால் பாட்லாக்கை
அதற்கென்றே தயாரிக்கப்பட்ட
சாவிதான் திறக்கும்.



★ பித்தளை லீவர்களும் கவசமும்

★ உறுதியான தயாரிப்பு

★ ஆணியால் இறுக்கப்படாதது
கச்சிதமாக மெஷினால் இணைக்கப்
பட்ட உறுதியான ஜாயிண்ட்டுகள்

★ துருவைத் தடுக்கும் காட்மியம்
கோட்டிங் கொடுக்கப்பட்ட
வளையம்

7 லீவர்கள்
சைஸ் : 2½"
ரூ. 8.50 ந. பை. தான்



பாதுகாப்பு
இஞ்சினீரிங்கில்
முதன்மையானவர்கள்

கோத்ரெஜ் ஷோரூம்களிலும், ஸ்டாக்கிஸ்ட்களிடமும்,
இரும்பு சாமான் கடைகளிலும் கிடைக்கும் . . .

அக்காலத்தில் நாங்கள் அனந்தனூரில் குடியிருந்தோம். அனந்தனூரில் ஒரு பாழடைந்த கோட்டையும் இரண்டு துருப்பிடித்த பீரங்கியும் ஒரு நீரில்லா அகழியும் உண்டு. ஆனால் கோட்டைக்குள்ளே கோவிலும் குளமும், ராஜ வீதியும் மிக அழகாக இருக்கும். நாங்கள் கோட்டைக்கு வெளியில், புதுத் தெருவில் குடியிருந்தோம். எங்கள் வீட்டுக்கு மைக்கூடு ராயர் வீடு என்று பெயர். கழுத்தே இல்லாத மைக்கூடுகள் அந்த நாளில் பெரும்பாலும் கையாளப்பட்டு வந்தன. அசைப்பில் ராயருக்கும் அந்த மைக்கூட்டுக்கும் அதிக வேற்றுமை இல்லாததினால் அவருக்கு அந்தக் காரணப் பெயர் பொதுமக்களால் வழங்கப்பட்டு வந்தது.

புதுத் தெருவில் சுமார் முப்பது வீடுகள் இருந்தன. எல்லாம் பழைய வீடுகள்தான். அங்கு வசித்துவந்த அனைவரும் கடைகளிலும், அரண்மனையிலும், கோவிலிலும், பள்ளிகளிலும் அரசாங்கத்திலும் சிறிய தொழில் செய்து வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

தெருக்கோடியில் ஒரு கூரை வீடு இருந்தது. அங்குதான் நான் அ. ஆ. கற்றுக் கொண்டது. கூடல் மணலில்தான் எழுத்துக்களை எழுத வேண்டும். 'அழுத்தி எழுதுங்கள்' என்று வாத்தியார் சொல்வார். சில சமயம் ஆள் காட்டி விரலில் ரத்தம் வந்து விடும். ஏன் வந்தது என்று உபாத்தியாயர் முதுகில் ஒன்று வைப்பார். யார் வீட்டிலாவது பிறந்த நாளோ, திவசமோ வருங்கால் எங்களுக்கு விடுமுறை. அன்று உபாத்தியாயர் அங்கே போய் விடுவார். ஊரில் அடிக்கடி திவசங்கள் வர வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திப்போம். சில சமயம் பிற்பகலில் வீடு வீடாகச் சென்று பையன்களை அழைத்துக் கொண்டு போய்ப் பள்ளியை நடத்துவார். நாங்கள் 'அறம் செய்ய விரும்பு' என்று அலறுவது தெருவெல்லாம் கேட்கும். இந்த ஓசையில் தேவர்கள் மறை மந்திரத்தில் மகிழ்வது போல், எங்கள் தாய் தந்தையர் மகிழ்வார்கள். அடிப்பதில் எங்கள் வாத்தியார் அதிமேதாவி. அங்கிங்கெனாதபடி எங்குமே அடிப்பார். காதைத் திருகுவதில் கை தேர்ந்தவர். அப்பொழுது மூன்றடியிருக்கும் பையன் ஐந்தடியாக உயர்ந்து விடுவான். பிற்காலத்தில் தோன்றிய ''லத்திசார்ஜ்'' செய்யும் போலீசாரைப் போல் கைபட்ட இடத்தில் காயமாகும்படி மொத்தி விடுவார்.

பள்ளிக்கூடத்துக்கு எதிரே அச்சுக்கூடத்து மாமா குடியிருந்தார். அவருக்குக் குழந்தை கிடையாது. திண்ணையில் உட்கார்ந்து கொண்டு எங்களைப் பார்த்து, ''அம்பி! இங்கே வா'' என்பார். நாங்கள் போனதும் 'கண்ணை மூடிக்கோ'' என்பார். மூடிக் கொள்வோம். ''கண்ணைத் திற'' என்பார். திறப்போம். உடனே அவர் கையில் சிவப்பும் மஞ்சளுமாக ஐந்தாறு மிட்டாய்கள் இருக்கக் காண்போம். அதை ஒவ்வொன்றாகப் பையன்களுக்குக் கொடுப்பார். மாமா அதிகமாகப் பேசுவதே கிடையாது. ஆனால் அவரைப் பற்றி எங்கள் தாய் தந்தையர் பேசுவதை நாங்கள் கவனித்துக் கேட்டு வருவோம். ''போடா, வெளியே!'' என்று அதட்டினால் கதவோரம் நின்று கேட்போம்.



பவுன் மாலை

எஸ். ஒய். கிருஷ்ணசாமி

மாமா திருநெல்வேலி ஜில்லாவில் சடையபுரத்தைச் சேர்ந்தவராம். அரசாங்கப் பள்ளியில் 'டிராயிங்' வாத்தியாராக வந்தார். அவருடைய முதல் மனைவி சீதாதேவி மாதிரியாம். 'ஒரு கட்டுத் தலையும், எள்ளுப் போல மூக்கும், காந்திமதி வந்தாலே விளக்கேற்றி வைத்தாற் போல் இருக்கும்' என்பது என் தாயார் அபிப்பிராயம்.

அவள் இறந்த பிறகு வெகு நாட்கள் வரையில் மாமா பித்துப் பிடித்தாற் போல் இருந்தார். ஊரிலேயே இருப்பதில்லை. வேலையை ராஜினாமாக் கொடுத்து விட்டார். பாதி நாட்களும் வீடு பூட்டி இருக்கும். ''என்ன அன்பு, என்ன அன்யோன்யம்!'' என்று அனைவரும் மாமாவைப் புகழ்ந்தனர்.

ஒரு நாள் மாலையில் மாமா வீட்டில் விளக்கு எரிவதைக் கண்ட தெரு நண்பர்கள் அவரைப் பார்க்கப் போனார்கள். வீட்டுக்கு வந்திருக்கும் புது லட்சுமியைக் கண்டு ஆமோதித்தார்கள். ஆனால் என் தாயாரும் வேறு பெண்களும் அவளை ஆதரிக்கவில்லை. 'பெருமைக்காரி. பேசினால் முத்து உதிர்ந்து விடும் என்று பயம் போல் இருக்கிறது' என்றாள் என் தாயார். 'பேசாமல் போய் உன் வேலையைப் பார்' என்றார் என் தந்தை.

மாமா வீடு மறுபடியும் கலகலப்பை அடைந்தது. மாமாவும் எங்களுடன் கண்மூடி விளையாட்டை ஆரம்பித்தார். முன்னை விட அதிகம் பேசத் தொடங்கினார். மாமா இப்பொழுது அச்சாபீஸில் வேலை ஒத்துக் கொண்டார். சித்திரங்களை அச்சிடுவதற்குச் செப்புத் தகடுகளைச் செதுக்குவதில் மாமா நிபுணர் என்று நான் கேள்வியுற்றேன். 'சிலேட்டுப் பலகையைக் கொடு' என்பார்; கொடுப்போம். ''என்ன வேண்டும்?'' என்பார். ''புலி'' என்போம். உடனே ஒரு மரம் நிறைந்த காட்டின் நடுவிலே நிற்கும் புலியை வரைந்து காட்டுவார். திடீரென்று

உள்ளே போய் ஏதோ பேசி விட்டு வெளியே வருவார். அப்பொழுது இவர் குரல் கீழாகவும், இவர் மனைவியின் குரல் மேலாகவும் கேட்கும். "என்னடா சொன்னார், மாமா?" என்று என்னைக் கேட்பாள் என் தாயார்.

"குழந்தையிடம் இதெல்லாம் கேட்டால் மண்டையை உடைத்து விடுவேன்" என்பார் என் தந்தை, அன்புடன்.

பிறகு நான் தாயாரிடம் தனியாகப் போய் நடந்ததைச் சொல்வேன். "ஒற்றை வடச் சங்கிலியாவது வேணுமாம். ஊரெல்லாம் சிரிக்கிறதாம், கிழத்தைக் கட்டிக் கொண்டு என்னத்தைக் கண்டேன்? என்று சொன்னாள் அம்மா!" என்றேன். 'அவர் என்ன சொன்னார்?' என்று என் தாயார் கேட்-



டாள். "கத்தாதே, தெருவெல்லாம் கூடிவிடும் என்றார்" என்றேன்.

ஒரு நாள் மாமா திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் மனைவி உள் கூடத்தில் அழுது கொண்டிருந்தாள். "ஏன் மாமா, அழுகிறாள்?" என்று கேட்டேன். "அவளுக்கு இந்திரனும் சந்திரனும் வேண்டுமாம்!" என்றார். எனக்கு இதன் மர்மம் தெரியவில்லை.

மற்றொரு நாள் இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அவர் மனைவி ஒரு பவுன் மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டிருந்தாள். "மகாலக்ஷ்மி மாதிரி இருக்கு!" என்றார் மாமா. "சும்மா இருங்கோ" என்றாள் மாமி. இடது கைவிரலினால் ஒவ்வொரு பவுனையும் நிரடி அனுபவித்துக் கொண்டு மகிழ்ந்திருந்தாள்.

என்னிடம் கூடப் பேசினாள். "இன்று மாலையில் ஆபீசிலிருந்து மாமா வரும் பொழுது தெருக் கோடியில் ஒருவன் மாமாவைக் கைகாட்டிக் கூப்பிட்டானாம். ஒரு மூலைக்கு அழைத்துச் சென்று தன் துணியில் போட்டிருந்த முடிச்சை அவிழ்த்து இந்தப் பவுன் மாலையைக் காண்பித்தானாம்!" என்று கூறினாள்.

"இதெல்லாம் குழந்தையிடம் எதற்கு?" என்று குறுக்கிட்டார் மாமா.

"பார்த்தீர்களா? வந்து விட்டீர்களே!" என்றாள் மாமி.

"இல்லை, இல்லை!" என்றார். மாமி திரும்பவும் பேசலானாள்.

"அப்பொழுது அவன் தன் குடும்பத்தில் ஒரு பெரிய கஷ்டம் வந்து நகை நட்டு எல்லாம் ஒவ்வொன்றாக விற்று வருவதாகச் சொல்லி அழுதானாம். இவருக்குத்தான் கோழை மனம் ஆச்சே. உடனே அவனை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டார். சிறிது பேரம் பேசக் கூடாதோ? பாதி விலைக்குத் தருவதாகச் சொன்னான். உடனே இவர் சரி என்று விட்டார். நோட்டு நோட்டாக எண்ணி அவன் கையில் கொடுத்தார்" என்று கூறினாள்.

மாமிக்கு வயது பதினேழு அல்லது பதினெட்டு இருக்கும். எனக்கு வயது ஏழு. அன்று மாமாவிடம் எனக்குச் சிபாரிசு கூடச் செய்தாள். "வெறும் கையோடு குழந்தையை அனுப்பாதீர்கள்" என்றாள். எனக்குக் கை நிறைய பப்பர்மின்ட் கிடைத்தது. மாமி எப்படி இருந்தாள் என்று இப்பொழுது நினைத்தால் ஏதோ சின்னவளாக மணி அடித்தாற் போல் பேசுவதுதான் நினைவுக்கு வருகிறது. பெண்களைப் பார்க்கும் கண்கள் எனக்கு அப்பொழுது இல்லை. என் கண்ணுக்குச் சிலர் மாமிகளாகவும் சிலர் பாட்டிகளாகவும் தோன்றினார்கள்.

பவுன் மாலை கிடைத்ததிலிருந்து மாமிக்கு ஒரே குதூகலம். தினந்தோறும் மாலையில் ஒரு சிறிய காசி ஸ்தாலியில் நல்லெண்ணெய் எடுத்துக் கொண்டு தெருக்கோடியிலிருந்த சிவன்கோவிலுக்குப் போக ஆரம்பித்தாள்.

"சடையபுரத்து அவர் இருக்கிறாரே, மனைவிக்குப் பவுன் மாலை போட்டிருக்கிறார்" என்றாள் என் தாயார்.

"ஊம்" என்றார் என் தந்தை.

"இருபது பவுன் இருக்கும்" என்றாள் என் தாயார்.

"ஊம்" என்றார் மறுபடியும் என் தந்தை.

"முந்நூறு ரூபாய்க்கு மேலேயே இருக்கும்" என்றாள் என் தாயார்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்றார் என் தந்தை.

"இல்லை, சொன்னேன்!" என்றாள் என் தாயார்.

"சரி" என்றார் என் தந்தை.

இவ்வாறு அர்சாயில் மாமாவும் மாமியும் ஆனந்தமாய் இருக்க, வேறு வீடுகளில் சண்டைகள் மேலிட ஐந்தாறு தினங்கள் கழிந்தன. ஒரு நாள் மாலையில் நான் மாமா வீட்டுப் பக்கம் போனேன். உள்ளிருந்து மாமி அழும் குரல் கேட்டது. வீட்டுக்குள் சென்றேன்.

கூடத்தில் தலைவிரிகோலத்துடன் மாமி தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். மாமா வாய் திறவாமல் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தார். மாமியின் கையில் பவுன் மாலை இருந்தது. ஆனால் அது பவுன் நிறம் போய்ப் பித்தளை வர்ணமாக இருந்தது.



"எனக்குப் பித்தளை மாலை வாங்கிப் போட்ட வைபவத்தைச் சொல்லி அழுவதற்குப் பிறந்தகம் இல்லையே?" என்றாள் மாமி.

"நான் ஏமாந்தல்லவா போய்விட்டேன்!" என்றார் மாமா.

மாமி மாலையை முற்றத்தில் விட்டெறிந்தாள். மாமா அதைப் பொறுக்குவதற்குப் போகவில்லை.

'நான்தான் ஏமாந்தவள். கல்யாணத்தின் போது வாயால் பாயசம் வைத்தீர்கள். நாளைக்கு இரும்பிலே காப்பும் கொலுஸும் வாங்கிப் போடுங்கோ. அதையும் போட்டுக் கொண்டு கோவிலுக்குப் போகிறேன்" என்று திரும்பவும் அழ ஆரம்பித்தாள்.

மாமா முகத்தில் ஈ ஆடவில்லை. சற்றே சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு மாமியின் கிட்டே வந்து ஒரு கையைத் தொட்டார். மாமி கையைப் பல்லி விழுந்ததென உதறினாள்.

"கோபித்துக் கொள்ளாதே" என்றார் மாமா. மாமிக்குக் கோபம் குறையவில்லை.


"என்னைச் சந்தையில் விலைக்கு வாங்கினீர்கள். பட்டாளத்துச் சிப்பாய் மாதிரி நில் என்றால் நிற்கணும். போ என்றால் போகணும். நான் எங்கே சுடுகாட்டுக்குப் போகப் போகிறேன். ஒருநாள் பாழும் கிணறுதான் எனக்குக் கதி" என்றாள், அழுகைக்கு இடையே.

இவ்விதம் பிரதிக்ஞை முற்றிவிடவே மாமா பயந்து விட்டார்.

"சரி, நாளைக்கு நிஜமான 'பவுன் மாலை' வாங்கி வருகிறேன். நீ அழாதே" என்றார்.

மாமி அழுகையை நிறுத்தினாள். கண்ணை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

இருவரும் என்னிடம் அன்பாகப்பேசி மாலையைப்பற்றி நான் ஒருவரிடமும் சொல்லக் கூடாதென்றும், அவ்வாறு நான் ரகசியத்தைக் காப்பாற்றினால் எனக்குத் தினந்தோறும் பப்பர்மிண்ட் தருவதாகவும் சொன்னார்கள். நான் 'சரி' என்றேன். என்மனத்தில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. அம்மாவிடம் சொன்னால் இரண்டு விட்டிலும் வெகுமதி கிடைக்கும் என்று எண்ணினேன். ஆனால் அது தவறு என்று தெரிந்தது. அம்மா ஒரு நாள் ஏதாவது கொடுப்பாள். மாமா அடி



யோடு நிறுத்தி விடுவார். ஆகையால் சிந்தனையை அடக்கியே சும்மா இருப்பது நலம் என்று தீர்மானம் செய்து கொண்டேன். மேற்கூறிய நிகழ்ச்சி நடந்து பத்து நாட்கள் கழிந்த பிறகு, ஒரு நாள் மாலையில் மாமா வீட்டுக்கு முன் ஒரே கூட்டமாக இருந்தது. இரண்டு போலீஸ் ஜவான்கள் ஒரு கைதிக்குக் கையில் விலங்கிட்டு அழைத்து வந்திருந்தார்கள். மாமா திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். மாமி ரேழியில் கதவோரம் நின்று கொண்டிருந்தாள். கள்ள நோட்டைக் கடையில் மாற்றுவதற்குப் பிரயத்தனம் செய்ததாக அவன் மீது குற்றம் என்று பேசிக் கொண்டார்கள். கைதி அலறிக் கொண்டிருந்தான். "இதோ, கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே, இவர்தான் அந்த நோட்டை எனக்குக் கொடுத்தார்" என்றான்.

மாமா அவன் சொன்னதைக் கேட்டதாகவே காண்பித்துக் கொள்ளவில்லை.

"இவருக்குத் தங்க முலாம் பூசின ஒரு பித்தளை மாலையை விற்றேன். இதோ அந்த அம்மா கழுத்திலே பாருங்கள், நான் கொடுத்தமாலை" என்றான் கைதி மறுபடியும்.

மாலையை வாங்கிப் போலீசார் பார்த்தார்கள். இரண்டு மூன்று ஆட்களிடம் பரிசீலனைக்குக் கொடுத்தார்கள். அவர்களும் பார்த்து விட்டுத் திருப்பவும் மாமியிடம் கொடுத்து விட்டார்கள்.

"நான் ஏன் பித்தளை மாலையை வாங்குகிறேன்? இது தங்க மாலை. ராஜுச் செட்டியார் கடையில் வாங்கியது. வேண்டுமானால் நீங்களே விசாரித்துப் பாருங்கள்" என்றார் மாமா.

போலீசார் கைதியை இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள். மாமா மாமியைப் பார்த்துப் புன்னகை செய்தார். மாமி மாமாவைப் பார்த்து 'அட பாவி பிராமணா' என்று கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.


வீட்டுக்கும் கைத்தொழிலுக்கும்
சேவை செய்கின்றன...
பிரபாத்
பிராடெக்ஸ்
பிரபாத் பிரஷர் குக்கிங் ஸ்டவ்கள் வீட்டில் மனைவியின் சமையல் வேலையை எளிதாக்குகின்றன. பிரபாத் லாந்தல்கள் மின்சாரமில்லாத வீடுகளை பிரகாசிக்கச் செய்கின்றன. பெரிய தொழிற்சாலை, சிறியது ஆகிய இரண்டுக்கும் பிரபாத் புளோ லாம்புகள் இன்றியமையாத்தேவையாக இருக்கின்றன. உண்மையில் "பிரபாத் பிராடெக்ஸ்" என்ற சொற்றொடர் வீட்டிலும் கைத்தொழிலும் பிடிபதமாக விளங்கி வருகிறது.
"இந்தியாவின் முதன்மையானவை இன்றும் முதல் தரமானவை"
Prabhat
பிரபாத் (ஸ்டவ் & லாம்ப்ஸ்) பிராடெக்ஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
K. S. K.



அகண்ட முருகநாம ஜபயக்ஞ மலர்

முருகநாமம் 'முருகா' என்றாலே இனிக்கும். இடைவிடாது 24 மணி நேரம் சொன்னால் எப்படி இருக்கும் என்று கேட்கவா வேண்டும்? ஸ்ரீ முருகன் ராஜகோபாலன் என்பவர் இப்படிச் செய்து பார்த்தார். 1954-ம் ஆண்டில் பலர் அவருடன் சேர்ந்து இந்த இன்பத்தை அனுபவித்தனர். அடுத்த ஆண்டு அதே போல் நடத்தினர். ஆனால் மூன்று நாட்கள் நடந்தன. அதற்கடுத்த வருஷம் ஆறு தினங்கள் லக்ஷார்ச்சனை, இசை அரங்குகள், சொற்பொழிவுகள், அன்னதானம் முதலியவைகளுடன் சிறப்புற நடந்தன. அதற்கடுத்த ஆண்டு, சென்றவருஷம், எட்டு தினங்கள் நடந்த இந்த யக்ஞம் ஒரு விழா போலவே நிகழ்ந்தது. இந்த வருஷம் இது இன்னும் விரிவடைந்தது. இந்த யக்ஞத்தை யொட்டி ஒரு புஷ்ப மலரும் மலர்ந்திருக்கிறது. அடுத்த வருஷம் (1959) இந்த மஹோத்ஸவத்தை மேலும் விரிவான முறையில் நடத்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. முருகன் கருணை! அவ்வாறே குறைவின்றி நிறைவேறும் என்பதில் ஐயமில்லை. இந்த மகோத்ஸவத்தில் எல்லோரும் கலந்து கொள்ளலாம். இந்த யக்ஞமலர் வேண்டுவோர், சென்னை மயிலாப்பூரிலுள்ள 40, புதுத் தெருவிலிருக்கும் ஸ்ரீ எம். ராஜகோபாலனிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். பொருளுதவி யளிக்க விரும்புவோர்கள் இந்த விலாசத்துக்கே நன்கொடை அனுப்பலாம்.

தாழம்பூ

சாதாரணமாக, பத்திரிகைகளில் சிறுகதைகளும் தொடர்கதைகளும்தான் அதிகம் இடம் பெறுகின்றன; ஏன், இன்றியமையாத அம்சங்களாகவே அவை விளங்குகின்றன. ஆனால், கட்டுரைகளுக்கு அவ்வளவு மவுசு இருப்பதில்லை. பெரும்பான்மையான வாசகர்கள் கதை வாசிப்பதையே விரும்புகின்றனர். கதையில் வரும் பாத்திரங்கள் கற்பனைப் பாத்திரங்களானாலும், உடலும் உயிரும் பெற்ற உண்மை மனிதர்களாகி, வாசகர்களின் உள்ளத்தோடு ஒன்றி விடுகிறார்கள். கட்டுரையை அவ்வளவு சுவை உள்ளதாகச் செய்வது மிகவும் கடினமான காரியம். மேலும், கட்டுரை எழுதுபவர் ஒரேயடியாகக் கற்பனையிலேயே கட்டுரை எழுதிவிட முடியாது. பல உண்மைகளை ஆதாரமாகக் கொண்டுதான் எழுத முடியும். உண்மைகளுக்குக் கற்பனை மூலாம் பூசுவது சற்றுச் சிரமமான காரியம்தானே!

இதை நினைத்துப் பார்க்கும்போது கட்டுரை எழுத்தாளர் பிரசித்தி பெறுவது எவ்வளவு சிரமம் என்பதை எளிதில் உணரலாம். கதாசிரியனுக்கு இன்னொரு சௌகரியமும் இருக்கிறது. ஒரு கதையைத் தொடங்கி மாதக்கணக்கில் எழுதிக்கொண்டே போகலாம். கட்டுரை அப்படியல்ல. ஒரு கட்டுரை தனிச் சின்னச் சின்னதாக எழுதி முடிப்பதோடு, கண்ணுக்கும் கருத்துமாயிருக்க வேண்டும்.

இந்தக் ''தாழம்பூ''வில் அடங்கியிருக்கும் கட்டுரைகளில் சில கதைப் பாணியைப் பின்பற்றிப் படைப்பவர்கள் மனத்தில் மணக்கின்றன. கட்டுரையையும் கதைமாதிரி சுவைத்துப் படிக்கும்படி செய்ய முடியும் என்பதற்கு மேற்படி கட்டுரைகள் சான்று பகருகின்றன.

'தாழம்பூ' 'பலாப்பழம்,' 'முத்துக்கள்' முதலிய கட்டுரைகள் அசல் கட்டுரைகளுக்கு இலக்கணமாக விளங்குகின்றன. 'புலிக்கு வந்த புகழ்' புலியைப் பற்றிய தினுசான விஷயங்களைக் கூறிச் சுவையூட்டுகிறது. 'கல்யாணப் பரிசு' 'அடுத்த வீட்டுக் கல்யாணம்,' 'கன்னூர் கந்தசாமி' 'லட்சியத்தின் தோல்வி' முதலிய கட்டுரைகள் கதைப் பாணியில் அமைந்திருக்கும் கட்டுரைகள். எல்லாக் கட்டுரைகளிலும் நகைச்சுவை இரண்டறக் கலந்து இன்பமூட்டுகிறது.

''மகரம்'' கட்டுரை எழுதுவதில் திறமை பெற்றிருப்பதோடு மட்டும் அல்லாமல் தமக்கென ஒரு தனி வழியையும் வகுத்துக் கொண்டுவிட்டார். அந்தத் தனிவழியில் பூத்த 'தாழம்பூ' மணங்கமழ்ந்து எல்லோரையும் மகிழ்விக்கிறது.

'கலி' அவர்களின் முகவுரையே அரியதொரு கட்டுரையாக அமைந்து மணங்கமழுகிறது.

பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, தபால் பெட்டி நெ. 617, மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 1-50.

நாடோடி தொகுத்த வினோபாவின் பொன்மொழிகள்

நாடோடியின் ஹாஸ்யக் கட்டுரைகளை, வாழ்க்கையில் அன்றாட நிகழ்ச்சிகளில் காணும் ஹாஸ்யத்தைத் தமக்கே உரிய நடையில் வடித்துத் தரும் நாடோடியின் கட்டுரைகளைப் படித்தவர்கள் இவர் வினோபாவின் பொன்மொழிகளைத் தொகுக்கும் பணியில் எப்படி ஈடுபட நேர்ந்தது என்று வியக்காமல் இருக்க முடியாது. சற்றுக் கூர்ந்து யோசித்தால், ஹாஸ்யம் என்பதே கம்பீரமான விஷயத்தின் மறு உரு தான் என்பது புலப்படும்.

வினோபா அடிகள் காலையிலும் மாலையிலும் மௌனப் பிரார்த்தனைக்குப் பிறகு சொல்லும் சொற்பொழிவுகள் அறிவுக்கும், சிந்தனைக்கும் விருந்தாக அமையக் கூடியவை. அவர் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, நிகழ்த்திய உரைகளைக் கேட்டுத் தமிழ் மக்கள் பயனும் வியப்பும் அடைந்தனர். அவர் கருத்துக்களை எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள் என்று சொல்ல முடியாது.

காற்று நீர்போல் புதிது புதிதாகப் பெருக்கெடுத்து வரும் அவரது கருத்துக்கள் கேட்

போரை ஆகர்ஷிக்கக் கூடிய சக்தி பெற்றவை: அந்தச் சக்தியில் கட்டுண்டுதான் நாடோடி அவர் கருத்துக்களைத் தொகுத்து அழகாக வெளியிட்டிருக்கிறார்.

"பலவிதப் பொருள்கள் உழைப்பினாலேயே உற்பத்தியாகின்றன. ஆனால் இந்தச் சமூகத்தில் உழைப்பவர்கள் ஒரு சாராராகவும், திட்டமிடுவோர் வேறு ஒரு சாராராகவும் இருக்கின்றனர். உழைப்போர் ஒருவராகவும் திட்டமிடுவோர் இன்னொருவராகவும் இருந்தால் காரியம் நடக்காது."

"இந்தியாவில், மரியாதையை மிக உன்னத ஸ்தானத்தில் வைத்திருக்கிறோம். இராமசந்திர மூர்த்தியை மரியாதையின் சிகரமாக எண்ணுகிறோம். சுதந்திரத்தை விட மரியாதைக்கு மதிப்பு அதிகம் கொடுக்கிறோம். ஆகையால் உரிமையைப் பற்றிப் பேசாமல் கடமையைப் பற்றிப் பேசுகிறேன்."

"மனிதனுக்கும் மிருகத்துக்கும் என்ன வித்தியாசம்? மிருகங்களுக்கும் குட்டிகள் உண்டு. மனிதர்களுக்கும் குழந்தைகள் உள்ளன. மனிதர்களைப் போல் மிருகங்களும் நோயாகப் படுக்கின்றன; இறக்கின்றன: அப்படியிருந்தும் நம்மை யாராவது 'நீ குதிரையாக மாறிவிடு' என்று சொன்னால் ஒப்புக் கொள்வோமா?

"நல்ல குதிரைக்கு நன்கு உணவளிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் குதிரையாக ஆக நாம் விரும்ப மாட்டோம். கஷ்டப்பட்டாலும் மனித ஜன்மத்தை அடைவதையே விரும்புவோம். ஏனெனில் நாம் மனிதப் பிறவியில்தான் சேவை செய்ய முடியும்; தியாகம் செய்ய முடியும். வறுமை மிருக்கின்ற இடத்தில் மட்டுமல்ல, செல்வம் மிகுந்த இடத்திலும் பலவித பாவச் செயல்கள் நடைபெறுகின்றன. ஆகையால் சுகம், துக்கம் இரண்டிலிருந்தும் எட்டி நிற்கும்போதுதான் மனிதனுக்கு அமைதியும் ஆனந்தமும் ஏற்படுகின்றன."

இப்படிப் பலவித கருத்துக்களை நாடோடி அருமையாகத் தொகுத்துச் சிறப்பாக வெளியிட்டிருக்கிறார்.

கிடைக்குமிடம்: காமதேனு பப்ளிகேஷன்ஸ், சென்னை—20. விலை; ரூ. 5.

தமிழ்கூறும் நல்லுலகம்

அக்டோபர் 19உ. வன்று பம்பாய் வாழ் தமிழர்களின் சார்பில், சிசர்ஸ் பாங்க் நூல் நிலையம், கோரேகான் தமிழ்சங்கம், மாதுங்கா லேபர் கேம்ப் தமிழர் சங்கம், ஐக்கிய தமிழர் சங்கம், தமிழரசுக் கழகம், பம்பாய் தமிழர் மன்றம் ஆகிய ஸ்தாபனங்கள் ஒன்றுசேர்ந்து மாதுங்கா ஸ்ரீ குஜராத்தி சேவாமண்டல் ஹாலில் திரு நாராயணசாமி அவர்கள் தலைமையில் "வீரபாண்டிய கட்டபொம்மன் தினத்தை" மிகச் சிறப்பாகக் கொண்டாடின.

அன்று பேசிய பிரதிநிதிகள் கட்டபொம்மனின் வீர வாழ்வையும், சுதந்திரத்துக்காக அவன் முதல் முழக்கம் செய்த சிறப்பையும் பாராட்டிப் பேசினர்.

*

நடந்த 24-9-58 புதனன்று டேராடூன் தட்சிண பாரத சங்கத்தின் ஆதரவில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தென்னாட்டிலிருந்து முஸோரியில் 22ம் தேதியிலிருந்து நடைபெற்ற மத்திய காட்டிலாகா குழுவின் கூட்டத்துக்காக வந்திருந்த சென்னை விவசாய அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்களையும் மைசூர் விவசாய அமைச்சர் திரு கே. எப். பாடில் அவர்களையும் அழைத்துக் கௌரவித்தனர். அந்த நிகழ்ச்சிக்கு உத்தரப் பிரதேச கவர்னர் திரு வி. வி. கிரி அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.


தேநீர் விருந்துக்குப் பின் ஸ்ரீமதி லலிதா நடராஜன் இனிய இறை வணக்கம் பாட, நிகழ்ச்சி துவங்கியது. சங்கத் தலைவர் திரு எம். பி. ராமச்சந்திர ராவ் விருந்தினர்களை வரவேற்றுப் பேசினார். கவர்னர் திரு கிரி சங்கத்தின் தொண்டினையும், அவசியத்தையும் பாராட்டி, நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். திரு கே. எப். பாடில், திரு எம். பக்தவத்சலம் அவர்களும் அதையே தொடர்ந்து அறிவுறுத்தினார்கள். உப தலைவர் டாக்டர் ஏ. புருஷோத்தமன் வந்தனோபசாரம் கூற, ஸ்ரீமதி கிருஷ்ணசாமியின் தேசிய கீதத்துடன் விழா இனிது முடிந்தது.

*

இந்தோரிலுள்ள தென்னிந்தியர்கள் இவ்வருட விஜயதசமியைச் சிறப்பாகக் கொண்டாடினர். அன்று திருமதி லலிதா சாமண்ணா அவர்களின் மூன்றுமணி நேரக் கச்சேரி முதல் தரமாக அமைந்திருந்தது. அவர் கணீரெனப் பாடி எல்லோரையும் மகிழ்வித்தார். திரு ரவீந்திரன் பக்கவாத்தியம் வாசித்துக் கச்சேரியை இன்னும் சிறப்பித்துக் கொடுத்தார்.

*

யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் விசேடப் பொதுக்கூட்டமொன்று சென்ற 4-10-58 சனிக்கிழமை யாழ்ப்பாணம் பாரதி பாஷிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் சம்பந்தன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். "தமிழில் நல்ல சில சிறுகதைகள்" என்பது பற்றித் திரு சிற்பி அவர்கள் பேசினார்கள். அதைத் தொடர்ந்து நடந்த விவாதத்தில் திருவாளர்கள் கே. டானியேல், கனக. செந்திநாதன், டொமினிக் ஜீவா, இ. நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகத் தமிழ் எழுத்தாளர்கள் சிங்களப் பகுதிகளுக்கும் சிங்கள எழுத்தாளர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கும் நல்லெண்ணத் தூது செல்ல வேண்டுமென்னும் தீர்மானமும் நிறைவேறியது.



ரூ. 7.75 விலைக்கு உடைபடாத நிப்புடன் கூடிய சுயமான "வில்ஸன்" பேனா கிடைக்கிறது

நெடுங்காலத்திற்கு எழுதி இன்பமடைய வில்ஸன் 'அமர்' பவுண்டன் பேனா ஒன்று வாங்குங்கள். வெறும் வர்ண எழிலுக்கும் சரி, திறமையான அமைப்புக்கும் சரி, வில்ஸன் 'அமர்' பேனா ஈடிணையற்றது. 5 வருஷ உத்தரவாதமுள்ள, பொன் முலாமிடப்பட்ட ஆஸ்மி-இரிடிய-முனையுடன் கூடிய நிப்புதான் வியக்கத் தக்க அதன் சேவைக்கு மூல காரணம்.

சேதமடையா நிப்பு உடையாது.

எழுதுவதற்குரிய பொருள்களை விற்கும் எல்லா சிறந்த வியாபாரிகளிடமும் பொறுக்கி எடுத்த வசீகர வர்ணங்களிலும், பல மாதிரிகளிலும் கிடைக்கின்றன.





கிரண் அண்டு கம்.
பம்பாய் - சென்னை - டில்லி

பூர்ண திருப்திக்கு வில்ஸன் வாங்குங்கள்

KC-58.1A.TM. EVEREST



என் கதை

வாண வரிசைகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"என்ன ரமணி, உஷா நீங்கள் இரண்டு பேரும் நன்றாகத் தூங்கி விட்டீர்களே!" என்று கேட்டுச் சிரித்தது விஷ்ணுசக்கரம்.

"உங்கள் கதை ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது. அப்படியே தூக்கமும் வந்து விட்டது போலிருக்கிறது" என்றார்கள் ரமணியும் உஷாவும்.

"எங்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றனவே" என்றன வாணங்களும் வெடிகளும்.

"இனி தூங்க மாட்டேன், சொல்லுங்கள்" என்றான் ரமணி. விஷ்ணுசக்கரம் வேகமாக ஒளிப்பூக்களை உதிர்த்தபடி சுழன்று கொண்டே தங்கள் இனத்தவரின் கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தது.

"உலகின் பல்வேறு நாடுகளிலும் இந்திய நாட்டுத் தீபாவளியைப் போல் வாண வேடிக்கைகள் நடத்தி மகிழ்வதற்கு ஒரு குறிப்பிட்ட பண்டிகையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எங்களுக்கு உலகம் முழுவதிலுமே வரவேற்புத்தான்.

"பொது நோக்கில் மனித சமூகம் ஒன்றானாலும், மதத்தினாலும் ஜாதியினாலும் இனத்தாலும் மனிதர்களில் எப்படிப் பல பிரிவுகள் இருக்கின்றனவோ அவற்றைப் போல எங்கள் உடலுக்குள் இருக்கும் மருந்துக் கலவை ஒன்றானாலும் உருவத்திலும் அமைப்பிலும் எங்களில் பல வகைகள் உண்டு" என்றது தன்னைத் திருமாலின் சக்கரமாகவே எண்ணிக் கொண்டு விட்ட விஷ்ணு சக்கரம்.

உடனே பூச் சொரியும் பென்சில் பேசியது- "வாண வகைகளிலே எங்கள் இனம்தான் சாதாரணமானவை. எங்களுக்குள்ளே இருக்கும் மருந்தும் அதைக் காத்து நிற்கும் காகிதச் சுருளும் சேர்ந்து எரிந்து ஒளி உண்டாக்கும் வகையைச் சேர்ந்தவர்கள் நாங்கள். உங்கள் ஊர்த் திருவிழாவிலே ரிஷப வாகனத்தின் போதும் தெப்ப உற்சவத்தின்போதும் பச்சையும், சிவப்பும், மஞ்சளுமான ஒளிகளை உமிழ்ந்தபடி தோரணம் போலக் கட்டப்பட்ட வாண வரிசையை இரண்டு பேர்கள் பிடித்துக் கொண்டு போவார்களே, அதுவும் எங்கள இனத்தைச் சேர்ந்ததுதான்!"

அவுட்டும் ஆகாசவாணமும் கலசமும் ஏக காலத்தில் பேசின. "நாங்களெல்லாம் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் உடலின் வெளிப்புறம் (குழாய்) உறுதியான பொருளால் ஆனது. உள்ளே கெட்டித்து வைக்கப்பட்டிருக்கும் மருந்துக்குத் தீ வைத்ததும் குழாயிலிருந்து விடுதலையடைய நாங்கள் குமுறிக் கொண்டு கிளம்புவோம். ஆனால் வெளியேற ஒரே ஒரு சிறிய துவாரந்தான் இருக்கும். ஆகவே அதன் வழியாக உங்களையெல்லாம் காண வேண்டும் என்ற ஆவலிலே வெகு வேகமாகப் பீறிட்டுக் கொண்டு வெளியே வருவோம். நட்சத்திரப் பூக்களை வாரி இறைப்போம். நாங்கள் அடைபட்டுக் கிடந்த சட்டிக்கோ, அட்டை, மூங்கில் குழல்களுக்கோ எவ்விதச் சேதமும் இருக்காது.

"அவுட்டும் ஆகாச வாணமுமான நாங்கள் வானத்தை நோக்கி வெகு வேகமாகப் போய்ப் 'படார்' என்று வெடித்து விதவிதமான வர்ணப் பூக்களை எப்படி உதிர்க்கிறோம் என்று நீ ஆச்சரியப் படுகிறாய் இல்லையா? கலசம் சொன்னது போலவே எங்கள் உடலிலுள்ள மருந்துக்குத் தீ மூட்டியதும் நாங்கள் வெளிப்படும் வேகத்திலே ஆகாயத்தை நோக்கிச் சீறிக் கொண்டு போகிறோம். போகும் வேகத்தோடு எங்கள் உச்சி மீதுள்ள இன்னொரு அறையில் இருக்கும் வர்ணப் பூக்களைக் கொட்டும் மருந்துக்கும் தீ மூட்டி விடுவோம். அவைகள் தங்களை அடைத்து வைத்திருக்கும் மூடியை உடைத்துக் கொண்டு வான வெளியிலே ஜ்வலிக்கும் நட்சத்திரப் பூக்களைச் சிதற விட்டுச் சிரிக்கும்.

"ஆகாசவாணத்திலே எத்தனையோ வகைகள் உண்டு. 'உஸ்' என்று வானத்திலே சீறிச் செல்லும் சில. நெளிந்து நெளிந்து போகும் பல. திருமாலின் சக்கரத்தைப் போல் நெருப்புப் பொறிகளைக் கக்கிக் கொண்டு சுழன்று செல்லும் வேறு சில. வாணங்களிலெல்லாம் மருந்துக் கலவை ஒன்றுதான் (கரி, பொட்டுப்பு, கந்தகம், இரும்புத் தூள், உலோக உப்புக்கள்) விதம் விதமான தோற்றத்தையும் வேகத்தையும் தருவதற்காக வாணங்களை அமைக்கும் முறையில் மாறுதல். அவுட்டுக்கும் ஆகாசவாணத்துக்குமுள்ள வித்தியாசம் என்ன தெரியுமா? ஆகாசவாணம் கொளுத்தப்பட்டதும், தானாகவே ஆகாயத்தை நோக்கிச் சீறிச் செல்லும். ஆனால் அவுட் அப்படி இல்லை. அதிர்வேட்டுக் குழாய் போன்ற ஒரு சாதனத்தில், வானத்திலே வெடித்துச் சிதற வேண்டிய மருந்துக் கலவை அடங்கிய முடிச்சு வைக்கப்பட்டிருக்கும். இந்த முடிச்சை உயர உந்தித் தள்ளுவதற்கு அதன் கீழேயும் மருந்திருக்கும். ஏககாலத்தில் முடிச்சுடன் இணைத்துள்ள திரிக்கும் முடிச்சின் கீழுள்ள மருந்துக்கும் தீ வைப்பார்கள். கீழுள்ள மருந்து எரியும் வேகத்தில் முடிச்சை ஆகாயத்தை நோக்கி வீசும். முடிச்சுடன் இணைக்கப்பட்டுள்ள மருந்

கௌசிகன்

ளுத் திரி முடிச்சிலுள்ள கலவைக்குத் தீ வைக்க, அது வெடித்து ஒளிப் பூக்களைச் சிதற விடும். இதுவே அவுட்டின் அமைப்பு.

"ஹிட்லர் 'ரகசிய ஆயுதம், ரகசிய ஆயுதம்' என்று சொல்லி வந்தாரே 'வி 1' 'வி 2' என்ற ராக்கெட்டுகள்; அவையெல்லாம் எங்களைப் (ஆகாசவாணம்) பார்த்து உருவாக்கியவைதான். வேறு ஒன்றுமில்லை. பெரிய பலம் பொருந்திய ஆகாசவாணத்தோடு பயங்கரமான வெடி குண்டு இணைக்கப்பட்டிருக்கும். வாணத்துக்குத் தீ வைத்ததும் வெடி குண்டையும் தூக்கிக் கொண்டு அது அசுர வேகத்தோடு வானவெளியிலே செல்லும்.

"இந்த ஆகாசவாணத்தின் தத்துவம் நவீன காலப் போர்முறைகளில் எத்தனையோ விதமாகப் பயன்படுகிறது. ஆகாய விமானம் கீழிருந்து உயரக்கிளம்ப, வெகு தூரம் தரையில் போய்ப் பிறகு தானே மெள்ள மெள்ள உயரக்கிளம்பும். விமான நிலையத்தில்தான் நீ பார்த்திருப்பாயே! 2, 3, மைல் நீளத்துக்கு அது பறந்து செல்ல மைதானம் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் (விமானம் தாங்கி)க் கப்பலில் உள்ள விமானங்கள் உயரக் கிளம்ப வேண்டுமானால் ஊர்ந்து சென்று உயரக் கிளம்ப விஸ்தாரமான மைதானம் கப்பலில் ஏது? ஆகவே மிகக் குறைந்த இடத்திலிருந்து குபீரென்று உயரக் கிளம்ப இத்தகைய விமானங்களுக்கு ராக்கெட்டுகளைப் பொருத்தி விடுகிறார்கள். ராக்கெட் என்றால் என்னமோ ஏதோ என்று மலைக்காதே. எல்லாம் நீ தீபாவளிக்குச் சுடும் ஆகாச வாணமேதான். ஆனால் இது அதிக சக்தி வாய்ந்தது.

"இரண்டாவது உலக யுத்தத்திலே வாணங்களாகிய நாங்கள் செய்த சேவை கொஞ்ச நஞ்சமில்லை. ஆனால் எங்களை மனித குலத்தின் அழிவுக்குப் பயன்படுத்தினார்களே என்பதை நினைக்கும் போதுதான் வேதனையாக இருக்கிறது.

"இரவு நேரத்தில் விமான குண்டு வீச்சில் எதிரியின் பிரதேசத்தில் எங்கே குண்டுமாரி பொழிய வேண்டும் என்பதை அறிவதற்காக முதலில் பாரசூட் மூலம் ராட்சத மத்தாப்புக்களைக் கொளுத்திப் போடுவார்கள். அதிக சக்தி வாய்ந்த இந்த மத்தாப்புக்கள் வான வீதியிலே வரிசையாக விளக்கேற்றி வைத்தது போலப் பல நிமிஷங்கள் பிரகாசமான ஒளியை உமிழ்ந்தபடி ஊசலாடிக் கொண்டே பிரயாணம் செய்யும். இந்த ஒளியின் உதவியால் நிலப்பரப்பின் தன்மைகளை அறிந்து கொண்டு பின்னால் வரும் போர் விமானங்கள் குறிப்பிட்ட இடங்களில் குண்டு வீச்சை வெற்றிகரமாக நடத்தும். இதேபோல எதிரிப் பிரதேசத்தின் யுத்த ரகசியங்களை அறியப் பல லட்சம் 'காண்டில்பவர்' ஒளியைக் கொடுக்கக் கூடிய சக்தி வாய்ந்த வாணங்களைப் பாரசூட் மூலம் வானத்திலே வீசி அதன் உதவியால் விமானத்திலிருந்தபடி புகைப்படங்கள் எடுப்பார்கள்.

"விமானப் படை, கடற் படை ஆகியவை பலவிதமான 'அவுட்'டுகளைச் 'சமிக்ஞைக் குறி'களாகப் பயன்படுத்துகின்றன. விமானம் உடைந்து அதில் உள்ளோர் நடுக் கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கும்போது தங்கள் இருப்பிடத்தை அறிவிக்கவும் உதவி கோரவும் சிவப்பு ஒளிப்பிழம்பு மத்தாப்புவையும் அத்துடன் சிவப்பு நட்சத்திரங்களைச் சொரியும் அவுட்டையும் உபயோகிக்கின்றனர். ஒரு கப்பல் நடுக் கடலில் விபத்துக்குள்ளானால் தங்களுக்கு உதவி தேவை என்பதைத் தெரிவிக்க வாணங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். கப்பல் மூழ்கி, மாலுமிகள் 'லைப்பாயில்' நடுக்கடலில் மிதக்கும்போது தூரத்தில் ஏதாவது கப்பல் தென்படுமானால் அதன் கவனத்தைக் கவர்வதற்காகச் சிவப்பு ஒளியைக் கக்கும் ஆகாச வாணங்களைக் கொளுத்தி விடுவார்கள்.

"கடற்கரை ஓரத்திலிருந்து பச்சைநிறமான ஒளிமணிகள் வான வீதியிலே சிதறி நிதானமாகச் சில சமயங்களில் பூமியை நோக்கி வரும். இது கடற்கரைக் காவலாளிகள் விடுத்த சக்தி வாய்ந்த அவுட்டுக்கள். இம்மாதிரி பச்சைநிற அவுட்டுக்களின் பொருள் என்ன, தெரியுமா? ஏதோ கப்பல் கரையோரத்தில் தரை தட்டியோ, அல்லது வேறு ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் கடற்படையினருக்கு அறிவிக்கவே இவ்விதப் பச்சை நிற அவுட்டுக்களை விடுவார்கள். உடனே 'கோஸ்ட்கார்டு'களின் 'லைப்போட்டு'க்கள் உதவிக்கு விரைந்து செல்லும்.

"இப்படி எவ்வளவோ! வாணங்களாகிய நாங்கள் மனித குலத்துக்கு எத்தனையோ வித நன்மைகளைச் செய்து வருகிறோம்" என்று சொல்லி 'உஸ்' என்ற சீறலுடன் உயரக் கிளம்பி ஒளிப் பூ மழை பொழிந்தது ஆகாச வாணம். சடபுடா படபடத்தது. விஷ்ணுச் சக்கரம் சீறியது. அதிர் வேட்டுக்கள் அதிர்ந்தன. கம்பி மத்தாப்பு கிசுகிசுத்தது. நீராடிப் புத்தாடை உடுத்திக் கொண்டு ரமணியும் உஷாவும் அவைகளின் மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கண்டு ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந்துபோய் உட்கார்ந்திருந்தார்கள்.



மூன்று நண்பர்கள்

வாண்டு மாமா

13. நிலவறை மர்மம்!

நிலவறையைச் சேகர் ஆராய்ந்து கொண்டிருந்தாரல்லவா? அவர் அந்த நிலவறைக்குள் மற்றொரு நிலவறை இருப்பதைக் கண்டு வியந்தார். தம் முயற்சி பலனளித்ததைக் கண்டு அவரது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கைப்பிடியை முடிந்தவரை திருகினார். அந்தப் பெரிய பாறாங் கல்லும் சுவரிலிருந்து தனியாக நகர்ந்து ஒரு இடைவெளியை உண்டாக்கிக் கொண்டு நின்றது. சேகர் கைப்பிடியை விட்டுவிட்டு அந்தப் பிளவின் அருகில் ஓடினார்.

ஒரு மனிதன் நுழையக் கூடிய அளவு பெரிய இடைவெளியல்ல அது. தரைக்கு மேலே ஒரே ஒரு கல்தான் நகர்ந்திருந்தது. சேகர் அந்தப் பகுதியை முஷ்டியால் குட்டி ஆராய்ந்தார். அந்தக் கல்லைப் போலவே பல கற்களும் நகர்ந்து பெரிய இடைவெளி உண்டாகக் கூடிய வாய்ப்பு இருப்பதை உணர்ந்து கொண்டார். அந்த இடத்தில் ஒரு ரகசியப் பாதையோ அல்லது அறையோ இருக்க வேண்டும். ஆனால் மற்றக் கற்களை நகர்த்தும் விசை எங்கே இருக்கிறதென்று ஆராய்ந்துகொண்டிருக்க இப்போது முடியாது. ஆகவே சேகர் வேறொரு நெருப்புக்குச்சியைக் கிழித்து இடைவெளியின் வழியே அதன் உள்ளே ஏதாவது தெரிகிறதா என்று பார்த்தார். ஏதோ ஒரு பெட்டி இருப்பது போலத் தோன்றியது. கல்லைக் கையினால் நகர்த்திப் பார்த்தார். அசைக்கக்கூட முடியவில்லை. உள்ளே, மறுபக்கத்தில், முன்னால் உள்ள அந்தப் பெட்டி போன்ற பொருள் என்ன என்பதை ஆராய்ந்துவிட எண்ணித் தரையோடு தரையாகப் படுத்துக்கொண்டு தனது வலக்கையை அந்த இடைவெளியில் நுழைத்து அந்தப் பெட்டியைத் துழாவினார். முதுகை வளைத்துச் சிரமப்பட்டு அதன் மூடியையும் கெம்பி உயர்த்தி, அதனுள் கையையும் நுழைத்து விட்டார். அவர் கைகள் அதனுள் ஸ்பரிசித்த பொருள் என்ன? 'ஆ!' வியப்பும் மகிழ்ச்சியும் சேகரை ஒரு விநாடி திக்குமுக்காடச் செய்து விட்டன.

கட்டுக் கட்டாக ரூபாய் நோட்டுக்கள்—மொறமொற வென்ற புத்தம் புதிய கரன்சி நோட்டுக்கள்! இன்னும் அதனருகே..... வைர நெக்லஸ்! தங்கச் சங்கிலிகள், காசு மாலை......எல்லாவற்றையும் சேகருக்குக் கைகள்தான் உணர்ந்தன. கண்களால் பார்க்க முடியவில்லை. இடைவெளியிலுள்ள தமது கையை வெளியே இழுக்க நினைத்த அதே சமயத்தில் அந்தப் பெரிய பாறை திடீரென்று தானாக நகர்ந்து மூடிக் கொண்டது. அதன் பயங்கரப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளச் சேகர் வேகமாகக் கையை இழுக்க முயன்றார். ஆனால் அதற்குள் பாறை அவர் கையை இறுக்கி அழுத்தி விட்டது.

சேகர் புழுப் போலத் துடித்து விட்டார். இடுக்கியில் சிக்கிய எலியைப்போல உடல் வெளியேயும், ஒரு கை சுவருக்குள்ளேயும். இருந்தன. தாங்க முடியாத வலியினால் தவித்துப் போய்க் கத்தினார். 'கைப்பிடி தானாகச் சுழன்று கருங்கல்லை அதன் பழைய இடத்துக்கு நகர்த்தி விட்டதா? அல்லது யாராவது கைப்பிடியைச் சுழற்றித் தன்னை இப்படிச் சிறைப்படுத்தி விட்டார்களா?' சேகரினால் உடலைக்கூட அசைக்க முடியவில்லை. ஒரு துளி அசைவும் கூட அவர் உடலில் இசிவை உண்டாக்கிச் சித்திரவதை செய்தது.

கத்தினார் சேகர். ஆனால் அந்த நிலவறைக்குள்ளேயே அவர் குரல் மக்கி மடிந்து போயிற்று. தமது கத்தல் கேட்டு வெளியே உள்ள நெருப்பணைக்கும் படையினரோ போலீஸாரோ வரலாம் என்று எதிர்பார்த்தார். ஆனால் நெருப்பணைக்கும் மோட்டார்கார்கள் கிளம்பிச் செல்லும் ஒலி அவர் காதுகளில் நாராசமாக விழுந்து நம்பிக்கையை இழக்கச் செய்தது. அப்படியானால் இப்படியே, ஒரு கை பாறை இடுக்கிலே சிக்கிக் கொண்டுள்ள இந்த நிலையிலேயே, தாங்க முடியாத வலியினால் தவித்துச் சாகவேண்டியதுதானா? அஞ்சா நெஞ்சம் படைத்த சேகரின் உடல் பீதியினால் நடு நடுங்கியது.

ரங்கசாமியின் டாக்ஸி வைகறையின் பொன்னொளியில் குளித்தபடி விரைந்து கொண்டிருந்தது. டிரைவர் ஆசனத்துக்கு அருகே சொகுசாகக் காலை நீட்டி விட்டு நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த மணியின் கண்களைச் சுற்றி நித்திராதேவி நர்த்தனமாட ஆரம்பித்தாள். ஆனால் அவன் ஆட்டத்தில மயங்கக் கூடாதென்று. ஒட்டிக் கொள்ளத் தவிக்கும் இமைகள் ஒன்று சேர்ந்துவிடாமல் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தான் ரங்கசாமியோ மணியின் தூக்கத்தைக் கலைக்க விரும்பாமல் மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

ஏதாவது சிந்தனையை முட்டுக் கொடுத்துப் பொங்கிவரும் தூக்கத்தைத் தடுத்து நிறுத்த விரும்பினான் மணி. 'முதல் நாள் எத்தகைய பயங்கரமான சபவங்கள்? கடந்த விஷயங்களை நினைவு படுத்திக் கொண்டதும் மணி தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். சுழன்று சுழன்று வந்த தூக்கம் சுழன்று விழுந்தது.

பரபரப்புடன் ரங்கசாமியின் தோள்களைப் பற்றிக் குலுக்கி, "ரங்கசாமி! உன்னைச் சந்திக்க வந்த பட்டு மறுபடியும் வீட்டுக்குத் திரும்பவில்லை அவர்கள் ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும். அது சரி! உன்னை அவர்கள் வந்து பார்த்தார்களா?" என்று கேட்டான் பட்டு. கிட்டுவைப் பற்றிய நினைவு தோன்றி அவனைத் தவிக்க வைத்து விட்டது

ரங்கசாமி மணியின் தவிப்பைக் கண்டு புன்முறுவலுடன், "பட்டு பத்திரமான இடத்தில்தான் இருக்கிறாள் ஆனால் கிட்டுவைப் பற்றித்தான் இப்போது எனக்குக் கவலை" என்றான் மணி விஷயம் புரியாமல் விழித்தான்

"கிட்டுவா? அப்படி என்றால் நீ இரண்டு பேரையும் சந்திக்கவில்லையா?"

"சந்தித்தேன் மூன்று பேருமாகத்தான் அந்த ஆளில்லாத நிலவறையை ஆராய்ந்தோம் வெறுங்கையோடு திரும்பினோம். 'நல்ல நிலாவாக இருக்கிறது. இனி நாங்கள் வீட்டுக்குப் போய்க் கொள்கிறோம்' என்று தெரு முனையிலேயே இறங்கிக் கொண்டான் கிட்டு அவன் வார்த்தையை ஏற்காமல் அவ்விருவரையும் வீட்டு வாசலிலேயே கொண்டு போய் இறக்கி விட்டிருக்க வேண்டும் நான் செய்த தவறு இதுதான் பட்டு வீட்டுக்குத் திரும்பவில்லை என்பது தெரியும் ஆனால் போலீஸ்காரரிடம் நீ சொன்னதிலிருந்து கிட்டுவும் கூட வீட்டுக்குப் போகவில்லை என்று தெரிகிறது" என்றான் ரங்கசாமி

"அப்படியானால் பட்டு எங்கே? அவளை அவளது அறையில் காணோமே? நீ அவர்கள் வீட்டுக்குப் போனாயா?" என்று மூச்சு விடாமல் கேட்டான் மணி.

"பட்டு சதிகாரர்களின் மோட்டாரில் தூங்கிக் கொண்டிருந்தாள்" என்று ரங்கசாமி ஆரம்பித்து, அவளை நடுவீதியில் கண்டெடுத்ததிலிருந்து டாக்டர் வீட்டில் சேர்ப்பித்த வரையில் விவரமாகச் சொன்னான். பட்டுவுக்கு அவர்கள் தீங்கிழைத்தார்கள் என்பதைக் கேட்கும் போதே மணியின் ரத்தம் கொதித்தது. பற்களை நறநற வென்று கடித்தான் 'இதற்கு அந்த அயோக்கியர்களை என் கைகள் வலிக்கும் வரை அடித்து நொறுக்கினால் தான் என் ஆத்திரம் தீரும்' என்று விரல்களை மடக்கி முஷ்டியாக்கிக்கொண்டு தனது தொடையில் குத்திக் கொண்டான். பிறகு "ரங்கசாமி! இப்போது நான் பட்டுவைப் பார்க்க முடியுமா?" என்றான் அவன் குரலில்தான் எத்தனை ஆவல்!

"அங்குதான் போய்க் கொண்டிருக்கிறோம்" என்று ரங்கசாமி சொல்வதற்கும் கார் டாக்டரின் வீட்டில் போய் நிற்பதற்கும் சரியாக இருந்தது.

டாக்டரின் வீட்டுக்குள் நுழைந்ததும் ரங்கசாமி கேட்ட முதல் கேள்வி, "டாக்டர் குழந்தை எப்படி இருக்கிறது?" என்பது தான். டாக்டர், ரங்கசாமியையும் மணியையும் ஒரு அறைக்குள் அழைத்துப் போனார். அங்கு பட்டு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள். இப்போது அவள் மயங்கிக் கிடக்கவில்லை. விழித்துக் கொண்டுதான் இருந்தாள். மணியைக் கண்டதும் அவள் இதழ்கள் மலர்ந்தன. பட்டுவைக் கண்ட மணி ஓடிப் போய் அவள் அருகில் உட்கார்ந்து கொண்டான் 'பட்டு...பட்டு' என்று துடித்தன அவன் உதடுகள். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. பார்வையைக் கண்ணீர் திரையிட்டு மறைத்தது வாஞ்சையோடு அவள் கையை எடுத்துத் தன் கரங்களுக்குள் வைத்துக் கொண்டான்

"அயர்வைத் தவிர பட்டுவுக்கு வேறு எந்தவித அபாயமுமில்லை அவளை அழைத்துப் போகலாம்" என்று ரங்கசாமியிடம் சொல்லிக் கொண்டிருந்தார் டாக்டர். ரங்கசாமி பட்டுவை அப்படியே தூக்கி வந்து தனது காரின் பின் சீட்டில் படுக்க வைத்தான் மணி பட்டுவின் அருகில் அவருக்குச் சிரமமில்லாமல் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான் ரங்கசாமி தனது காரைக் கிளப்பினான் பட்டுவிடம் என்னென்னவோ கேட்க வேண்டுமென்று தவித்தது மணியின் உள்ளம் ஆனால் அவனால் கொஞ்ச நேரத்துக்கு எதுவும் பேச முடியவில்லை. பட்டுவும் கூட அதே நிலையில்தான் இருந்தாள் என்பதை அவள் கண்கள் தெரிவித்தன (தொடரும்)

புளோரோஸோன்

கருமையான சரீரத்தை வெண்மையாக்குகிறது



புளோரோஸோன் உங்கள் சருமத்தை இதேபோல் வெண்மையாக்கி, முகப் பருக்கள் முதலிய சருமக் கோளாறுகளை அறவே போக்கி, மேனிக்கு மலர்போன்ற மென்மையையும், நீடித்த அழகையும் அளிக்கும். புளோரோஸோன் லோஷன் ஒரு பாட்டில் விலை ரூ 4.25 சக்தி மிகுந்த புளோரோஸோன் க்ரீம் ஒரு ஜாடி விலை ரூ 5.50 வி. பி. சார்ஜ் தனி

கெமிஸ்டுகளிடமும் ஹைஜினிக் ரிசர்ச் இன்ஸ்டிடியூட், த. பெ. 1192 பம்பாய்-1 விலாசத்திலும் பெறலாம்

Florozone

MIRACLE BEAUTY BLEACH

Distributors of Madras :

A. . COWDER & Co., 59, BunderSt., Madras



EPHRILIME

எப்ரிலைம்

அவன் கொடுக்கும் இந்த மருந்தை உட்கொண்ட ஒரு சில நிமிஷங்களிலேயே அவனது ஆஸ்த்மா உபாதைகள் மாயமாய் மறையும்.

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக் கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

யூனியன் டிராக் கம்பெனி லிட்.

மதராஸ் டிப்போ

2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ -1



நிச்சயமான

குணம்

ஆபத்தில்லாதது

வயிற்றுக் கோளாறுகளுக்கு நம்பகமான நிவாரணம்

HEWLETT'S



MIXTURE

அபின் கலந்ததும் கலவாததும் 4 அவுன்ஸ் 10 அவுன்ஸ் பாட்டில்களில் கிடைக்கும்.

உடனே குணம் தெரியும்—எல்லா வலிகளையும் போக்குகிறது. ஜீரண சக்தியை ஊக்குகிறது. அதிகப்படியான புளிப்பை நீக்கி வயிற்றுப் பொருமலையும் போக்குகிறது. குடல் சம்பந்தமான கோளாறுகளுக்குக் கைகண்ட ஔடதம். வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்டது



ஸி.ஜே. ஹியூலெட் & சன் (இந்தியா) பிரைவேட் லிட்

சென்னை. 3.


"உங்கள் பற்களை பாதுகாருங்கள்!"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
உங்கள் டூத் ப்ரஷ் நல்ல நிலையில் வைக்கப்பட்டிருந்தால் பற்களின் பராமரிப்பு சுலபமாகிறது. பின் கண்ட எளிதான விதிகளைப் பின்பற்றினால் உங்கள் 'விஸ்டம்' டூத் ப்ரஷ் நன்கு நீடித்து சேவை தரும்...
உங்கள் டூத் ப்ரஷைக் கழுவ வெதுப்பான தண்ணீரை உபயோகியுங்கள். வெந்நீர் கூடாது. வெந்நீரில் நனைய விட்டால் ப்ரஷின் நல்ல மயிர்க் குச்சங்கள் தளர்ந்து போகின்றன.
பற்களை துலக்கின பிறகு ப்ரஷை அலம்பிக் கழுவி அதைத் தொங்கவிட்டு அல்லது நிமிர்த்தி வைத்து உலர விடுங்கள். இதனால் குச்சங்கள் உறுதியாகவும் விறைப்புடனும் இருக்கும்.
இரண்டு டூத் ப்ரஷுகளை வைத்து மாற்றி மாற்றி உபயோகிப்பதுதான் மிகவும் நல்லது. இதனால் ஒவ்வொரு ப்ரஷும் சிறந்த முறையில் நீடித்து உழைக்கும்.
உங்கள் பற்களை ஆரோக்கியமாய் வையுங்கள்: இரவிலும் காலையிலும் விஸ்டம் ப்ரஷால் துலக்குங்கள். துலக்க சுலபமாயிருக்க அதன் சிறிய தலை மற்றும் வளைந்த கைப்பிடியமைப்பால் வாயில் மூலை முடுக்குகளிலும் புகுத்தலாம்; அதன் விறைப்பான நைலான் குச்சங்கள் பல் இடுக்குகளில் நுழையும். பொருத்தமான வடிவம் கொண்ட விஸ்டம் டூத் ப்ரஷை உபயோகியுங்கள்!
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரை காணுங்கள்
Wisdom
நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்

வட்ட மேஜை

அருமருந்து

'கல்கி' படிக்கும் ஆயிரக்கணக்கான நேயர்களில் நானும் ஒருத்தி. வாரம் தவறு மல் தங்கள் பத்திரிகையில் வரும் ஸ்ரீ சங்க ராச்சார்ய சுவாமிகளின் 'அருள் வாக்'கைப் படிக்கும்போது, (ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பினும்) நேரில் சுவாமிகளைத் தரிசித்துக் கேட்பது போல் அளவற்ற ஆனந்தமும், திருப்தியும் ஏற்படுகின்றன. தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

இதேபோல், 'திருக்குற'ளையே படித்தறியாத என் போன்றவர்களுக்குப் பெரியார் ராஜாஜி அவர்கள் எளியநடையில் எழுதி வரும் 'வள்ளுவர் வாசகம்' ஒரு அருமருந்தே என்று சொல்லவேண்டும்.

கல்கத்தா
22-9-58 ஸ்ரீமதி ராஜலட்சுமி சங்கரன்

பக்திவயல்

உபன்யாஸங்களும், கதா காலக்ஷேபங் களும் நடக்கின்றன. ஆனால் அது நடக்கும் இடத்துக்கு அருகில் உள்ளவர்களே அவை களைக் கேட்டு அனுபவிக்க முடிகிறது. மற்ற வர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைப்பதில்லை. இந்தப் பெருந் தொண்டைக் 'கல்கி' ஏற்றுக் கொண்டது மிகவும் பாராட்டத்தக்க விஷ யம். பக்திவயலைப் படிக்கும்பொழுது நம் மையும் அறியாமல் ஒரு பக்தி ஏற்படுகிறது. பாகவதமாகிய 'பக்திவயல்' பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் மனத்தை மாற்றி நல்ல மார்க்கத்தில் அழைத்துச் செல்கிறது.

மேல மாம்பலம்
20—9—58 எஸ். சௌரிராஜன்

பக்தியூட்டும் கட்டுரை

தங்கள் கல்கி இதழைத் தவறாமல் பன் னிரண்டு வருஷங்களாய் நான் படித்து வரு கிறேன். ஸ்ரீ ராஜாஜி அவர்கள் எழுதி வந்த சிறுகதை, தற்போது எழுதிவரும் வள்ளுவர் வாசகம் இவைகளை எவ்வளவு தடவைகள் படித்தாலும், தெவிட்டாததாக இருக்கின்றன. ஸ்ரீ ராஜாஜி அவர்களின் வாழ்த்துடன், ஸ்ரீ பௌராணிகர் எழுதிவரும் பக்திவயல், பக்தி இல்லாதவனுக்கும் பக்தி ஏற்படும்வகையில் வெகு அழகாக இருக்கிறது.

நாகபுரி
22-9-58 கே. ஜானகி

ஆசிரியர்களுக்குப் பென்ஷன்

1955—ல் பள்ளி ஆசிரியர்களில் ஒரு சாராருக்குப் பென்ஷன் உதவி அளிப்ப தென்று திட்டம் அறிவிக்கப்பட்டது. இத் திட்டம் 1955 ஏப்ரல் மாதம் முதல் அமு லுக்கு வந்தது.

இதர ஆசிரியர்கள், பென்ஷன் உதவித் திட்டம் தங்களுக்கும் அறிவிக்கப்படும் என்று எண்ணி அந்த நன்னாளை எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். கடைசியில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 1958 ஏப்ரல் மாதத் தில் மற்ற ஆசிரியர்களுக்கும் 'பென்ஷன் திட்டம்' அறிவிக்கப்பட்டது. எல்லா ஆசிரி யர்களும் ஆனந்தமெய்தினர்.

ஆனால் சர்க்கார் உதவி பெறும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயது அறுபது என்றும், செகண்டரி பள்ளி ஆசிரியர்களுக்கு ஐம்பத்தைந்து என்றும் ஒரு விதி சேர்க்கப்பட்டிருப்பதின் விளைவாக 1955—ம் ஆண்டுக்கும் 1958-ம் ஆண்டுக்கும் இடையில் ஐம்பத்தைந்து வயதைப் பூர்த்தி செய்த சில செகண்டரிப் பள்ளி ஆசிரியர்கள் இன்னும் வேலையில் நீடித்து இருந்து வரும் அறுபது வயது நிரம்பாத சிலர் பென்ஷனுக் குத் தகுதியற்றவர்கள் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறார்கள்.

சர்க்கார் உதவி பெறும் செகண்டரி பள்ளி களில் ஆசிரியர்கள் அறுபது வயது வரை வேலை செய்து வர அனுமதி இன்னும் இருந்து வருகிறது. இப்படி இருக்க, பென்ஷன் திட்டத்துக்காக அவர்களுடைய ரிடையரிங் வயதை ஐம்பத்தைந்து என்று அறிவித்ததின் நோக்கம் புரிந்து கொள்ளக் கூடியதாயில்லை.

ஆகஉல 1955-ம் ஆண்டு பென்ஷன் திட்டத்தில் உதவி பெறாமல் அடுத்த திட்டத் திலாவது உதவி கிடைக்கும் என்று எதிர் பார்த்து ஐம்பத்தைந்து வயது முடிந்து அறுபது வயது முடியாமல் இன்னும் வேலை யில் நீடித்து இருந்து வரும் ஆசிரியர்கள் இந்தப் பென்ஷன் திட்டத்துக்குத் தகுதி யில்லை, என்று கல்வி இலாகா அறிவித்திருப் பது அந்த ஏழை ஆசிரியர்களுக்குப் பெரும் அநீதி இழைப்பதாக முடிந்திருக்கிறது.

காரைக்குடி
24-10-58 பாதிக்கப்பட்ட ஒரு ஆசிரியர்

குடியாட்சியில் ...

குன்னூர் முனிசிபல் உயர்தரப் பாட சாலையில் செகண்டரி கிரேடு ஆசிரியராக இருந்த எங்கள் தகப்பனார் சென்ற வருஷம் நவம்பர் மாதம் 19-ந் தேதி காலமானார். இப்போது வருடம் ஒன்று ஆகிவிட்டது.

அவருக்கு வரவேண்டிய சம்பளப் பாக்கி ரூ. 60 இன்னமும் கிடைக்கவில்லை.

அவருடைய பிராவிடெண்ட் பண்டு பற்றிய தகவலே இல்லை.

அவர் தபாலாபீசில் போட்டிருந்த ரூ. 200 இன்னமும் கிடைக்கவில்லை.

எங்கள் தந்தை இறந்த ஐந்தாவது மாதத் தில் எங்கள் தாயாரும் காலமானார்.

நாங்கள் எதை வைத்துச் சாப்பிடுவது? எங்கள் படிப்புக்கு வழி என்ன? சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு மனுவுக்கு மேல் மனு எழுதியும், நேரில் கெஞ்சிக்கேட்டும் யாதொரு பயனும் இல்லை.

பாளையங்கோட்டை ரா. டாகூர்,
ரா. லலிதா,
25-10-58 ரா. பிரபாவதி

பொங்கி வரும் பெருநிலவு

கி. ராஜேந்திரன்

இரண்டாம் அத்தியாயம்

ஸ்டூடியோவில் தீ!

ஹிந்தியில் சுகுமாரன் எடுத்து வந்த திரைப்படம் முடியும் தறுவாயில் இருந்தது. இன்னும் ஒரே ஒரு நடனக் காட்சி மட்டும்தான் பாக்கியிருந்தது. கனவிலே நடக்கும் இந்த நடனத்துக்குப் பிரும்மாண்டமான காட்சி ஜோடனை செய்திருந்தார்கள். இந்த நடனத்தைப் படமாக்கிவிட்டால் 'ஸென்சாரு'க்குப் போக வேண்டியதுதான். கூடவே அடுத்த படத்துக்குப் பூஜை போட்டு விடத் தீர்மானித்திருந்தார் சுகுமாரன்.

நடனக் காட்சியின் படப் பிடிப்புக்காக மல்லிகாவையும் அழைத்துக் கொண்டு தமது காரில் ஸ்டூடியோவுக்குப் போய்க் கொண்டிருந்தார் சுகுமாரன்.

இப்போதெல்லாம் அவர் மனநிலை சரியாகவே இருப்பதில்லை. திடீர் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார். மற்றவர்கள் ஏதாவது பேசினால் கூடக் காதில் விழாது அவருக்கு. பழக்கத்தின் காரணமாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்றபோதிலும் அவர் மனம் வேறு எங்கேயோ இருந்தது என்பது மல்லிகாவுக்குத் தெரிந்தது.

''அப்பா! அப்பா!'' என்று அழைத்தாள் அவள். சுகுமாரன் பதில் பேசாததைக் கண்டதும் அவர் கையைப் பிடித்து ஒருமுறை உலுக்கினாள்.

பிரமையிலிருந்து விடுபட்டுத் திரும்பிப் பார்த்த அவரிடம், ''அப்பா! இந்த மாதிரி நீங்கள் கார் ஓட்டுவது எனக்குப் பயமாக இருக்கிறது. நான் கூப்பிடுவது கூடக் காதில் விழாமல் எதையோ நினைத்துக் கொண்டு ஓட்டுகிறீர்கள். எங்கேயாவது போய் மோதிக் கொண்டால் என்ன ஆவது?'' என்றாள்.

''ஆமாம், மல்லிகா! எனக்குச் சரியாகக் காரை ஓட்டக்கூட முடிவதில்லை. வயதாகிக் கொண்டு வருகிறதல்லவா?''

''வயதுக் கோளாறு இல்லை, அப்பா! மனக் கோளாறுதான்.''

''மனமும் சரியாகத்தான் இல்லை! என்ன செய்வது?''

''என்ன செய்ய முடியும்? உங்களுக்கு உள்ள குறையை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியும். அதனால் ஏதாவது ஆறுதலோ, மன அமைதியோ கிடைக்கிறதா என்று பார்க்க முடியும். என்னிடம் கூட உங்கள் குறைகளைச் சொல்லாமல் மனத்துக்குள்ளேயே பூட்டி வைத்துப் புழுங்குவதில் என்ன லாபம்?''

''என்னுடைய கவலைகளெல்லாம் என்னோடு போகட்டுமே, மல்லிகா! நீ வேறு துன்பப்படுவானேன் என்றுதான் சொல்லாமல் இருக்கிறேன்.''

''என்னிடம் நம்பிக்கையில்லை என்று சொல்லி விட்டுப் போங்களேன்.''

''சீச்சீ! அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் திட்டமிட்டபடி எதுவுமே நடப்பதில்லை, மல்லிகா! முன்பெல்லாம் ஏதாவது ஒன்று நினைப்பேன். நினைத்தது உடனே நிறைவேறும். திருப்தியாக இருக்கும். இப்போது எல்லாமே தலைகீழ்ப்பாடமாக நடக்கின்றன. கோபம் கோபமாக வருகிறது.''

''இப்போது என்ன தவறு நடந்து விட்டது, அப்பா? நான் ஏதாவது...''

''இல்லை, மல்லிகா! நீ ஒருத்திதான் நான் விரும்பியபடி நடந்துகொண்டு சந்தோஷமளிக்கிறாய். மற்றப்படி எல்லாமே துயரப்படும்படியாகத்தான் இருக்கின்றன.''

''அப்பா! சந்தோஷமும் துயரமும் நாமே ஏற்படுத்திக் கொள்வதுதானே? எந்த விஷயத்தையும் மகிழ்ச்சிகரமாகவும் பார்க்கலாம், துக்ககரமாகவும் பார்க்கலாமல்லவா?''

''நீ சொல்வது எல்லாக் காரியங்களுக்கும் பொருந்தாது, மல்லிகா! எதையும்



மகிழ்ச்சிகரமாகவே பார்க்க முடியா விட்டால் என்ன செய்வது?''

''அப்படித் துக்கப்படும்படியான விஷயமென்ன? அதைத்தான் முதலில் கொஞ்சம் சொல்லுங்களேன்.''

''சேகர்!''

சுகுமாரன் தொடர்ந்து சேகரைப் பற்றி ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்தாள் மல்லிகா. அவர் பேசாமல் இருக்கவே, ''என்ன அப்பா சேகருக்கு என்ன?'' என்று கேட்டாள்.

''அவனுக்கு ஒன்றுமில்லை, மல்லிகா! என் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறான் அவ்வளவுதான். இதுவரையில் இருபதாயிரம் ரூபாய் வரையில் அவன் என்னிடமிருந்து கறந்து விட்டான்.''

''அவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு அவர் என்ன செய்வார்?''

''பெரும் பகுதி கடன்களைத் திருப்பிக் கொடுக்கப் போயிருக்கும். பாக்கியைச் சூதாட்டங்களில் தொலைத்திருப்பான். செலவுக்குத்தானு வழியில்லை?''

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, அப்பா! சொல்லட்டுமா?''

''பேஷாகச் சொல்லு, மல்லிகா!''

''அவருக்கு இப்போது வேலை ஒன்றும் இல்லை. அதனால்தான் கண்டபடி சுற்றித் திரிகிறார். பொழுதைப் போக்கவே சூதாடிப் பணத்தை விரயம் செய்கிறார் என்று நினைக்கிறேன். உங்கள் ஸ்டுடியோவிலேயே காமிராமேனாக வைத்துக் கொள்ளுங்கள். வேலையும் வாங்கிக் கொள்ளலாம். நீங்கள் கொடுக்கும் பணம் விரயமாகவும் தோன்றாது.''

''நல்ல யோசனைதான். ஆனால் அவன் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டுமே? சொந்தமாகப் படம் எடுக்கப் போவதாக அல்லவோ அவன் சொல்லிக் கொண்டிருக்கிறான்!''

''அதெல்லாம் வெறும் புரளி, அப்பா! அவரை நம்பி யார் லட்சம் லட்சமாகக் கடன் கொடுப்பார்கள்?''

''சரி, வேலையை ஒப்புக் கொள்கிறான் என்றே வைத்துக் கொள்வோம். அப்போதும் மேலே மேலே பணம் கேட்காமல் இருப்பான் என்று என்ன நிச்சயம்?''

''நிச்சயமில்லைதான்.''

''அப்படியானால் அவனுக்கு வேலை கொடுப்பதில் என்ன லாபம்?''

மல்லிகா சிறிது நேரம் மௌனமாக யோசித்தாள். கடைசியில் ''இந்தத் தர்ம



சங்கடமான நிலையிலிருந்து மீள ஒரே ஒரு வழிதான் எனக்குத் தோன்றுகிறது, அப்பா! ஆனால் அதற்கு நீங்கள் ஒப்புக் கொள்வீர்களோ என்னமோ?''

''விஷயத்தைச் சொல்லாமலே ஒப்புக் கொள்வேனோ மாட்டேனோ என்று சந்தேகப்பட்டால் என்ன செய்வது?''

''நான் அவரைக் கல்யாணம் செய்து கொண்டு விடுகிறேன், அப்பா!'' என்றாள் மல்லிகா.

சுகுமாரன் காரை 'பிரேக்' போட்டு நிறுத்தி விட்டார். அவள் இருந்த பக்கமாகத் திரும்பி, ''மல்லிகா! இது என்ன அசட்டுத்தனம்! ஸ்டுடியிலேயே அவனை மறந்துவிடு என்று எச்சரிக்கை செய்தேன். மறுபடியும் அந்தக் கயவனைக் கல்யாணம் செய்து கொள்வதைப் பற்றிப் பேசுகிறாய். அதற்கு நான் எப்படிச் சம்மதம் அளிக்க முடியும்? கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுப்பதா? ஒருநாளும் நடக்காது'' என்றார்.

''அப்பா! ஆத்திரத்துக்கு இடம் கொடுக்காமல் யோசித்தால் நான் சொல்வதுதான் சரி என்று ஒப்புக்கொள்வீர்கள். நம்மை வேற்று மனிதர்களாக நினைப்பதால்தானே பணம் பறிக்கிறார்? என்னைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டால் அவருக்கு எல்லாமே தமதுதான் என்ற எண்ணம் உண்டாகி விடும். அப்புறம் அடிக்கடி பணம் கேட்டு உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டார் என்று நம்புகிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

சுகுமாரன் காரைக் கிளப்பினார். ''நீ சொல்வதில் யோசித்துப் பார்க்கக்கூடிய நல்ல அம்சமும் இருக்கிறது'' என்று ஒப்புக் கொண்டார்.

''அதையும் மீறி அவர் பண விரயம் செய்தாரானால் நான் அருகிலேயே இருப்பேன், அவர் மனத்தை மாற்றுவதற்கு.''

''கல்யாணத்துக்கு அவன் ஒப்புக் கொள்ளாவிட்டால்?...''

மல்லிகா சிரித்தாள். ''என் திறமையில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? அதற்கு முதல்படியாக அவருக்கு ஸ்டுடியோவில் வேலை கொடுங்கள். அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறினாள்.

** ** **

மல்லிகா யோசனை சொன்னபோது அது இவ்வளவு விபரீதமாக உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

சில நாட்கள் கழித்துத் தொழிலாளர்கள் மணியின் அறைக்குப் படையெடுத்தார்கள். அவர்கள் எதற்கு வந்திருக்கிறார்கள் என்பது உடனே தெரிந்து விட்டது மணிக்கு. சேகரை வேலைக்கு

அமர்த்தப் போய் ஏற்கனவே இருந்த காமிராமேனை அனுப்பி விட்டார் சுகுமாரன். மணியிடம் கூட அவர் இதைப் பற்றிச் சொல்லவேயில்லை. சொன்னால் முட்டுக்கட்டை போடுவான் என்று தெரியும். தொழிலாளர் தலைவனிடம் யோசனை கேட்க வந்தார்கள். இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தான் மணி. ஏதோ பேச வாயெடுத்த அவனை 'நிறுத்து!' என்ற ஒரு குரல் அடக்கியது.

"ஏற்கனவே முதலாளியின் பக்கமாக உன் அனுதாபத்தைக் காட்டி வருவதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. யோசித்துப் பார்த்து எங்களுக்குப் பதில் சொல்லு. தொழிலாளர் நலனில் உனக்குள்ள சிரத்தையை இப்போது பரிசோதிக்கப் போகிறோம்."

மணிக்குச் சுகுமாரன் மீது கோபம் கோபமாக வந்தது. "இன்னொருவரை வேலைக்கு வைத்துக் கொள்வதற்காக, இருப்பவரை அனுப்புவது அநியாயம் தான்" என்றான் மணி.

கூடியிருந்தவர்கள் ஆர்ப்பரித்தார்கள்.

"நான் சுகுமாரனுடன் விவாதித்து நீதி வழங்கச் செய்கிறேன்" என்றான்.

"அவ்வளவுதானா?" என்றது ஒரு குரல். "அது போதுமா?" என்று கேட்டது இன்னொரு குரல். "கையாள் தானே?" அனைவரும் அவன் முகத்தைக் கண் கொட்டாமல் கவனித்தார்கள்.

"இரண்டு மணிநேர அனுதாப வேலை நிறுத்தம்" என்றான் மணிசேகரன் வேண்டா வெறுப்பாக. கோஷமிட்டுக் கொண்டு ஓடினார்கள் தொழிலாளர்கள்.

இதனையெல்லாம் மனமுடைந்து போனான் மணி. காட்டுத் தீ இது. கருத்தாழம் கொண்ட சிந்தனையை விட உணர்ச்சிகளுக்கே அதிக மதிப்பு கொடுப்பார்கள். இன்று தீப்பொறியாக இருப்பது நாளை சுடர்விட்டு எரியும் ஜுவாலையாக மாறும். அதற்கு மறுநாள் வெறும் சாம்பல்தான் மிஞ்சும்!

சுகுமாரனிடம் பேசினான் மணி. அவர் எரிந்து விழுந்தார். "என் ஸ்டூடியோவில் யாரை வேண்டுமானாலும் வேலைக்கு வைக்கவோ, வேலையிலிருந்து நீக்கவோ எனக்கு உரிமை உண்டு. நீ தலையிடாதே! வேலைநிறுத்தம் செய்யட்டும், எனக்குக் கவலையில்லை. ஹிந்திப் படமும் முடிந்து விட்டது. வேலை எதையும் பாதிக்காது."

** ** **

அன்றிரவு தன் ஜாகைக்குக் கூடத் திரும்ப மனமில்லாமல் ஸ்டூடியோவிலேயே தன் அறையில் உட்கார்ந்திருந்தான் மணி. விளக்கையெல்லாம் அணைத்துவிட்டு நடந்தவற்றையும் நடக்கப்போவதையும் எண்ணிக் கொண்டிருந்தான். ஸ்டூடியோ கட்டடத்தின் முன்னால் இருந்த விசாலமான தோட்டத்தில் மட்டும் ஒரே ஒரு 'மெர்க்குரி' விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

சற்றுத் தூரத்தில் ஒரு உருவம் கையில் ஒரு பெரிய 'டின்'னுடன் நடந்து சென்றதைக் கவனித்தான் மணி. அது யார் என்பது தெரியவில்லை. சிறிது நேரம் நடந்து சென்று ஷூட்டிங் எடுக்கும் ஷெட்டை அடைந்தது. கையிலிருந்த தகர டப்பாவின் மூடியைத் திறந்து சுற்றிலும் ஊற்றியது. பின்னர் ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்தது.

நெருப்புக் குச்சி எரிவதைப் பார்த்ததும்தான் மணிக்குச் சட்டென்று விஷயம் விளங்கியது. யாரோ ஸ்டூடியோவுக்கே தீ வைக்க முயற்சிசெய்கிறார்கள்! அந்தத் தகர டப்பாவில் இருந்தது பெட்ரோல் தான். சந்தேகமேயில்லை! கதவைத் திறந்துகொண்டு ஓடினான் மணி. அவன் நெருங்கி வருவதற்குள் தீ குபீரென்று எரிய ஆரம்பித்து விட்டது. வாசலில் எரிந்த விளக்குக்கு அடியில் அவன் ஓடி வருவதைப் பார்த்ததும் அந்த உருவம் சடாரென்று வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

மூன்றும் அத்தியாயம்

நடராஜனின் கோபம்

"அக்காளாம், அக்காள்! அது மட்டுமா? ரொம்ப ரொம்ப நல்ல அக்காள்! தங்கக்கம்பி! அக்காளை இப்படியா அலட்சியம் செய்வார்கள்? போய்ப் பார்த்து வாருங்கள், அத்தான்!"

"ஆம்! போய்ப் பார்க்கத்தான் போகிறேன். கடக்கடக் கேட்கவும் போகிறேன். என்னை உயிரோடு கொன்ற அந்தக் கள்ளச் சிரிப்பை இப்போது இன்னொருவன் அனுபவித்து மகிழ்வதா? என்னிடம் அள்ளி வீசிய கடைக்கண் பார்வையில் இன்னொருவன் கட்டுப்படுவதா? அவள்தான் நாளுக்கொரு விதமாகத் தன் கருத்தை மாற்றிக் கொள்கிறாளென்றால் அதற்கேற்ப நானும் தாளம் போட்டுக் கொண்டிருக்க முடியுமா?" என்று கருவினான் நடராஜன்.

அவன் போனபோது மல்லிகாவும் சேகரும் வாசலிலேயே நின்று கொண்டிருந்தார்கள். 'அவர்கள் தன்னைப் பார்ப்


தீபாவளி வெளியீடு
எம்.ஏ.வி.பிக்சர்ஸ்
மாதவி
K.V.மஹாதேவன்
கிருஷ்ண ராவ்
BHARAT
STUDIO



பதற்கு முன்னால் வந்த வழியே திரும்பிப் போய் விடலாமா?' என்று நினைத்தான் நடராஜன். 'முன்கூட்டியே தெரிவிக்காமல் வருகிறோமே? தன்னை வரவேற்க அவள் தயாராக இருக்க வேண்டுமே? சேகர் அவளுடன் பேசிக் கொண்டிருக்கும்போது நான் வருவதை விரும்புவாளோ என்னவோ?

'இவ்வளவு தூரம் வந்து விட்டுத் திரும்புவதா? கோழைத்தனமல்லவா? எனக்கு என்ன பயம்?' தன்னைத் தானே தைரியப்படுத்திக் கொண்டு படிகளில் ஏறினான் நடராஜன்.

அவனை வியப்புடன் பார்த்து விட்டுக் கவலையுடன் மல்லிகாவின் பக்கமாகத் திரும்பினான் சேகர்.

''என்ன மல்லிகா? உன் உடம்புக்கு என்ன? டாக்டர் எதற்கு வந்திருக்கிறார்? ஏன் என்னிடம் சொல்லவேயில்லை?'' என்று செல்லமாக அவளைக் கடிந்து கொண்டான் சேகர்.

'' உடம்புக்கு ஒன்றுமில்லை. சும்மா பார்த்துவிட்டுப் போக வந்திருக்கிறார்''

'' அவ்வளவுதானே? டாக்டருக்கு ஏக வேலைகள். இந்தமாதிரியெல்லாம் அனுவசியமாக அவர் வரமாட்டாரே என்பதால் பயந்து போனேன்.''

'என்னை மட்டந்தட்ட சமயத்துக்குத் தகுந்த நல்ல நடிப்பு.' அவனை அப்படியே அடித்து நொறுக்கிவிட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தான் நடராஜன்.

மல்லிகா அந்தக் கேலிப் பேச்சைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. மலர்ந்தமுகத்துடன் அவனை வரவேற்று, ''சேகரைத்தான் உங்களுக்குத் தெரியுமே?'' என்று மெதுவாகப் பேச்சை மாற்றினாள்.

'நன்றாகத் தெரியும். 'என் பழைய காதலன்' என்று சொல்லிப் பைத்தியமாக அடித்தாயே என்னை. அவனை மறப்பேனா நான்?' என்று மனத்துக்குள் நினைத்த நடராஜன், ''நர்ஸிங் ஹோமுக்கு வந்திருக்கிறார். பார்த்திருக்கிறேன்'' என்றான்.

''ஆமாம்! இரண்டு தடவை மல்லிகாவைக் காண நர்ஸிங் ஹோமுக்கு வந்தேன். ஒரு முறை வந்து தர்வானால் வெளியே தள்ளப் பட்டேன்; அவள் ஊட்டியில் இருந்தபோது, விலாசத்தைத் தெரிந்து கொள்ள ஒரு சமயம் வந்திருந்தேன்'' என்று விளக்கினான் சேகர்.

''வாசலிலேயே நின்று பேசுகிறீர்களே, உள்ளே வாருங்கள்'' என்று மரியாதை காட்டினாள் மல்லிகா.

'' நான் கிளம்பிக் கொண்டேயிருந்தேன் டாக்டர்; நீங்களும் வந்தீர்கள். போய் வரட்டுமா?'' என்று கேட்டுச் சற்றுத் தயங்கி நின்றான் சேகர்.

டாக்டர் பதில் பேசவில்லை.

''டாக்டர்! என்னையும் மல்லிகாவையும் நீங்கள் 'கன்கிராஜுலேட்' பண்ண வேண்டும்!'' என்றான்.

வேண்டுமென்றே நெற்றிச் சுருக்கத்திலே கேள்விக்குறியைக்காட்டித்தெளிவுபடுத்தக் காத்திருந்தான் நடராஜன்.

''எனக்கும் மல்லிகாவுக்கும் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது,டாக்டர்!''

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்''— வேண்டாவெறுப்பாக உணர்ச்சியேயில்லாமல், மல்லிகாவைப் பார்த்துக் கொண்டே பதில் கூறினான் நடராஜன்.

''டாக்டர் ஸார்! என்மீது உங்களுக்கு ஒன்றும் கோபம் இல்லையே?''

''கோபமா? எனக்கா? நான் எதற்கு உங்களிடம் கோபித்துக் கொள்ளப் போகிறேன்?''

'' அதுதானே கேட்டேன்? இல்லை... 'ரொம்ப சந்தோஷம்' என்று நீங்கள் சொன்னபோது குதூகலத்தை மருந்துக்

குக் கூட உங்களிடம் காணும். அதனால் ஒருவேளை உங்களுக்கு ஏதாவது கோபமாக இருக்குமோ என்று நினைக்க வேண்டியிருந்தது.''

நடராஜன் பதில் பேசவில்லை.

சேகர் தொடர்ந்தான்: ''நீங்கள்கூடக் காலா காலத்தில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும், டாக்டர்! எத்தனை நாட்களுக்கு இப்படி ஒண்டிக்கட்டையாக இருக்கப் போகிறீர்கள்? உங்களுக்கு முறைப் பெண்ணாக அத்தை மகள் ஒருத்தி இருக்கிறாளாமே? கேள்விப்பட்டேன். உங்கள் தகப்பனார் இறந்து போனதால் கல்யாணம் நின்று விட்டதாம். இல்லாவிட்டால் இத்தனை நாட்களுக்குள் இரண்டு கைகளிலும் இரண்டு குழந்தைகளுடன் போராடிக் கொண்டிருப்பீர்கள், இல்லையா? பெரிய பெரிய ஆப்பரேஷன்களை அலட்சியமாகச்செய்து முடிக்கும் நீங்கள் குழந்தைக்கு ஜல தோஷம் என்றதும் பயந்து சாவீர்கள்!'' பெரிய ஹாஸ்யத்தைச் சொல்லி விட்டதைப் போல், ''ஹா...ஹா...ஹா'' என்று சிரித்தான் சேகர்.

மண்டையில் அடிப்பதுபோல் சேகரைக் கேட்கக் கேள்விகள் தயாராக இருந்தன, நடராஜனுடைய நாக்கு நுனியில். ஆனால் அவற்றைக் கேட்பதற்கு முன் மல்லிகாவிடம் தனிமையில் பேசித் தான் கேட்டதும் பார்த்ததும் உண்மை தானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்பினான்.

• • •

மல்லிகாவை அவன் கேட்டதும் அவள் உடனே பதில் சொல்லவில்லை. அவளுடைய மௌனம் அவனுக்குச் சிறிது நம்பிக்கையை அளித்தது.

''நான் கேட்டவையெல்லாம் பொய் தானே? என் காதுகள்தானே என்னை ஏமாற்றிவிட்டன?''என்றான் மறுபடியும்.

''இல்லை, நீங்கள் கேள்விப்பட்டவையெல்லாம் உண்மைதான்'' என்று கூறினாள் மல்லிகா.

''என் காதுகள் என்னை ஏமாற்றவில்லை. நீதான் ஏமாற்றி விட்டாய் என்று சொல்லு! என் உள்ளத்திலே ஆசைத் தீயை வளர்த்து கொழுந்து விட்டு எரியச் செய்துவிட்டு இப்போது அதை அணைக்க மறுக்கிறாய், மல்லிகா! உன்னை முதன் முதலாக நான் சந்தித்த தினத்தை எண்ணிப் பார். நீ படுக்கையில் இருந்தாய். உன்னைப் பார்த்தது பார்த்தபடியே இருந்தேன். என் கண் இமைகள் கொட்டுவதற்கு மறந்தன. விழிகள் ஆடாமல் அசையாமல் உன் வதனத்தையே பார்த்தன. மூச்சுவிட மார்பு மறந்தது. இருதயம் அடிப்பதை நிறுத்தி விட்டது.

''நான் பார்த்துக் கொண்டிருப்பது ஒரு மானிடப் பெண்ணாகவே எனக்குத் தோன்றவில்லை. மாயச் சுனையில் வாசம் புரியும் தாமரைக் கன்னிகையாக, வன தேவதையாகக் காட்சியளித்தாய். கண்ணைக் கொட்டினால் நீ மறைந்து விடுவாயோ என்று பயந்தேன். இமைப் பொழுது கண்ணை மூடினால் பிறகு திறக்கும்போது நீ அங்கே இல்லாமல் போய் விட்டால் என்ன செய்வது என்று பயந்து கண் கொட்டாமல் பார்த்தேன். நீயும் அதேபோல் என்னைப் பார்த்தாய். நீண்ட நேரத்துக்குப் பிறகு உன் இமைகள் படபடத்தன. தாமரை தென்றலில் அசைவதுபோல் உன் முகம் திரும்பியது.

''அதற்கப்புறம் நர்ஸிங் ஹோமில் என்னுடைய பாதுகாப்பில் இருந்தாய். என்னுடைய உயிராக உன்னை மதித்துப் போற்றினேன். இலங்கைக்குப் போவதற்கு முன்னம் என்னைக் காணவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தாய். நான் ஓடோடியும் வந்தேன். நீ ஆடிக் கொண்டிருந்தாய். தரையில் நடனமாடவில்லை மல்லிகா! என் இதயத்தில் நர்த்தனமாடினாய். உன் கால்கள் 'கலீர் கலீர்' என்றஒலியோடு என் உள்ளத்தை உதைத்து அதைக் கன்னிச் சிவக்கச் செய்தன. ஊட்டிக்குப் போகையில் சுகுமாரன் என்னை அழைத்தார். எவ்வளவு ஆர்வத்துடன் நான் இருந்தேன், தெரியுமா? உன்னோடு பிரயாணம் செய்ய, உன் அருகிலேயே வாசம் செய்து, உன்னிடம் மேலும் நன்றாகப் பழகி உன்னை முழுமையாக அறிந்து கொள்ளத் துடிதுடித்தேன். ஆனால் நீயோ ஏளனமாகப் பேசிச் சிரித்தாய்.

''இவை அவ்வளவும் உன்னுடைய காதல் விளையாட்டு. என்னைப் பரிதவிக்க விட்டு வேடிக்கை பார்ப்பதில் நீ இன்பம் அடைகிறாய் என்று நினைத்தேன். அந்த இன்பத்தை உனக்கு அளிப்பதில் பெருமைப்பட்டேன்.

''நீ பார்த்த ஒவ்வொரு பார்வையிலும், பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் ஒவ்வொரு அங்க அசைவிலும் காதல் மிளிர்வதாக எண்ணினேன். அதெல்லாம் பொய்யா? நான் நினைத்ததெல்லாம் தவறா?''

''இல்லை. நீங்கள் எண்ணியது எதிலுமே தவறில்லை'' என்றாள் மல்லிகா. சொல்லி விட்டு உதட்டைக் கடித்துக் கொண்டாள் அவள்.

''அப்படியானால் நான் பாக்கியசாலி தான். நான் இப்போது கேள்விப்படுவ

தீபாவளிக்கேற்ற பரிசுப் புத்தகங்கள்

ஒவ்வொன்றின் விலை ந. பை. **25** தான்!



லிப்கோ குறைந்த விலைச்

சிறு பதிப்புக்கள் [64]

திருக்குறள், நாலடியார், பிற்கால நீதி நூல்கள், நளவெண்பா, திருப்புகழ் (சில), பாரதியார் பாடல்கள் (சில) ஆகியவற்றின் மூலமும், திருக்குறள், நாலடியார் உரையும், நளவெண்பா, பன்னிரு ஆழ்வார்கள், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், நால்வர், இராமாயணம், பாரதம், கந்த புராணம், இராமலிங்க அடிகள், பாகவதம் போன்ற பழந்தமிழ் இலக்கியப் பெரு நூல்களின் கருக்கங்களும் (கையடக்க அளவில்).



தமிழில் எல்லா வகைக் கடிதங்கட்கும்

லிப்கோவின்

கடிதம் எழுதுவது எப்படி?

கடிதம் எழுதும் முறைகளும், வாழ்த்து, வரவேற்பு முறைகளும், 'பாண்டு', பத்திரங்களின் மாதிரிகளும், இன்னும் உபயோகமான பல அநுபந்தங்களும், பட விளக்கங்களும் அடங்கியது.

இரண்டாம் பதிப்பு

224 பக்கங்கள்; ரூ. 2.00; தபால் மூலம் ரூ. 2.87



ஆசிரியரின்றித் தமிழ்மூலம் ஆங்கிலம் பயில

லிப்கோ

ஆங்கில ஆசிரியன்

பொது அறிவை வளர்த்து ஆங்கிலத்தைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் வல்லவராக்கும் நல்லாசிரியன் இந்நூல். பாடங்களுடன் படங்களும், பயன் தரும் அநுபந்தங்கள் பலவும் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

340 பக்கங்கள்; ரூ. 3.00; தபால் மூலம் ரூ. 4.00

லிப்கோவின்	குழந்தை வளர்ப்புக் கலை	...	ரூ. 1.50
லிப்கோவின்	மனித உடலின் விந்தைகள்	...	ரூ. 1.25
லிப்கோவின்	உங்கள் சைக்கிள்	...	ரூ. 0.75

இவை தவிர, ஆர். எஸ். மணி, ஏ. எம். மீரான், தமிழ்வாணன் எழுதிய சுவையான துப்பறியும் தமிழ் நவீனங்களும், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சம்ஸ்கிருத ஆரம்பப் பாடங்களும், லிப்கோ ஜெய்ஹிந்த வாய்ப்பாடும் கிடைக்கும்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், சென்னை-1; எஸ். கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; எம். நடனசுந்தரம் பிரதர்ஸ், புதுமண்டபம், மதுரை; ஏ. கே. சந்த்ரையா செட்டியார், கோட்டை, சேலம்-1; வி. ஆர். நடராஜன் & ஸன், கோயமுத்தூர்; கவிஞர் பதிப்பகம், 241, ராஜ வீதி, கோயமுத்தூர்; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மௌண்ட் ரோடு, சென்னை-2; ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.

★ லிப்கோ நடமாடும் புத்தக 'வான்'களிலும் கிடைக்கும்

தெல்லாம் பொய். விளையாட்டுக்காக என்னை ஏமாற்ற நீ நடத்தும் நாடகம் என்று சொல்லு. அல்லது இதெல்லாம் கனவு என்று கூறு. உன் தளிர்க் கரங்களால் என்னைப்பற்றி உலுக்கிஎழுப்பு.''


''இப்போது நீங்கள் கேட்டது பார்த்தது எல்லாமே நிஜம்தான்.''

''அது எப்படி இருக்க முடியும், மல்லிகா! என்னைக்காதலித்ததும் மெய், இப்போது நீ வேறு ஒருவனை மணந்து கொள்ளப் போவதும் உண்மை என்றால் அதை எப்படி நம்புவது?''

''உங்களைக் காதலித்தேன் என்பது உண்மை. இனி என் உள்ளத்தில் காதலுக்கே இடமில்லை.''

''இடமில்லை என்றால் இடத்தை ஏற்படுத்திக் கொள். ஏற்கனவே உன் உள்ளத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் எதுவானாலும் அதைப் பிடித்துத் தள்ளிவிடு. அதனால் ஏற்பட்ட இடத்தில் என்னுடைய காதலை ஏற்றி வைத்துக்கொள். அதற்கு முன்பு இருந்த ஸ்தானத்தைக் கொடு.

''மல்லிகா! உன்னோடு ஊட்டிக்கு வர வேண்டும் என்று நினைத்தேன். என் ஆசையில் மண்ணைப் போட்டுவிட்டாய். இப்போதாவது சொல். கல்யாணம் செய்து கொள்வோம். 'ஹனி மூனு'க்கு ஊட்டிவேண்டாம், அது பழைய நினைவுகளை ஞாபகப்படுத்தும். காஷ்மீரத்துக்குப் போவோம். அங்கே படகு வீட்டில் சில நாட்கள் வசிப்போம். ஏரியில் உல்லாசமாகப் பவனி வருவோம். அது அலுத்து விட்டால் இந்தியாவை விட்டே போய் விடுவோம். பாரிஸுக்குப் போவோம். பகலெல்லாம் தூங்கி விட்டு இரவு நேரத்தில் வெளியே சுற்றிக் கொட்டம் அடிப்போம். அந்த இரவு நகரத்தை விட்டு ஸ்பெயின் தேசத்துக்குப் போவோம். அங்கே முரட்டுக் காளைகளை அவிழ்த்து விட்டு, பார்ப்பவர்கள் மயிர் சிலிர்க்க வீரப் போர் புரியும் இளைஞர்களைக் காண்போம். உன் மேனி அழகை மிகைப் படுத்திக் காட்டக் கூடிய ஸ்பானிஷ் உடையை அணிந்து கொண்டு அவர்களுடைய நடனத்தையும் கற்றுக்கொள். கைகளைத் தட்டி, விரலைச் சொடுக்கி, உடையை அலைத்து நீ ஆட ஆரம்பித்தாயானால் பார்ப்பவர்கள் சொக்கிப் போவார்கள். அதன் பிறகு ஸ்விட்ஸர்லாந்துக்குப் போவோம். வெள்ளிப் பனிமலைச் சரிவுகளில் சறுக்கி விளையாடுவோம். வாயு வேகமாகக் கீழே சறுக்கிச் செல்லும்போது நீ பயந்து வீறிடுவாய். நான் அணைந்து தைரியமூட்ட அருகி



கொழும்பு வீரகேசரி செய்திப் பகுதி துணை ஆசிரியர் திரு ஆர். வெங்கடராமனின் புதல்வி சௌ. கமலாவுக்கும், காரைக்குடி சென்ட்ரல் எலெக்ட்ரோ கெமிகல் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த திரு வி. பாலசுப்பிரமணியனுக்கும் காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க, மணமக்கள்!

லேயே இருப்பேன். இன்னும் லண்டனையும், நியூயார்க்கையும், உலகில் உள்ள எல்லா நாடுகளையும் வாழ்நாள் முழுவதும் நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து சுற்றிப் பார்ப்போம்! என்ன சொல்கிறாய், மல்லிகா? சரிதானே? 'ஆகட்டும்' என்று சொல்லிவிடு!''

மல்லிகாவின் கண்கள் ஆர்வத்தில் விரிந்து கொண்டே போயின. அவன் கூறி முடித்த உடனே கற்பனை வெடித்து, சுயநிலைக்கு வந்தாள் அவள். ''நான் துரதிர்ஷ்டசாலி. அதற்கெல்லாம் கொடுத்து வைக்காதவள்'' என்றாள்.

''அப்படிச் சொன்னால் விடமாட்டேன். ஒப்புக் கொள்ளவே முடியாது. என்னை உள்ளன்போடு காதலிப்பதானால் என்னுடன் வருவதற்கு என்ன தடை? இல்லையானால், 'உங்களை வெறுக்கிறேன். இந்தப் பக்கமே தலைகாட்டாதீர்கள்' என்று தீர்மானமாகச் சொல்லிவிடு. நான் போய் விடுகிறேன்.''

புண்படுத்தும் வார்த்தைகளைப் பேசிய தன் வாயைப் பொத்திய விரல்களைத் தன் இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் நடராஜன்.

''என்னை ஏன் இப்படி வதைக்கிறீர்கள்? நான்தான் சொன்னேனே, என் உள்ளத்தில் காதலுக்கு இடமில்லை என்று. வேறு எதுவும் சொல்லத் தோன்றவில்லை எனக்கு. என்னை மன்னித்து விடுங்கள்'' என்று அவனிடம் கெஞ்சினாள் மல்லிகா.

''காதலில்லையானால் கல்யாணம் எதற்கு?'' என்று கேட்டான் நடராஜன்.

''உலகில் நம் கண்களுக்கெதிரில் நடக்கும் எல்லாத் திருமணங்களும் காதலுக்காகத்தானா நடக்கின்றன?''

"நீ எதற்குச் செய்து கொள்கிறாய் என்றுதான் கேட்கிறேன். ஒருவேளை விமலாவுக்காக நீ தியாகம் செய்வதாக உன்னை நீயே ஏமாற்றிக் கொள்கிறாயா? அப்படியிருக்குமானால் அது அசட்டுத்தனம்" என்றான் நடராஜன்.

"பாவம்! விமலாவை இதில் இழுக்காதீர்கள்" என்றாள் மல்லிகா.

"அப்படியானால் வேறு எதற்காக? அதிலும் சேகருக்கு ஏற்கனவே மனைவியும் இரு குழந்தைகளும் வேறு இருக்கும் போது......"

"சௌகரியத்துக்காகக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்."

"எனக்குப் புரியவில்லை, மல்லிகா! புரியும்படி சொல்லு!"

"புரிய வைக்க என் கதை முழுவதையும் சொல்ல வேண்டும்"

"சொல், கேட்கிறேன்."

"இப்போது சொல்ல முடியாது. என்றாவது ஒரு நாள் அதற்குச் சந்தர்ப்பம் வரும். அப்போது கேளுங்கள். முழுக் கதையையும் சொல்கிறேன்."

அதற்கு மேல் வாதாடிப் பயனில்லை என்று உணர்ந்தான் நடராஜன். "மல்லிகா! அவசரப்பட்டு ஒரு முடிவுக்கும் வராதே. உன் வாழ்க்கையைப் பாழடித்துக் கொள்ளாதே. நன்றாக யோசித்து முடிவு செய்" என்று சொல்லி விட்டுப் பிரிந்தான்.

மல்லிகா சிந்திக்க ஆரம்பித்தாள்.

* * *

கோபதாபங்கள் அடங்காதவனாகச் சேகருடைய வீட்டுக்குச் சென்றான் நடராஜன். மல்லிகாவிடம் பேசிய பிறகு சேகரைக் கேட்க எண்ணிய கேள்விகள் முன்னைவிட அதிக உறுதிப்பாட்டோடு உருவாகியிருந்தன.

இவ்வளவு சீக்கிரத்தில் மீண்டும் அவனைத் தன் வீட்டிலேயே சந்தித்த சேகருக்கு ஒரு நிமிஷம் ஒன்றும் புரியவில்லை. "வாருங்கள், டாக்டர்! இங்கே எல்லோருக்கும் உடம்பு சரியாக இருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை, வாருங்கள்" என்றான்.

"உன்னைத் தவிர மற்ற எல்லோருக்கும் உடம்பு சரியாகத்தானிருக்கிறது!"

"என்னைத் தவிரவா? எனக்கு என்ன டாக்டர் வந்து விட்டது?"

"தீராத பண நோய் பிடித்திருக்கிறது உன்னை. பணத்துக்காகப் பேராசைப் பட்டுக் கல்யாணம்கூடச் செய்து கொள்ளச் சொல்கிறது"

"அதற்கு வைத்தியம் என்ன டாக்டர்?" என்று கேட்டான் சேகர் சிரித்துக் கொண்டே.

"நாலு அறை."

"உங்கள் வைத்தியத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை, டாக்டர்! நான் நாட்டு வைத்தியத்தில் பற்றுக் கொண்டவன். நீங்கள் போய் வரலாம்!" என்றான் சேகர் மறுபடியும் சிரித்தபடியே.

தன்னை அவன் தாக்கினால் அறையவும் குத்தவும் தயாராக ஆவலோடு இருந்தான் நடராஜன். அப்போதுதான் தன் உள்ளக் கொதிப்பு அடங்கும் என்பதற்காகவே வீண் வம்புக்கு இழுத்தான். ஆனால் அதில் சிக்கிக் கொள்ளாமல் சேகர் சிரித்துப் பேசியது நடராஜனுக்கு மேலும் மேலும் ஆத்திரத்தைக் கிளப்பியது.

"கட்டிய மனைவியையும் பெற்ற மக்களையும் கூட உதறித் தள்ளி விட்டு மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ள உனக்கு வெட்கமாக இல்லையா? மானம், மரியாதை இருந்தால் இப்படி நடந்து கொள்ள மாட்டாய் நீ!"

"மானமாம்! மரியாதையாம்! வெட்கமாம்! யார் யாரிடம் வெட்கத்தைப் பற்றிப் பேசுவது? கல்யாணமாகாத ஒரு பெண்ணை மூன்று வருஷங்களாகத் தன் வீட்டிலேயே வைத்திருப்பவன் என்னிடம் வெட்கத்தைப் பற்றிப் பேசுகிறான். கல்யாணம் செய்து கொள்வதாக ஏமாற்றி அழைத்து வந்து மூன்று வருஷங்களாகத் தனக்கு அருகிலேயே ஒரு இளம் பெண்ணை வைத்துக் கொண்டிருப்பவன் மானத்தைப் பற்றிப் பேச வந்து விட்டான். என்ன அருகதையடா இருக்கிறது உனக்கு!"

சேகரை நோக்கி ஒரு தாவுதாவினான் நடராஜன். அதற்கு முன் பின்னால் நகர்ந்து கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டான் சேகர்.

நடராஜனுக்குக் கோபம் எல்லை மீறிப் போய்விட்டது. தன்னையே மறந்து விட்டான். வெறி பிடித்தவன் போல தன் பலம் கொண்ட மட்டிலும் அந்தக் கதவை ஓங்கி ஓங்கிக் குத்தினான் நடராஜன். சேகரையே அடிப்பது போன்ற பிரமையில் வெறி பிடித்துத் தோள்பட்டையிலிருந்து விரல் நுனி வரையில் வலி தெறிக்கக் குத்தினான். கைகள் தாங்கவே சளைத்துப் போய் எழும்ப மறுத்துத் தொய்ந்து விழும் வரையில் அந்தக் கதவைப் பலமாகத் தாக்கினான். கரங்களை அசைக்கக் கூட முடியாத பரிதாபகரமான நிலையில் மெல்லத் திரும்பி நடந்தான். (தொடரும்)

விளையாட்டு மன்னர்கள்-20.

மாபெரும் வெற்றி



தெருவில் ஒருவன் மாட்டை ஓட்டிக் கொண்டு போனான். அவன் கையிலிருந்த தும்பு நழுவி விட்டது. அதை அவன் கவனிக்கவில்லை. மாடு வேகமாகப் பறந்ததும்தான் கையிலுள்ள தும்பு நழுவியது தெரிந்தது. 'தும்பு போனால் போகிறது; வாலைப் பிடிக்கலாம்' என்று ஓடினான். அவன் கையில் மாடு அகப்பட்டால் தானே?

எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில் ஆறாவது அகில ரயில்வே கைப் பந்தாட்டப் போட்டியின் இறுதி விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக் குழுவினரும் பம்பாய் மேற்கத்திய ரயில்வே ஆட்டக் கோஷ்டியினரும் 'வெற்றிக்கோப்பை யாருக்கு' என்று முடிவு செய்வதில் தீவிரமாகப் போட்டி யிட்டனர். முதல் இரண்டு ஆட்டங்களை மேற்கத்திய ரயில்வே எடுத்ததும், வாலிபால் ரசிகர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். அவர்கள் பேச்சில் 'தும்பை விட்டு வாலைப் பிடிக்க' முயன்ற கதை அடிபட்டது.

"என்ன ஸார்! தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக் குழுவில் அபாரமாக ஆடக் கூடியவர்கள் இருக்கிறார்கள். இருந்தும் இரண்டு ஆட்டங்களை இழந்து விட்டார்களே..." என்றார் இளைஞர் ஒருவர்.

"ஆமாம். சார்! தும்பைவிட்டு வாலைப் பிடிக்கிற கதையா ஆகிவிடப் போவுது. அவங்களுக்கு எங்கே வெற்றி கிட்டப் போகிறது? நிச்சயம் தோல்விதான்!" என்றார் முதியவர் ஒருவர்.

"சார்! இன்றைக்கு மேற்கத்திய ரயில்வே குழுவினர் ரொம்ப ஜோராக ஆடறாங்க. முன்னலாலும், மணியும் பந்தை அடிக்கிற அடியிலே தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக்காரங்க அசந்து போயிட்டாங்க! அவங்க என்ன செய்ய முடியும்!" என்று சவால் விட்டார் மற்றொரு இளைஞர்.

இந்நிலையில் மூன்றாவது ஆட்டம் தொடங்கியது. மேற்கத்திய ரயில்வேதான் வெற்றி பெறும் என்று பல ரசிகர்கள் முடிவுக்கு வந்து விட்டார்கள். இத்தருணத்தில் விளையாட்டில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. நல்ல காலம்! மாட்டின் வாலைப் பிடிக்க முயன்ற பெரு முயற்சியில், தும்பே கிடைத்து விட்டால் மாடு அடங்கிப் போகாமல் என்ன செய்யும்?

அது வரை எதிர்க் கட்சியில் எண்ணிக்கை ஏறிக் கொண்டிருந்தது நின்றது. தென்னிந்திய ரயில்வே குழுவினர் பக்கம் எண்ணிக்கை ஏற ஆரம்பித்தது. அடுத்ததெல்லாம் வெற்றி!

கடைசி மூன்று ஆட்டங்களைச் சிரமப்பட்டுத் தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக் குழுவினர்பெற்றார்கள். தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக் குழுவினர்களின் ஆக்ரோஷமான விளையாட்டைக் கண்டு ரசிகர்கள்மெய் மறந்தார்கள்; அந்த நேரமும் மேற்கத்திய ரயில்வேயைப் பற்றிப்பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தவர்கள் இருந்தஇடம் தெரியவில்லை. வெற்றித் தேவதையே தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக் குழுவினர் பக்கம் திரும்பி விட்டாள். தோல்வியே கிட்டும் என்று எண்ணியவர்களுக்கு வெற்றி கிடைத்தால் அது மாபெரும் வெற்றிதானே?

தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக் குழுவில் டோக்கியோ சென்று விளையாடிப் பெருமை பெற்ற திரு அருணாசலம், பாரிஸ் உலகப் பந்தாட்டத்தில் கலந்து கொண்ட ஆதிக்கண்ணு, பந்தைக் குண்டு பொழிவது போல் தாக்கிய பழனிசாமி, ரங்கநாதன், பந்தை லாகவமாகத் தூக்கி அடிப்பதற்கு உதவிய ரங்கன், தாஜுடின் ஆகியவர்கள் விளையாடினார்கள்.

அன்றைய விளையாட்டில் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தவர்களில் தென்னிந்திய ரயில்வே குழுவைச் சேர்ந்த பழனிசாமியும் ஒருவர். இருபத்திரண்டு வயதேயாகும் இவ்விளைஞர் எதிர்க் கட்சியினர் பயப்படும் அளவுக்குப் பந்தைத் தாக்கினார். நல்ல உயரம்; ஆறடி இரண்டு அங்குலம் இருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!


'தோல்வியும், வெற்றிப் பாதைக்கு மைல் கற்கள்' என்பது பழமொழி. மேற்கத்திய ரயில்வே இறுதி விளையாட்டில் தோற்றாலும், அந்தக் குழுவினர் 'நன்றாக ஆடினர்' என்ற நற்பெயர் பெற்றார்கள். புலியைப் போல் ஆக்ரோஷமாகப் பந்தைத் தாக்கும் வன்மையும், நரியைப்போல் தந்திரமாக இடம் பார்த்துப் பந்தைத் தள்ளும் திறமையும் பெற்ற முன்னலால் ரசிகர்களின் உள்ளத்தில் நிரந்தர இடம் பெற்றார்.

— குண்டுமணி


அவன் க்ளாக்ஸோ குழந்தை அதனல்தான்
அவன் தாய்ப்பாலால் வளரும் குழந்தை போல் பலத்துடனும், புஷ்டியுடனும் காண்கிறன். உங்கள் குழந்தைக்குப் போதிய தாய்ப்பால் இன்றேல் க்ளாக்ஸோவைக் கொடுங்கள்.
Glaxo
க்ளாக்ஸோ குழந்தைகளுக்குச் சிறந்த பால் உணவு
"க்ளாக்ஸோ குழந்தை புத்தகம்"— இலவசமாக இதைப் பெற விரும்புவோர் "க்ளாக்ஸோ" உடன் ரோடு, சென்னை—2 என்ற விலாசத்திற்கு 50 நயா பைசா தபால் தலைகள் (தபால் செலவிற்காக) அனுப்பவும்.
க்ளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட.
பம்பாய் கல்கத்தா மதராஸ் புது டில்லி
SUNSHINE
Glaxo

கண்ணை மூடிப் படுத்த நிலையில் மனத்தைத் தன் போக்கில் விட்டு எண்ணமிட்டுக் கொண்டிருக்கவே விரும்பினாள் ஜானகி. அவள் விருப்பம் நிறைவேற முடியாமல் அம்மா சமையலறையிலிருந்து, ''ஜானகி! ஜானகி!'' என்று எட்டு வீட்டுக்குக் கேட்கும்படி கூப்பிட ஆரம்பித்தாள்.

பட்டென்று தாள் நீக்கி வெளியே வந்த ஜானகியின் முகத்தில் கடுகைப் போட்டிருந்தால் படபடவென்று வெடித்தே இருக்கும். வாயைத் திறக்காமல் வேலையில் ஈடுபட்டாள். குளியலறையைக் கழுவிக் கோலமிட்டு, அண்டாவைத் தேய்த்து நீர் நிரப்பினாள்.



திடீர்த் தீபாவளி

ஆர். எஸ். ஞானம்பாள்

வீடெங்கும் இழை கோலமிட்டாள். தின்பண்டம் தயாரிக்கும் தாயாரை நகரச்சொல்லித் தானே இரண்டு தித்திப்பு, இரண்டு காரம் செய்து எடுத்து வைத்தாள். தனியாகக் கரியடுப்பில் திரட்டுப் பாலுக்குப் பால் காய்ந்து கொண்டிருந்தது. இரவுச் சமையலுக்குக் கறிகாய் நறுக்கிக் கொண்டிருந்த ஜானகி நிமிர்ந்தாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது! கூடத்தில் மாட்டியிருந்த பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியைத் தூக்கி வந்து அம்மா ஜானகியின் முகத்துக்கு நேரே காட்டினாள்.

''என்னம்மா?''

''ஒன்றும் இல்லை. கண்ணாடியில் உன்னுடைய முகத்தைப் பார்த்துக்கொள்'' என்றாள்.

''என் முகத்துக்கு என்னவாம்?'' ஜானகியின் குரலில் இலேசாகக் கோபம் தொனித்தது.

''கோபமும், துக்கமும் சேர்ந்து உன் முகத்தை எத்தனை அழகாக வைத்திருக்கின்றன! அப்படியே பிடித்து நான் மட்டுமே பார்த்து ரசிக்கும் அந்த அழகை நீயும் பார்த்து மகிழட்டுமே என்று...'' ஜானகிக்குச் சிரிப்பு வந்து விட்டது. அம்மா சொன்னது உண்மைதான். மனத்தில் குடிகொண்டிருந்த வெறுப்பும், வருத்தமும் அவள் முகத்தைப் பார்க்கவே சகிக்காமல் சர்வ கோரமாக்கியிருந்தன. கூடவே ஜானகியின் கண்களில் நீர் துளித்தது.

அம்மா ஆதரவுடன் அவள் தலையை வருடியபடி பேசினாள்: ''ஜானகி! எனக்கு மட்டும் உன் மனசு தெரியாதா? தெய்வ சங்கல்

பத்தை யார் தடுக்க முடியும்? நானும் எத்தனையோ கோட்டைகள் கட்டினேன். இந்தத் தீபாவளி உன் தலை தீபாவளியாக இருக்கும்; மாப்பிள்ளையும், சம்பந்தியும் வருவார்கள்; பண்டிகை கோலாகலமாக நடக்கும் என்று ஆசைப் பட்டேன். ஆனால் வழக்கமான சிரிப்பும், சந்தோஷமும் கூட இல்லாமல் நீ அழுத கண்ணும், சிந்திய மூக்குமாய்...''

''நான் ஒன்றும் அழவில்லை!''

''சரி யாரோ அழுதார்கள். நீ உலகம் தெரியாத சிறு குழந்தையா? முழு மனதுடனு நான் முயற்சி செய்தோம். நடக்கவில்லையென்றால் யார் குற்றம்? நீ அந்தப் பட்டணத்துப் பிள்ளையையே நினைத்துக் கொண்டு துக்கப்படுவதும், அழுவதும் நன்றாக இல்லை. நீ இப்படி முகத்தைத் தூக்கிக் கொண்டு வருத்தப்பட்டால் என் மனம் எவ்வளவு வேதனைப்படுகிறது, தெரியுமா? நீ ரொம்ப நாட்களாகச் சொல்லிக் கொண்டிருந்தாயே என்று பச்சை வர்ணத்தில் பட்டுப் புடவையும், சிவப்பு வெல்வெட் சோளியும் எத்தனை ஆசையோடு வாங்கிக் கொண்டு வந்தான் அண்ணா. நீ அதைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் அவனையும் சங்கடப்படுத்துகிறாய்!''

பொங்கி வரும் கண்ணீரை மறைக்க ஜானகி சரே'லென்று எழுந்து போய்விட்டாள்.

★

எத்தனையோ ஜாதகங்கள் பரிசீலனைக்கு வந்ததுபோல்தான் சூரியாவின் ஜாதகமும் கிடைத்தது. அது ஜானகியின் ஜாதகத்துடன் பொருந்தியும் இருந்தது. அவள் அண்ணா சீதாராமன் நேரிலேயே போய் விசாரித்து விட்டு வந்தான். சூரியாவின் வீட்டினரும் ஜானகியைத் தங்கள் மருமகளாக்கிக் கொள்ளுவதில் ஆர்வம் காட்டினர். ''பிள்ளையாண்டான் சூரியாவுக்குப் பிடித்து விட்டால் ஒரே வாரத்தில் முகூர்த்தம் வைத்து விடலாம்'' என்றும் அவர்கள் கூறினர்.

சென்னையிலிருந்து திரும்பிய சீதாராமன் சொன்ன முறையிலேயே அக்குடும்பத்தினர் மீது மதிப்பு ஏற்பட்டு விட்டது ஜானகிக்கு. அதிலும் மணமகன் சூரியாவைப் பற்றி அவள் கேட்ட விவரங்கள் அவளைச் சொக்க வைத்தன. அவ்வளவேன்! தான் இன்னும் கண்ணாலும் காணாத சூரியாவைக் கணவனாகவே வரித்து விட்டாள். அவனுடன் பேசிச் சிரித்து விளையாடி, கோபித்துக் கொஞ்சிக் குலவிக் குடும்பம் நடத்தலானாள் மானசீகமாகவே. அவன் பெற்றோர்களை நினைத்தாலே தன்னையறியாது மரியாதையும், வணக்கமும் தோன்றின. அவனுடன் பிறந்தவர்கள் அவளுடைய நெருங்கிய உறவினர்கள் போல் அவள் நினைவில் நிலவினர்.

ஒருவாரம் ஒரு மாதம் ஆகியும் ஒன்றும் தகவல் இல்லை. மேலும் இரு கடிதங்கள் எழுதினான் சீதாராமன். நாளாக நாளாக அவன் நம்பிக்கையை இழந்து விட்டான். மற்றொரு முறை நேரில் சென்று வந்தால் என்ன என்று எண்ணியதை வாய்விட்டுக் கூற முடியாமல் கூச்சம் தடுத்தது. அவன் மனத்தைப் படம் பிடித்துப் பார்த்ததே போல் அவன் தாயார் ஒரு நாள் கேட்டாள். ஆனால் சீதாராமன் ஒப்பவில்லை. 'பதில் வரவில்லை என்றால் என்ன அர்த்தம்! நம் பெண்ணை அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது தானே!'' என்றான்.


ஜானகிக்குத் துக்கம் பொங்கி வந்தது. தன்னை ஒருவனுக்கு-, சூரியாவுக்கு-, பிடிக்காமல் போகும் என்று அவள் நினைத்துப் பார்த்ததுகூட இல்லை. தன்னைப் பற்றி, தன் அழகைப் பற்றி அவ்வளவு தூரம் அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

'அதை வெளிப்படையாகத்தான் சொல்லி விடட்டுமே!''என்றாள் ஜானகியின் தாயார்.

''சொல்ல மாட்டார்கள், அம்மா! அவர்கள் நிரம்ப மரியாதைதெரிந்தவர்கள். நம்முடைய மனம் புண்பட்டுவிடக்கூடாது என்று யோசனையாக இருக்கும்!''

''மண்ணாங்கட்டி! உண்டு, இல்லை என்று தெரிவிக்காமல், மூடுமந்திரமாகச் சந்தேகத்தில் இண்டாட வைப்பதுதான் மரியாதையோ? சரி! சரி! விட்டுத்தள்ளு. ஒருவன் மனைவியை இன்னொருவன் கட்ட முடியுமா? இனிமேல் அவளுக்கென்று ஒருவன் பிறக்கப் போகிறதில்லை!'' என்று பேச்சை முடித்துவிட்டாள் அவள் தாயார்.

ஜானகி அவ்வளவு சுலபத்தில் சமாதானம் அடைந்து விடுவதாக இல்லை. அவர்களுக்கு, சூரியாவுக்குத் தன்னைப் பிடித்திருக்காது என்று நினைக்கும்போதே அவளுக்குக் 'குப்' பென்று நெஞ்சை அடைத்தது. கண் இருண்டு உடல் முழுதும் வியர்த்தது.



அவன்தான் எப்படியெல்லாம் கற்பனை செய்து மகிழ்ந்திருந்தாள்! ஆதாரமற்ற கற்பனைதான்! கண்ணால் ஒரு முறைகூடப் பார்த்தது இல்லை; அவன் புகைப்படத்தைக்கூட அவள் பார்த்தது இல்லை என்பதும் உண்மைதான். ஆனாலும் அவள் மனம் சூரியாவை மறக்க முடியாமல் தவித்தது.

★

திரும்பி வரும் தீபாவளியைக் கண்டு, கையில் காசில்லாத சம்சாரிபோல் கசந்து வழிந்தாள் ஜானகி. தீபாவளி என்றாலே சீதாராமன் பச்சைக் குழந்தையைப்போல் குதித்துக் களிப்பான். பாட்டும், கூத்தும், கேலியும் சிரிப்புமாக அன்று வீடு கல்யாணம் பட்ட பாடுபடும். அவ்வளவுக்கும் ஜானகியும் ஈடு கொடுப்பாள். இந்த வருடம் அவளுக்கு எதிலுமே உற்சாகமில்லை. 'பண்டிகையும் பருவமும் யாருக்கு வேண்டியிருக்கின்றன? அண்ணாவும், அம்மாவும் என்ன சொன்னாலும் சரி, கங்காஸ்நானம் செய்யப் போவதில்லை; புதிசும் கட்டிக் கொள்ளப் போவதில்லை' என்று ஒரு மாதத்துக்கு முன்பே அவள் தீர்மானம் செய்து விட்டாள்.

இரவு படுத்துக் கொள்ளும்பொழுதுகூட அவள் தீர்மானம் உறுதியாகத்தான் இருந்தது. ஆனால் விடியற்காலம் அம்மா எண்ணெய் தேய்த்துக் கொள்ள எழுப்பிய பொழுது, "சீக்கிரம் குளித்து விட்டு வா, ஜானகி!" என்று அண்ணா அவசரப்படுத்திய பொழுது அவள் ஒன்றுமே பேசவில்லை. அவளால் பேச முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம்மேல் அன்பு கொண்டவரை, முன்பின் அறியாத யாரோ ஒருவரை நினைத்துக் கொண்டு, நம்மீது உயிரையே வைத்திருக்கும் பெற்றோர்களுக்கு வருத்தம் கொடுப்பானேன் என்று நியாயமாகவும் செய்தாள், சூரியாவை அடையாமல் என்ன தீபாவளி என்று கொந்தளித்த எண்ணத்துக்கு எதிராக.

பட்சணங்களையும் காப்பியையும் குடித்தபடியே, வானொலியில் தீபாவளி விசேஷ நிகழ்ச்சிகளைக் கேட்டு முடித்து விட்டுச் சீதாராமனையும் இழுத்துக் கொண்டு ஊர் சுற்றப் புறப்பட்டனர் அவன் நண்பர்கள்.

ஒரு தூக்குப் பட்சணத்தைக் கொடுத்து, "கோமளா வீட்டுக்குப் போய்விட்டு வா" என்று அனுப்பினாள் அவள் தாயார்.

"அவளே வருவாள். கொடுத்தனுப்பு. நான் தூங்கப் போகிறேன்" என்ற ஜானகியை அம்மா விடவில்லை. "குழந்தை மாமி உன் புடவையைப் பார்க்க வேண்டும் என்றாள். போய் மாமாவுக்கும், மாமிக்கும் நமஸ்காரம் செய்துவிட்டு வா" என்று வற்புறுத்தி அவளை அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.

★

பளபளவென்று மின்னும் கரிய திருமேனியில் பன்னிரு திருமண்ணும் பளிச்சென்று துலங்க, ராகம் போட்டுத் திவ்யப் பிரபந்தப் பாடல்களைப் படித்துக்கொண்டு திண்ணையை நிறைந்து வீற்றிருந்த ராகவாச்சாரியார் முகம் மலர, "வாம்மா ஜானகி, கங்காஸ்நானம் ஆச்சா?" என்று விசாரித்தார்.

''ஆச்சு, மாமா! நமஸ்காரம் செய்கிறேன்'' என்று அவர் முன் நிலத்தில் நெற்றி தோயப் பணிந்து எழுந்தாள். உள்ளே கலகலவென்று சிரிப்பும் பேச்சரவமும் கேட்கவே, ''யாரது, சாரங்கண்ணாவா? எப்பொழுது வந்தார்?'' என்று கூவிக் கொண்டே ஓரே எட்டில் ரேழியைக் கடந்து கூடத்துக்குப் போய் நின்றாள். சாரங்கன் மட்டும் இருப்பதாக நினைத்து ஓடிவந்தவள் எதிரே இருந்த அன்னிய புருஷனைக் கண்டு வெட்கத்தால் குன்றிப் போனாள்.

அவள் தன்னைச் சமாளித்துக் கொள்ளுவதற்குள் சாரங்கன், ''என்ன ஜானகி! இந்த வருஷமும் தலைதீபாவளி இல்லையா? அந்தத் தடியன் சீதாராமன் தூங்குகிறானா?'' என்று கேலி செய்யத் தொடங்கி விட்டான்.

ஜானகியும் கூடச்சுடப் பதில் கூற வல்லவள் தான். சாரங்கனின் எதிரே அமர்ந்திருந்த வாலிபன் தன்னையே விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து பேசாமல் உள்ளே போய் விட்டாள்.

''வா, ஜானகி! கங்கா ஸ்நானம் ஆச்சா? இந்தப் பச்சைப் புடவை உன் உடம்புக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கிறதே! என் கண்ணே பட்டுவிடும்'' என்று தோழியை எதிர்கொண்டு வரவேற்றாள் கோமளா.

தன்னை வணங்கிய ஜானகியை, ''சீக்கிரம் கல்யாணமாகட்டும்'' என்று வாழ்த்திய குமுதா மாமி தொடர்ந்து, ''அடுத்த வருஷமாவது உன் தலைதீபாவளி, கோமளாவின் தலைதீபாவளி இரண்டும் நடக்கவேணும். உனக்குக் கல்யாணமாகவில்லையே என்று உன் அம்மா கவலைப்படுகிறாள். இங்கே கடன் வாங்கியும் பட்டினி. ஒரு நல்ல நாள் கிழமை என்றால் வரப் போக இயலாமல் என்ன உத்தியோகம் வேண்டியிருக்கு?'' என்றாள்.

அந்தமான் தீவில் நடக்கும் அபிவிருத்தித் திட்ட வேலைகளை மேற்பார்வையிடும் அதிகாரியாகக் கோமளாவின் கணவர் சர்க்காரால் நியமிக்கப்பட்டிருந்தார். கல்யாணம் ஆனதிலிருந்து இந்தியாவுக்கே வந்துவிட அவர் செய்த முயற்சிகள் சீக்கிரமே பலிதமாகும் போல் இருந்ததால், தலை தீபாவளிக்கென்று ஒரு நடை வந்துபோக இயலவில்லை அவருக்கு. அதனால் கோமளாவின் தலை தீபாவளி சாதாரணத் தீபாவளியாகவே நடந்தது.

தன் தாயார் ஜானகியுடன் பேச ஆரம்பித்ததுமே, கோமளா கூடத்துக்குப் போய் விட்டாள். அங்கே சாரங்கனும் அவன் நண்பனும் சதுரங்கம் விளையாடுவதும், அவர்கள் பேச்சில் கோமளாவும் கலந்து கொண்டு சிரிப்பதும் சமையலறையிலிருந்த ஜானகிக்கு நன்கு தெரிந்தன. சாரங்கன் நண்பனின் கண்கள் கணைத்துக் கொருமுறை வாயிலை நோக்குவதும் அவளுக்குப் புலனாகாமலில்லை.

''ஆனாலும் உனக்கு ரொம்பத் துடுக்கு வாய், அண்ணா! ஜானகியை நீ அப்படிக் கேலி செய்திருக்கக் கூடாது. அவளே நொந்து போய்க் கிடக்கிறாள். இந்த வருஷமும் கல்யாணம் நிச்சயமாகவில்லையே என்று அவர்கள் வீட்டில் எல்லோருக்குமே வருத்தம்!''

''ஏன் இப்படித் தள்ளித் தள்ளிப் போகிறது ஜானகிக்கு என்ன குறைச்சல்? சீதாராமன் கடைசியாகச் சென்னைக்கு வந்திருந்த பொழுது கூட 'இந்த ஆவணியில் ஜானகியின்

கல்யாணம் நடந்துவிடும்' என்று வெகு நிச்சயமாகச் சொன்னுனே! ஏதோ வரனைப் பற்றிக் கூடச் சொன்னுன். எனக்குப் பரீட்சைக்குப் படிக்கும் மும்முரத்தில் அதைச் சரியாக மனத்தில் வாங்கிக் கொள்ளவில்லை. ஏன் அந்த இடம் நிச்சயமாகவில்லை? ஜானகியைப் பிடிக்கவில்லையா, அந்தத் துரதிர்ஷ்டசாலிக்கு? இல்லை, பணங்காசு தகராறு?''

கேள்விமேல் கேள்வியாக அடுக்கும் சாரங்கனுக்குப் பதில் சொல்லுவதற்கு முன் ஜானகி வீட்டுக்குப் புறப்பட்டு விட்டதைக் கண்டு, ''அதற்குள் என்ன அவசரம், ஜானகி? அம்மாவின் 'போர்' சகிக்காமல் ஓடிவந்து விட்டேன். நீ சிக்கிக்கொண்டாய். என் மனமார்ந்த அனுதாபம்'' என்று கலகலவெனச் சிரித்தபடியே விடை கொடுத்தாள்கோமளா.

'மனக்கவலையை மறந்து நல் வயதொத்த தோழியுடன் பேசிக் கொண்டிருக்கட்டும்' என்றுதான் ஜானகியைக் கோமளாவின் வீட்டுக்கு அனுப்பினுள் அவள் தாயார். அங்கிருந்து வந்ததிலிருந்து கேவிக் கேவி அழும் பெண்ணின் மனநிலை அவளுக்குப் புரியவே இல்லை. போன இடத்தில் என்ன நடந்தது என்று அறிய அவள் செய்த முயற்சிகள் பலிக்கவும்இல்லை. 'வேலை என்ன? ஏதாவது கேலி செய்திருப்பார்கள். தொட்டதற்கெல்லாம் இவளுக்கு எப்படித்தான் அழுகை வருகிறதோ? சே! வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு இந்த நரக வேதனையை அனுபவிப்பதை விட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்' என்று பெரிதாகச் சலித்துக் கொண்டே சமையலைக் கவனிக்கப் போய் விட்டாள்.

★

''**சா**ப்பிடலாமே!'' என்று நண்பனை அழைத்தான் சாரங்கன். நண்பன் பதில் சொல்லாமல் ஏதோ பலத்த யோசனையில் ஆழ்ந்து கிடந்தான்.

கோமளா சொன்னுள்: ''நீங்கள், ஆண்கள் எல்லோருமே ஒரு ஜாதிக் கற்கள்தான். பெண்கள் என்றுலே, ஏதோ தெருவாசலில் கிடப்பது போல்தான் அலட்சியம்.''

''உன் குற்றச்சாட்டுக்கு அப்புறம் பதில் சொல்கிறேன். விஷயத்தைச் சொல்.''

''விஷயமென்ன? ஜானகியின் போட்டோவைக் கூட அனுப்பினுர்கள். பிடித்திருந்தால் பிடித்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். பிடிக்கவில்லை என்றுல் அதையும் சொல்லிவிட வேண்டியதுதானே? அதற்கும் தைரியம் கிடையாது. இனைற்றில் கல் போட்டதுபோல் இருக்கிறுர்கள்'' என்றுள் கோமளா.

''என்ன மிஸ்டர்! பசிக்கவில்லையா?'' நண்பனை உலுக்கினுன் சாரங்கன்.

''சாரங்கன்! எனக்கு ஒரு உதவி செய்வீர்களா? உங்கள் நண்பர் சீதாராமனை நான் பார்க்க வேண்டுமே?'' என்றுன் நண்பன்.

''பார்த்து? ..

''அவர் தங்கையிடம் நான் மன்னிப்பு பெற வேண்டும்.''

''எதற்கு? நீங்கள் என்ன செய்தீர்கள்? ஒரே வீட்டுக் குழந்தைகள் போல் வளர்ந்தவர்கள் நாங்கள்; அந்த உரிமையில் நான் கேலி செய்ததை ஜானகி தவருக எடுத்துக் கொள்ளவே மாட்டாள். புது மனிதர் நீங்கள் இருந்ததால் பேசாது போய் விட்டாளே தவிர, இல்லாவிட்டால் பதிலுக்கு அவளும் என்னை அழ வைத்திருப்பாள். இடையில் நீங்கள் ஏன் அலட்டிக் கொள்கிறீர்கள்?''

கழிவிரக்கம் தொனிக்கச் சிரித்தான் நண்பன். ''சாரங்கன்! நாலைந்து மாதங்களுக்கு முன் எங்கள் வீட்டுக்கு ஒரு மனிதர் வந்தார், தம் தங்கைக்கு வரன் தேடி. அவர் கூறிய விவரங்களெல்லாம் என் பெற்றேருக்குப் பிடித்திருந்தன. சீக்கிரமே பெண் பார்க்க வருவதாகச் சொல்லி அனுப்பினுர்கள். வேலை உயர்வுக்கான பரீட்சையில் தேற வேண்டும், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆத்திரத்தில் மூழ்கிக் கிடந்த எனக்குக் கல்யாணத்தைப் பற்றி நினைக்க நேரமேது? பரீட்சை முடியட்டும் என்று தட்டிக் கழித்தேன். அதை ஏற்காமல் பெரியவர்கள் பெண்ணின் புகைப்படத்தைக் காட்டி மிகவும் வற்புறுத்தினுர்கள். நான் கோபத்துடன், 'நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை' என்று கத்தவே, அப்பா வெகுண்டு, 'எப்படியோ ஒழிந்து போ. உன் வழிக்கு இனி வந்தால் ஏன் என்று கேள்' என்று என்னுடன் பேசுவதை நிறுத்தி விட்டதையோ, அம்மா நிராசையுடன் கண்ணீர் வடித்ததையோ நான் லட்சியம் செய்யவில்லை....''

''பரீட்சை முடிந்ததும் முடியாததுமாக 'ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்' என்று நான் அழைத்ததை நம்பி என்னுடன் வந்தீர்கள்; வந்த இடத்தில் எப்பேர்ப்பட்ட ஸ்திரீ ரத்தினத்தை இழக்க இருந்தீர்கள் என்பது புலனுயிற்று. இப்பொழுது ஜானகியின் காலில் விழவும் தயாராகி விட்டீர்கள், இல்லையா?'' என்றுன் சாரங்கன்.


★


''**யா**ர் சாரங்கனு! தலைதீபாவளி மாப்பிள்ளையை அந்தமானுக்கு ஓட்டி விட்டு உனக்கு இங்கென்னடா தீபாவளி?'' என்று கேலிசெய்து வரவேற்றுன் சீதாராமன்.

''ஏ, சாப்பாட்டு ராமா! வாயை மூடு. ஒன்றுங்கினால் மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டுதான் தீபாவளிக்கு வந்திருக்கிறேன். இவரை யார் என்று தெரிகிறதா பார்!'' என்று தன் நண்பனை முன்னுல் பிடித்துத் தள்ளினுன் சாரங்கன்.

சீதாராமன் புருவத்தை நெறித்தபடியே, ''நீங்கள்...'' என்று முடிக்குமுன் ''சூரியா தான்'' என்று சீதாராமனின் கையை நேசத்துடன் பற்றிக் குலுக்கினுன் சூரியா.

''சூரியா! கல்யாணம் ஆன வருஷம் கணவனும் மனைவியும் சேர்ந்து கொண்டாடும் தீபாவளியைத் தலைதீபாவளி என்கிறோம். ஜானகியும் நீங்களும் கல்யாணத்துக்கு முன் கொண்டாடும் இந்தத் தீபாவளிக்கு என்ன பெயர்?'' என்று சாரங்கன் கேட்ட கேள்விக்குச் சூரியாவினுல் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. ஜானகி பரிமாறிய அற்புதமான சேமியாப் பாயசத்தை ரசித்துக் கொண்டிருந்தான் சூரியா.





விநியோகஸ்தர்கள்: மெஸர்ஸ் தாமஸின் டிரேடிங் கார்ப்பொரேஷன், 1, டாக்டர் சந்திரம்லேன், மேற்கு புலிவார் ரோடு, திருச்சி ● மெஸர்ஸ் கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, சரத்போஸ் ரோடு, கல்கத்தா-26

விஷப் பாம்பு

பொழுது விடிய இன்னும் நான்கு நாழிகை இருக்கும் போதே அவன் படுக்கையி லிருந்து எழுந்துவிட்டான். கலப்பையை எடுத்துத்தோளில் மாட்டிக் கொண்டான். மாடுகளைக் கையில் பிடித்துக் கொண்டு கழனிக்குக் கிளம்பி விட்டான். வெய்யில் ஏறி உடம்பில் உறைக்க ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே வயலில் ஒரு சால் ஓட்டிவிட வேண்டுமென்றே அவன் கிளம்பினான்.

வயலில் அவன் ஏர் அடித்துக் கொண்டிருந்தான். அருணோதயம் ஆகிப் பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாகப் புலர்ந்து வந்தது. எனினும் இருள் நன்றாகப் பிரியவில்லை. இரவின் அமைதியும் முற்றிலும் கலையவில்லை.

அந்த வேளையில் அவன் வயலைநோக்கி இரண்டு பேர்கள் வந்து கொண்டிருந்தார்கள். வேலையில் முனைந்திருந்த உழவன் அவர்கள் வருவதைக் கவனிக்கவில்லை. வயலைக் குறுக்கே கடந்து செல்வதற்காக அவர்கள் வயலில் இறங்கிய பிறகுதான் அவன் கவனித்தான். உடனே அவன் தான் பிடித்திருந்த கலப்பையை விட்டு விட்டு ஓடோடியும் வந்து அவர்கள் காலிலே மிகுந்த பணிவுடன் விழுந்து வணங்கினான்.

அவர்களுடைய பாததூளி தங்கள் இல்லங்களிலேபட்டு அந்த இடங்களைப் புனிதமாக்க வேண்டும் என்று எத்தனையோ பேர் தவம் கிடப்பதை அவன் அறிவான். அவர்களாகவே வலிய வந்து தங்கள் பாதகமலங்களைத் தன்னுடைய பூமியில் படிய வைத்து நடப்பதை அவன் தனக்குக் கிட்டிய பெரும் பாக்கியமாகவே கருதினான். அரசன் முதல் அனைவரும் போற்றி வணங்கும் மகான் கௌதம



தி.நா.சுப்பிரமணியம்



"வெடிக்கப் போகிறது என்று எத்தனை நேரம் காத்துக் கொண்டிருக்கிறது? நான் போய்த் தூங்கறேன். வெடிச்சால் வந்து சொல்லுங்கடா!"

புத்தரும், அவருடைய முக்கிய சிஷ்யரான ஆனந்தருமே அவ்விருவர். அவர்களும் அருள்நோக்குடன் பாவித்து, அவனை ஆசீர்வதித்து விட்டுத் தங்கள் வழியே சென்றனர்.

வயலைக் கடக்கும்போது புத்தர் பெருமான் தம் சிஷ்யரைப் பார்த்து, "ஆனந்தா, அதோ பார், ஒரு விஷப் பாம்பு!" என்றார்.

"ஆமாம், *பதந்த! மிகக் கொடிய விஷப் பாம்பு" என்று பதிலுக்கு ஆமோதித்தார் ஆனந்தர்.

இருவரும் நிற்கவில்லை; மேலே நடந்து போய் விட்டார்கள்.

உழவனுக்கு அவர்கள் பேச்சு பெருத்த ஆச்சரியமாக இருந்தது. இத்தனை நேரம் அவன் அங்கேதானே உழுது கொண்டிருந்தான். அவன் கண்ணில் அந்தப் பாம்பு படவில்லையே. ஆகவே அவன் அவர்கள் குறிப்பிட்ட திசையை நோக்கி மிகுந்த கவனத்துடன் விரைந்தான்.

அவ்விடத்திலே அவன் கண்டது, அவனை உண்மையிலே திடுக்கிடச் செய்தது. அங்கே அவன் பாம்பு எதையும் காணவில்லை. அதற்குப் பதிலாகப் பண முடிப்பு ஒன்று கிடந்தது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. பகவான் கூறியது சரிதான். பாம்பிலும் மிகக் கொடிய விஷம் வாய்ந்ததுதான் அந்தப் பண முடிப்பு. அதை என்ன செய்வதென்று அவனுக்கு விளங்கவில்லை. பகவானைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பதற்கும் வழியில்லை. அவர்கள் அப்போதே போய் விட்டார்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிய அவன் அந்த முடிப்பை வயலின் ஒரு மூலையிலே ஒதுக்கிச் சருகுகளால் மூடி விட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றான்.

பொழுது நன்றாக விடிந்து சூரியனும் எரிக்க ஆரம்பித்து விட்டான். அவன் வேலை இன்னும் முடியவில்லை. முடியும் தறுவாயில் இருந்தது. அதற்குள்ளாக நகரத்திலிருந்து காவலர்கள் நாலுபுறமும் தேடிக் கொண்டு வந்தார்கள். எதையும் விடாமல் நுணுக்கமாக ஆராய்ந்து வந்தவர்களுக்கு அவன் வயலிலே ஒரு மூலையில் சருகுகளால் மூடப்பட்டுக் கிடந்த பண முடிப்பும் கிடைத்தது.

நகரத்திலே பெரிய பணக்காரனான பிரமுகன் ஒருவன் வீட்டிலிருந்துமுந்தின இரவு திருட்டுப் போன பணம் அது. திருட்டுப்போன பொருள், தடயம் கிடைத்து விட்டது. திருடனைப் பிடிக்க வேண்டியதுதானே பாக்கி. அவர்கள் உழவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

திருட்டைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று அவன் எவ்வளவோ கூறிப் பார்த்தான். ஆனால் அதற்கு அவர்கள் செவி சாய்க்கவே இல்லை. அவனை இழுத்துக் கொண்டு போய் நகர அதிகாரிகளிடம் விட்டு விட்டார்கள்.

முதல் நாள் இரவு நகரின் பெரிய பணக்காரன் ஒருவன் வீட்டிலிருந்து ஏராளமான பொருள்கள் களவு போய் விட்டன. அதில் ஒரு பகுதிதான் இப்பொழுது கிடைத்த பணமுடிப்பு. திருட்டுப்போன மற்றப் பொருள்களும் கிடைக்கவேண்டும். அந்தத் திருட்டைத் தனியாக ஒரு மனிதனால் செய்திருக்க முடியாது என்றே அதிகாரிகள் எண்ணினார்கள். ஆகவே, இன்னும் யார் யார் கூட்டாளிகள் என்பதையும் அவர்கள் அறிந்து கொண்டாக வேண்டும்.

அதற்காக அவர்கள் உழவனைக் கிட்டி கட்டி நெருக்கிவிசாரித்தார்கள். அவனோ, "எனக்கு அந்தத் திருட்டைப் பற்றி ஒன்றுமே தெரியாது. உண்மையில் திருட்டு நடந்ததென்பதே ஊர்க் காவலர்கள் சொல்லித்தான் தெரியும். அந்தப் பண முடிப்பு எப்படி அவ்விடம் வந்ததென்பதையும் அறியேன்" என்று திட்டமாகக் கூறினான். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை. அவனே திருடன் என்று முடிவு செய்து அவனுடைய சொத்தைப் பறி முதல் செய்வதோடு அவனையும் கழுவேற்ற வேண்டுமென்று தீர்ப்பு அளித்தார்கள். அதனை நிறை

* 'பதந்த' என்னும் சொல் 'வழிபாட்டுக்கு உரிய பெரியோய்' எனப்பொருள்படும்.

வேற்றக் காவலர்கள் அவனைக் கொலைக் களத்துக்கு இட்டுச் சென்றார்கள்.

காரியங்களின் துரித கதியைக் கண்டு உழவன் திகைத்து விட்டான். என்ன செய்வதென்று அவனுக்கு விளங்கவில்லை. காலையில் பொழுது விடியும் போதே பகவான் புத்தருடைய தரிசனமும் அவருடைய பாததூளியும் தனக்குக் கிட்டிய பாக்கியத்தை எண்ணி அவன் பெருமிதம் அடைந்திருந்தான். இப்போது அந்தப் பாக்கியமும் அவனுக்கு உதவவில்லை. அன்றைய தினம் நடந்த நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக அவன் நினைத்துப் பார்த்தான். அந்தப் பண முடிப்பைக் கொடும் விஷப் பாம்பு என்று பகவான் கூறியது எவ்வளவு உண்மையாகப் போய் விட்டது என்பதையே அவன் திரும்பத் திரும்ப நினைவு கூர்ந்தான்.

''ஆனந்தா, அதோ பார், ஒரு விஷப் பாம்பு!'' — ''ஆமாம், பதந்த! மிகக் கொடிய விஷப் பாம்பு.''

அவனையும் அறியாமல் அவன் வாய் அந்த வார்த்தைகளை முணுமுணுத்தது. அவற்றைக் கூறுவதனால் அவன் உள்ளத்திலே ஏதோ ஒரு வகையான சாந்தி தோன்றுவதுபோல் இருந்தது. அவன் அந்த வார்த்தைகளையே திரும்பத் திரும்பக் கூற ஆரம்பித்து விட்டான்.


கழுவேற்ற அவனை இட்டுச் சென்ற கொலையாளிகள் அவன் இவ்விதம் ஜபித்துக் கொண்டு வருவதைக் கேட்டார்கள். அது அவர்களுக்குச் சந்தேகத்தை அளித்தது. அவனையே விசாரித்தார்கள்.

''உங்களுக்குத் தெரியாது; சொன்னாலும் விளங்காது'' என்றான் அவன்.

அவன் இவ்விதம் சொன்னவுடனே அவர்கள் அவனைத் தங்கள் அதிகாரிகளிடம் அழைத்துச் சென்று விவரத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் கேட்டபோதும் அவன் அதையேதான் சொன்னான். எனினும் தன்னுடைய ஜபத்தை அவன் நிறுத்தவில்லை. ''அரசர் பெருமான் கேட்டால் விளக்குவேன்'' என்று தெரிவித்து விட்டான்.

கடைசியில் அவர்கள் அவனை அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். அப்போதும் அவன் சொல்லிக் கொண்டிருந்தான்: ''ஆனந்தா, அதோ பார், ஒரு விஷப் பாம்பு''—''ஆமாம், பதந்த! மிகக் கொடிய விஷப் பாம்பு'' என்று.

அதைக் கேட்டதும் அரசனுக்குப் பகவான் புத்தர் திருவாய் மலரும் அருள் உபதேசமே நினைவுக்கு வந்தது. ஆகவே அவன் உழவனை நோக்கி, நடந்தது முழுவதையும் விவரமாக விளக்கிக் கூறுமாறு கேட்டான். உழவனும் அன்றையதினம் தனக்கு ஏற்பட்ட அனுபவம் முழுவதையும் ஒன்று விடாமல் எடுத்துரைத்தான். அவன் கூறியது உண்மையாகவே இருக்கும் என்று அரசனுக்குத் தோன்றியது. எனினும், பகவான் புத்தரையே நேரில் கண்டு கேட்டு விடுவது என்று அரசன் தீர்மானித்தான். உழவனைக் கூடவே அழைத்துக் கொண்டு பகவான் தங்கியிருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அங்கே போன பிறகுதான் அரசனுக்கு உண்மை விளங்கியது.



உழவன் நடந்தது நடந்தபடியே கூறினான். அவனுக்கு நேர இருந்த ஆபத்தை முன்னதாகவே அறிந்த பகவான் புத்தர் அவனை உய்விக்க வேண்டியே விடியற்காலையில் தம் சிஷ்யர் ஆனந்தருடன் அங்கே சென்றாராம். அவன் குற்றமற்றவன் என்பது அரசனுக்கு விளங்கிவிட்டது.

உண்மையில் அந்தத் திருட்டை நடத்திய நால்வரும் களவுப் பொருளைத் தங்களுக்குள்ளே பங்கு போட்டுக் கொள்ள அந்த உழவனுடைய நிலத்திலே தங்கினார்கள். அவர்களிலே ஒருவன் மற்றவர்களுக்குத் தெரியாமல் அந்தப் பணத்தைத் தானே எடுத்துக் கொள்ளக் கருதி இரகசியமாக ஒரு துணியிலே முடிந்து மறைத்து வைத்துக் கொண்டான். ஆனால் களவாடிய பொருள்களைத் தங்களுக்குள்ளே பங்கு போட்டுக் கொண்டு அவர்கள் அந்த இடத்திலிருந்து கிளம்பியபோது அவனால் அந்த முடிப்பை எடுத்துச் செல்ல முடியவில்லை. அது நழுவியது. அந்தப் பழி உழவன் மீது விழக்கூடாது என்று அவனைக் காப்பாற்றிக் கரையேற்றவே பகவான் வலுவிலே அவனைத் தேடி அடைந்து அருள் சுரந்தார்.

பகவான் அருளைக் கண்டு உழவன் என்ன, அரசனும் வியந்தான்.

பஸ்ஸூக்காக எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது?



ஒரு பஸ் போக்குவரத்து ஸ்தாபனத்தின் திறமையும் பிரயோஜனமும், அது மணிக்கணக்குபடி தன் பஸ்களை ஓட்டுவதையே பெரிதும் பொறுத்திருக்கிறது. வீண் தாமதங்கள் ஏற்படின் அது தன் பெயரை இழப்பதுடன், பிரயாணிகளின் அபிமானத்தையும் இழக்கிறது.

மோட்டார் வண்டி நீண்டகால உழைப்பிற்கென மிக ஜாக்கிரதையுடன் தயாரிக்கப்படுவது 'உண்மையே. ஆனால் அது ஓடஓட உறுப்புகளின் தேய்வு அதிகரிப்பதால் நாளடைவில் எரிபொருள் செலவு அதிகரிப்பதுடன், புதிய உறுப்புகளை பூட்டுவதும் அவசியமாகிறது. இவ்வகையில் ஏற்படும் குறைகளை தவிர்க்க டி. வி. எஸ். ஸ்தாபனத்தில் மிக நவீனமான யந்திரங்கள் இருப்பதுடன், பிரத்யேக பயிற்சிபெற்ற சேவையாளரும் உள்ளனர். இவர்கள் கையில் உருவாகும் தேய்ந்த உறுப்புகள் புதியனபோல் நீண்டகால சேவை புரிகின்றன. உங்களுக்கு எரிபொருள் செலவோடு, பராமரிப்புச் செலவும் குறைகிறது. அதோடு மட்டுமல்ல, உங்கள் ஸ்தாபனத்திடம் பிரயாணிகள் கொண்டுள்ள நல்லபிப்பிராயமும் ஓங்கி வளருகிறது.

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார்

மதுரை • திருச்சி • திருநெல்வேலி

சுந்தரம் மோட்டார்ஸ்



79. உறிஞ்சிகளின் ஒத்துழையாமை

இரைப்பையில் ஜீரணமான ஆகாரம் சிறுகுடல் வழியாகச் செல்லும்போது ஆகாரத்திலுள்ள சத்துப் பொருள்கள் கிரஹிக்கப்படுகின்றன. குடலில் செல்லும்போது நாம் உண்ட ஆகாரம் 'கைல்' என்னும் திரவ ரூபத்தில் இருக்கிறது. இதை நமது வைத்திய சாஸ்திரங்கள் 'அன்ன ரஸம்' என்று கூறும்.

குடற்குழாயில் உட்புறத்தில் மிகமிக நுண்ணிய 'வில்லை' என்னும் உறுப்புகள் நீட்டிக்கொண்டு நிற்கின்றன. இந்த 'வில்லை'கள், குடல் வழியே செல்லும் அன்ன ரஸத்திலுள்ள, உடல் வளர்ச்சிக்கும், பலம், ஸஹன சக்தி ஆகியவற்றுக்கும் உதவக்கூடிய அம்சங்களை உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றன. இப்படி உறிஞ்சி எடுக்கப்படும் அம்சத்துக்கு நமது சாஸ்திரங்களில் 'ரஸ தாது' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறிஞ்சி எற்கப்பட்ட சத்துப்பொருள் நிறைந்த ரஸ தாதுவானது அதற்காக உள்ள நுண் குழாய்கள் மூலம் தேகத்தில் பாய்ந்து, பிறகு ரத்தத்தின் அம்சமாக மாறி, ரத்தக் குழாய்கள் மூலம் தேகம் முழுவதும் வியாபிக்கிறது.

இந்த ரத்தத்தில் பிராணவாயுவைக் கொண்டு செல்லும் செந்நிற ஜீவாணுக்கள் இருக்கின்றன. மேலும் வெண்ணிற ஜீவாணுக்களும் இந்த ரத்தத்தில் இருக்கின்றன. அவ்விவத்தைச் சேர்ந்தவைகள் 'தோட்டி' வேலை முதல் உடலை வியாதியினின்றும் காக்கும் சிப்பாய்த் தொழில் வரை புரிகின்றன. சரீரமென்பது ஒரு கோயில். இதில் கடவுள் வசிக்கிறார். இக் கோயிலை உள்ளும் புறமும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டாமா? அதற்காக வேலை செய்யும் வெண்ணிற ஜீவாணுக்கள் சில. அல்லது சில வகை. தெருவில் ஓடும் நாயும் பன்றியும் கோயிலின் உள்ளே புகுந்தால் நன்றாயிருக்குமா? அவைகளை விரட்டச் சிலர் வேணும் அல்லவா? வியாதிகளுக்குக் காரணம் ஏற்படினும் அவற்றைத் தடுத்துச் சரீரத்தில் புகாமல்-அல்லது புகுந்தாலும் நிலை பெற்று நிற்காமல் நாட்டைக் காக்கும் சிப்பாய்களைப் போல் உடனே விரட்டி அடிக்கவும் வேணுமல்லவா? அவ்வகையில் பணியாற்றும் வெண்ணிற ஜீவாணுக்கள் சில. அல்லது சிலவகை.

சரீரத்தின் வளர்ச்சிக்குச் சாதகமான அல்லது நமது வேலை முதலியவற்றால் தேய்வுறும் பாகங்களைச் சரிக்கட்டுவதற்கு அவசியமான - சத்துப் பொருள்களை ரத்தத்திலுள்ள ரஸ தாதுவின் அம்சம் உடன் கொண்டு சென்று அங்கங்கேயும் ஈந்து உதவுகிறது. உயிர்ப் பொருளுக்கு இன்றியமையாத 'அமிர்தம்' போன்ற பிராணவாயுவை நாம் சுவாசிக்கும் காற்றிலிருந்து ஏற்று — தம்முடன் கொண்டுவந்து அங்கங்கேயும் கொடுத்து உதவுகின்றன, ரத்தத்திலுள்ள செந்நிற ஜீவாணுக்கள். இவ்விதம் உடலுக்கும் உயிருக்கும் ஊட்டமும் உரமும் ஒருங்கே அளிக்கவல்ல சக்தி ரத்தமாக மாறிய ரஸ தாதுவில் - அல்லது ரஸ தாது அடங்கிய ரத்தத்தில் இருக்கிறது. ஆகவே, இது நல்ல அமைப்புற்றதாயிருப்பதற்கு முதல் பொருள் அன்ன ரஸத்திலிருந்து உறிஞ்சப்படும் ரஸதாதுதான். ஆகவே சரீரத்தின் நல்லிருக்கைக்கு இந்தக் குடற்குழாயின் உட்புறம் நீட்டிக் கொண்டிருந்து, அங்கு பாயும் அன்ன ரஸத்திலிருந்து சத்துப் பொருளாக ரஸ தாதுவைக் கிரஹிக்கும் உறிஞ்சிகள் எவ்வளவு மகத்தான - எவ்வளவு முக்கியமான செயலை யாற்றுகின்றன என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

சில சமயங்களில் இந்த 'உறிஞ்சி'கள் தமது செயலைப் புரியாமலிருந்து விடுகின்றன. அல்லது முழுத் திறமையுடன் செயலாற்றாமல் இருந்துவிடுகின்றன. இந்நிலையை உறிஞ்சிகளின் ஒத்துழையாமை-வேலை நிறுத்தம்,-மறியல்-என்று எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் அழையுங்கள். பெயரில் என்ன இருக்கிறது?

இந்த 'உறிஞ்சி'களுக்குச் சில சமயம் தமது செயலைப் புரிய வாய்ப்பு இல்லாமலும் போவதுண்டு. அதனாலும் அன்ன ரஸத்திலுள்ள சத்துப் பொருள் கிரஹிக்கப்படாமல் போகும். உடல் மெலிவது அப்போது தடுக்க முடியாத விளைவாகும். சாப்பிடும் சாப்பாடு பூர்ணமாக ஜெரிக்காமல் போவதால் அதிலுள்ள சத்துப் பொருள்களின் அம்சத்தைக் கிரஹிக்கும் வாய்ப்பு குடலிலுள்ள 'உறிஞ்சி'களுக்கு இல்லாமல் போய் விடுகிறது. இங்கு ஒரு சிறிய விளக்கம் அவசியம்.

நாம் உண்ணும் உணவு இரைப்பையில் ஓரளவுதான் ஜீர்ணமாகிறது.

இரைப்பையைக் கடந்து குடலில் சென்ற பிறகு மற்றுமோரளவு ஜீரணிக்கப்படுகிறது. அதற்குப் பிறகுதான் சத்துப் பொருள்களை உறிஞ்சிகள் கிரஹிக்கும் நிலைக்கு அன்ன ரஸம் வரும். இப்படி இரண்டு நிலைகளில் ஜீர்ணம் பரிபூர்ணமாகிறது. இதில் முதல் நிலையில் ஆகாரம் ஜெரிக்கப்படாவிடின் அஜீர்ணமும் அதன் வாயிலாக அடியோடு பசியே இல்லாமையும் அதிஸாரமென்னும் வயிற்றுப்போக்கும் ஏற்படும். இன்னொரு நிலையில், இரைப்பையில் ஜீரணமாகும் அன்னம் சரிவரவே ஜெரிக்கப்படாது. இரைப்பையைப் பற்றின வரையில் ஒரு குற்றமோ, குறையோ இல்லை. ஆனால் அதைத் தொடர்ந்து நடைபெற வேண்டிய இரண்டாவது ஜீர்ண கட்டத்தில் திறமைக் குறைவு உள்ளது. அதனால் ஆகாரம் ஓரளவு ஜெரித்தும் ஓரளவு ஜெரிக்காமலுமிருக்கும். இந் நிலையில் பசி இருக்கும். ஆனால் சாப்பிட்ட ஆகாரம் முழுதும் சரிவர ஜீர்ணமாகாமல் நின்று விடும். நொப்பும் நுரையும் கட்டியும் ஸரசலுமாய் ஜெரித்தும் ஜெரியாமலுமுள்ள மலம் பல தடவைகள்போகும். இந்நிலையில்உறிஞ்சிகள் எப்படி எந்தச் சத்துப் பொருளைக் கிரகிக்கக்கூடும்? இந்நிலையில்தான் "தின்பதையும் தின்று விட்டுச் சங்கடத்தையும் காட்டுகிறதே!" என்னும் நிலை ஏற்படுகிறது. பசித்துச் சாப்பிட்டாலும் அது உடம்பில் ஒட்டாமல் சரீரம் மெலிந்த நிலையிலேயே இருக்கிறது. இந் நிலையில் சாப்பிடாமல் பட்டினி போட்டால் பசியினால் பலக்குறைவு அதிகரிக்கும். ஆனால் வயிற்றுப் போக்கு நின்றுவிடும். இதைத்தான் கிரஹணி என்பர். உறிஞ்சிகளுக்குத் தமது செயலை யாற்றும் வாய்ப்பு இல்லாமல் போவதற்கு இது ஒரு உதாரணம். இவ்வித நிலையில் தேக மெலிவுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சை வேறு விதமானதா யிருக்க வேண்டும்.

ஜீர்ண கோசத்திலுள்ள அழற்சி காரணமாக இரைப்பையில் ஆகாரம் போதுமான காலம்·தங்குவதில்லை. சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக வெளிக்குப் போகப் பறப்பான் மனிதன். இதனாலும் சத்துப் பொருள் கிரகிக்கப் படுவதில்லை. உடல் மெலிந்து விடும். அல்லது மெலிந்த உடல் புஷ்டியாகாது.

"எண்ணெய்க் குளியுந்தான் தினந்தோறும் செய்து வருகிறேன். உடல் புஷ்டியாக வில்லையே!" என்று சொல்பவர் இந்த விஷயத்தைக் கவனத்தில் வைக்க வேண்டும். ஜீர்ண கோசத்தைச் சரிவர இயங்குமாறு செய்து, ஆகாரத்தினின்று சத்துப் பொருள்களை உறிஞ்சிகள் சரிவரக் கிரகிப்பதற்கு வேண்டிய வாய்ப்புகளைச் செய்து கொடுத்த பிறகுதான் இவர்களுக்கு மற்றுள்ள சிகிச்சைகளைச் செய்யவேண்டும். ஆகாரமும் தனது முழுப் பலனை யளிக்கும். மருந்தும் உள்ளுக்குச் சென்று ஊட்டத்தைக் கொடுக்கும். அதற்குத் துணையாக எண்ணெய்க் குளியும் உதவி புரியும். ஆகவே, ஜீரண கோசத்தைச் சரிப்படுத்தவேண்டியது முதற்காரியம். இதற்குக் கிரஹணியின் கீழ் விஸ்தாரமாகச் சிகிச்சைகளைத் தெரிவிக்கலாம்.

குழந்தைக [அன்னுசிக] ளாயின் அஷ்ட சூர்ணமும், முஸ்தாதகரமும் நல்லவை என்று சொல்லியாயிற்று.

எட்டு—பத்து வயதான சிறுவருக்கு ஆகாரத்தின் முதற் கவளத்துடன் ஒரு சொட்டு உருக்கிய நெய்யும் மூன்று நான்கு சிட்டிகையளவு அஷ்ட சூர்ணமும் சேர்த்துப் பிசைந்த அன்னம் ஒன்றிரண்டு கவளங் கொடுத்து அதைத் தொடர்ந்து பாக்கியுள்ள ஆகாரங்களைச் சாப்பிடக் கொடுக்கலாம்.

பத்து வயதுக்கு அதிகமானவருக்கும் வளர்ந்தவருக்கும் மேற்சொன்ன அஷ்ட சூர்ணத்தை அதிக அளவில் கொடுக்கலாம். மேலும் ஆமரபல்லவாதி லேஹியம் என்ற மருந்தை ஒரு புளியங்கொட்டையளவு முதல் ஒரு தோலா எடைவரையில் வயதுக்குத் தகுந்தபடி தினம் இரண்டு வேளை ஆகாரத்துக்குப் பிறகு கொடுக்கலாம். இதனால் இரண்டு கட்டத்திய ஜீரணமும் நன்றாக நடைபெறும். ஜீரணமான ஆகாரம் சாவதானமாக ஜீரண கோசத்தில் செல்லும். ஆகவே குடலிலுள்ள உறிஞ்சிகளுக்கு ஆகாரத்தினின்றும் சத்துப் பொருள்களைக் கிரஹிக்க வாய்ப்பும், அதிகரித்த அவகாசமும் கிடைக்கும். சத்துப் பொருள் கிரஹிக்கப்பட்டு 'உடம்பில் ஒட்டும்.' அந்நிலையில் அசுவகந்தாலேஹியம், கூஷ்மாண்ட ரஸாயனம், சியவனப்பிராசம் போன்ற மருந்துகளைச் சாப்பிட்டால் ஒன்றுக்கு இரண்டாகப் பலன் தரும். தேகபுஷ்டி அதிகரிக்கும். அப்போதுதான் எண்ணெய்க் குளியும் உபயோகமான முறையில் பலன் தரும்.

'அட! அஷ்டசூர்ணஞ் செய்யும் முறையைச் சொல்லவில்லை. முஸ்தா தகரம் செய்யும் முறையைச் சொல்லவில்லை. இப்போது ஆமரபல்லவாதி லேஹியம் என்று புதியது ஒன்றையும் பிரஸ்தாபிக்கிறீர்களே!' என்கிறீர்களா? இவையொன்றும் புதியவையல்ல. பழையவைதான். ஆனாலும், மற்றுமொருமுறை தெரிவிக்கிறேன். வேறு சில மருந்துகளையும் தெரிவிக்கிறேன்.


பிரகாசம்
—அத்தகைய பரிசுத்தம் அளிப்பது விம் ஒன்றுதான்!
சமையல் பாத்திரங்களைத் துலக்குவதற்கு விம் உபயோகித்துப் பாருங்கள் — அழுக்கும் எண்ணெய்ப் பிசுக்கும் மாயமாய் மறைந்து நிகரில்லாப் பளபளப்பு மிளிரக் காண்பீர்கள்! சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டுள்ள பவுடராதலால் விம், பாத்திரங்களுக்குப் பாதுகாப்பானது. உங்கள் வீட்டுத் தரை, ஸ்நான அறை, பீங்கான் சாமான்கள் எல்லாவற்றையும் ஒளிமயமாக்குவது விம். விம் இருக்கும் வீடே ஒளிமங்காத வீடு!
VIM
VIM
உங்கள் வீட்டுக்கு
வேண்டியது விம்
V. 94-50 TM பம்பாயிலுள்ள ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் கம்பெனியின் தயாரிப்பு.

தீபவொளியிலே லண்டன்

சுந்தரா



பகலிலே பார்க்கும் லண்டன் வேறு: இரவிலே பார்க்கும் லண்டன் வேறு.

லண்டன் கட்டடங்கள், படத்திலே பார்க்கும்போது, அற்புதமாய்த்தான் இருக்கின்றன. படத்திலே பார்த்த கட்டடங்களை, நேரிலே, பகலிலே பார்க்கும் போது, ஒரு ஏமாற்றம். ரோமன் பாணி, கோதிக் பாணி, ட்யூடர் பாணி, ஆன் ராணி பாணி, விக்டோரியா பாணி என்று பலவித பாணிகளில் அமைந்த கட்டடங்கள் எத்தனையோ இந்த நகரில் இருக்கின்றன — ஆலயங்கள், அரண்மனைகள், கோட்டைகள், மாளிகைகள் முதலியன. ஆனால் அத்தனையும், அசட்டுக் கரிப் பூச்சுடன், அப்பிய அழுக்குப் பூச்சுடன், "படத்திலே பார்த்ததற்கும் நேரிலே பார்ப்பதற்கும் இத்தனை வேற்றுமை இருக்கிறதா!" என்று வருந்தச் செய்கின்றன.

பழங்காலக் கட்டடங்கள் மட்டும் அல்லாமல், பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய கட்டடங்களும் கூட, இப்படித்தான் இருக்கின்றன. புகையும், மழையும், பனியும், பாசியும், உப்புக் காற்றும் சேர்ந்து, இந்த நகரத்துக் கட்டடங்களை இக் கோலம் ஆக்கி இருக்கின்றன. "தொட்டதெல்லாம் கரி" என்று ஒரு வசனம் உண்டல்லவா? இந்த நகரிலே, கட்டியதெல்லாம் கரி!

கட்டடங்களைப் போலவே சிலைகளும் கரிதான். தேம்ஸ் நதியின் குறுக்கே உள்ள பாலங்களும் கரிதான்; அடியிலே ஓடாமல் ஓடும் நதியும் கரிதான்; அதிலே ஊர்ந்தும் விரைந்தும் செல்லும் கப்பல்களும் படகுகளும் கரிதான்.

லண்டன் நகரத்துக் கட்டடங்களின் வடிவழகையும் காட்சிகளின் அமைப்பு அழகையும் பாராட்டி ரஸிக்க வேண்டும் என்றால், தீப ஒளியிலே அவைகளைப் பார்க்க வேண்டும். இரவிலே பார்த்து ரஸிக்கட்டும் என்றே, முக்கியமான கட்டடங்கள் மீதும் சிலைகளின் மீதும், "வெள்ள ஒளியை" வீசுகிறார்கள்; தேம்ஸ் நதியின் இரு கரைகளிலும், விதம் விதமாய்த் தீப அலங்காரம் செய்து வைத்திருக்கிறார்கள்.


பொன்னிற விளக்குகள்! வெண்ணிலா விளக்குகள்! பச்சை, சிவப்பு, நீல விளக்குகள்! தெருவுக்குத் தெரு விளக்குகளின் வர்ணத்திலே வித்தியாசம்! கடைக்குக் கடை, சாளரத்துக்குச் சாளரம் வித்தியாசம்!

பல வேறு வர்ண விளக்குகளின் ஒளியிலே, இந்த லண்டன் நகரம், நாம் படங்களின் மூலம் கண்ட லண்டனை, வர்ணனைகளின் மூலம் அறிந்த லண்டனைக் காட்சி அளிக்கிறது.

இப்போதைய மின்சார விளக்குகளும் சரி, இவைகளுக்கு முன்னால் எரிந்த காஸ் விளக்குகளும் சரி, எத்தனையோ தேசங்களின் மக்களுக்கு வழிகாட்டி யிருக்கின்றன; எத்தனையோ சரித்திர நிகழ்ச்சிகளுக்கு இடையே ஒளிர்ந்திருக்கின்றன; எத்தனையோ கதைகளும் கவிதைகளும் மலர்வதற்கும், இணையில்லா ஆங்கில இலக்கியம் உலகிலே திகழ்வதற்கும் உதவி செய்திருக்கின்றன.

லண்டன் தெரு விளக்குகள், ஜூன் மாதத்தில் இரவு பத்து மணிக்கும், டிசம்பர் மாதத்தில் மாலை நாலு மணிக்

இரட்டை ஒளி வீச்சிலே ராணியின் அரண்மனை.



'' பிக் பென் '' ஒலிக்கும் ஒளிமணி.

கும் எரியத் துவங்குகின்றன. கோடை காலப் பகல் பொழுதுக்கும் குளிர்காலப் பகல் பொழுதுக்கும் இத்தனை வித்தியாசம்! கோடை காலத்திலும் கூட, நாள் முழுதும், மழையோ மப்போ மந்தாரமோ இல்லாமல், பளிச்சென்று சூரியன் ஒளிவீசுவது அபூர்வம். வெளியே பகலாய் இருந்தாலும் கூட, உள்ளே தீப ஒளிவேண்டியதாய் இருக்கிறது. லண்டன் மக்களின் வாழ்க்கை, பெரும்பாலும் தீப ஒளியிலேதான் நடக்கிறது எனலாம்.

பகலெல்லாம் ஒரே ஓட்ட சாட்டம், பரபரப்பு: ஆனால் இரவிலே, தீப ஒளியிலே, ஓய்வும் உல்லாசமும். லண்டன் நகரில், சுமார் ஐம்பது நாடக அரங்குகளும், நூறு சினிமாக்களும், ஆயிரம் ஆடல் அரங்குகளும், எண்ணிலா மதுக்கடைகளும் இருக்கின்றன. கோடைக்காலத்திலும், கொட்டுகிற பனி மழையிலும் இவை யாவும் நிறைந்திருக்கின்றன. சம்பாதிப்பதற்குப் பகல் வாழ்க்கை; சம்பாதிப்பதைச் செலவு செய்வதற்கு இரவு வாழ்க்கை.

நாடக அரங்குகளில், உயர்தரமான ஷேக்ஸ்பியர் நாடகங்களும், நெஞ்சை அள்ளும் இசை நாடகங்களும், காமத்தைக் கிளறும் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. சினிமாக் கொட்டகைகளில், ஆங்கிலப் படங்களைத் தவிர, ஐரோப்பாக் கண்டத்துப் பல்வேறு மொழிப் படங்களையும், ஆசியப் படங்களையும் கூடக் காட்டுகிறார்கள். ஆடல் அரங்குகளில், உயர்தரமான பால்-ரூம் டான்ஸிங் அரங்குகளும் உண்டு; இளைஞர்களுக்கான ராக்-அண்ட்-ரோல் நாட்டிய அரங்குகளும் உண்டு. மதுக்கடைகளில், மதுபானங்கள் தவிர, விளையாடுவதற்கான வசதிகளும் அளவளாவிப் பொழுது போக்குவதற்கான ஆசனங்களும் இருக்கின்றன. இரண்டு அல்லது மூன்று மணி நேரம் இவைகளில் தங்கியிருப்பவர்களும் உண்டு. நாடகக் கொட்டகைகள், ஆடல் பாடல் அரங்குகள், மதுக் கடைகள் ஆகியவை தவிர, நைட் கிளப்புகள் என்ற உல்லாச விடுதிகளும் பல இருக்கின்றன. இவைகளிலும், உயர்தரமானவைகளும் உண்டு; மட்டரகங்களும் உண்டு. உலகப் புகழ் வாய்ந்த கலைஞர்கள் களிப்பூட்டும் கிளப்புகளும் உண்டு.

இவ்வித அரங்குகளும் சினிமாக்களும் கிளப்புகளும், 'வெஸ்ட்எண்ட்' என்ற பகுதியில் குழுமி யிருக்கின்றன. இந்தப் பகுதிக்கே, கேளிக்கைப் பகுதி என்று பெயர். ஞாயிற்றுக் கிழமை தவிர, மற்ற நாட்களில் எல்லாம் நாடகங்களும் கதம்பக் காட்சிகளும் நடைபெறுகின்றன. ஞாயிற்றுக்கிழமை விலக்கில்லாமல் எல்லா நாட்களிலுமே சினிமாக்கள் நடைபெறுகின்றன. ஒரு படம், அல்லது அடுத்தடுத்து இரண்டு படங்கள், ஒவ்வொரு சினிமாக் கொட்டகையிலும்



பிக்கடில்லி சர்க்கஸ்-காமன் கொலுவிருக்கும் களிவட்டம்.





சென்ற பத்து ஆண்டுகளாக ஸ்ரீனிவாச காந்தி நிலையம் ஏழை மாதர்களுக்கும் குழந்தைகளுக்கும் தொண்டாற்றி வருகிறது. மகாத்மாவின் பெயரையும் புகழ் பெற்ற தனது தகப்பனார் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் பெயரையும் கொண்டு, ஸ்ரீமதி அம்புஜம்மாளால் ஆரம்பிக்கப்பட்டது இந்த ஸ்தாபனம். நூல் நூற்கவும், துணி நெய்யவும் இன்னும் பல கைத்தொழில்களையும் கற்றுத் தந்து, சமூகத்தில் தைரியமாக வாழப் பல ஏழை மாதர்களுக்கும் குழந்தைகளுக்கும் வகை செய்திருக்கிறது. கைத்தொழில்களோடு கல்வியறிவும் புகட்டி ஏராளமான பெண்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் அளித்திருக்கிறது. சங்கத்தின் நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்கத்தோடு அன்பர்களின் ஆதரவை வேண்டுகிறார்கள். இம்மாதம் முதல் தேதியன்று திரு சிவாஜி கணேசன் கோஷ்டியார் வீரபாண்டிய கட்டபொம்மன் உதவி நாடகத்தை நடத்தினார்கள். பொதுமக்கள் மேலும் மேலும் உன்னதப் பணி புரிந்து வரும் ஸ்ரீனிவாச காந்தி நிலையத்துக்கு ஆதரவளிக்க வேண்டுகிறோம்.

மாலை நாலு மணி முதல இரவு பதினொரு மணி வரை ஓடிக்கொண்டிருக்கும். எப்போது வேண்டுமென்றாலும் உள்ளே சென்று, ஒருபடத்தையோ, இரண்டு படங்களையோ எத்தனை தரம் வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம்.

கேளிக்கைப் பகுதிக்கு நடு மத்தியில் உள்ளது 'பிக்கடில்லி ஸர்க்கஸ்'. இந்த வட்டத்துக்கு நடுவே ஈராஸ் காமன் சிலை ஒன்று வில்லும் கையுமாக நிற்கிறது. பல தெருக்கள் கூடும் இந்த வட்டத்திலே பல தேச மக்கள் உலவும் இந்த வட்டத்திலே விளம்பர தீப அலங்காரம் கண்ணைப் பறிக்கும். இந்தத் தீப அலங்காரத்தைப் பார்க்க வருவோரும் நாடகம், ஸினிமா முதலியவற்றுக்குப் போய் வருவோரும் சேர்ந்து, இந்த வட்டம், பாதி ராத்திரி வரை 'ஜே ஜே' என்று கலகலப்பாக இருக்கிறது. வெள்ளிக்கிழமை இரவும், சனிக்கிழமை இரவும் இங்கே மக்களின் கூட்டம் மிக மிக அதிகமாய் இருக்கும். 'பிக்கடில்லியில் சுற்றும் விளக்குப் பூச்சிகள்' என்று ஓர் ஆங்கில நண்பர் இந்த உல்லாசக் கும்பலைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இந்த வட்டத்திலும் சரி, இந்த வட்டத்தைச் சுற்றிய வட்டாரத்திலும் சரி, எண்ணிலா ஹோட்டல்களும் சிற்றுண்டி விடுதிகளும் இருக்கின்றன. இந்திய உணவு உள்பட உலகத்துத் தேசங்கள் அத்தனையின் உணவு வகைகளையும் ஆக்கிப் பரிமாறுவதற்கென்று இங்கே தனித் தனி ஹோட்டல்களிருக்கின்றன.


கலைகளை அனுபவிப்போரும், கேளிக்கைகளை நுகர்வோரும், உண்டு மகிழ்வோரும், உடை அலங்காரத்தைக் காட்டுவோரும், நடை அலங்காரத்தைக் காட்டுவோரும், கைகோத்து நடப்போரும், நிறைந்த இடம், இந்தப் பிக்கடில்லி வட்டம். இரவிலே தீப ஒளியிலே லண்டன் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை இங்கே காணலாம்.


க்ளியர்டோன் வாரம் — நவம்பர் 3 முதல் 9 வரை
Kleertone க்ளியர்டோன்
உயர்தர உபகரணங்கள்
இந்தியாவில் தயாரிக்கப்படுபவை: வீடுகள்,
ஆபீஸ்கள், ஹோட்டல்கள், மற்றும்
கான்டீன்களுக்கு மிகவும் உபயோகமானவை
க்ளியர்டோன்
இந்தியாவிலேயே தயாரிக்கப்
படும் க்ளியர்டோன்
க்ளியர்டோன்
Kleertone க்ளியர்டோன் — அதிக
ஆனந்தமயமாக்குவதற்கான உயர்தர
'க்ளியர்டோன்'
வீட்டிற்கேற்ற
இஸ்திரி பெட்டி
'க்ளியர்டோன்'
எலக்ட்ரிக் கெட்டில்
'க்ளியர்டோன்'
தெர்மல் ஜார்கள்
'க்ளியர்டோன்'
எலக்ட்ரிக் குமுட்டி
'க்ளியர்டோன்'
ஒலிபரப்பிகள்
'க்ளியர்டோன்'
எலக்ட்ரிக்
கடியாரங்கள்
GRA
ஜெனரல் ரேடியோ அண்டு அப்ளையன்ஸஸ் பிரைவேட் லிமிடெட்

அம்மா ! ஸ்நானம் செய்ய இன்னும் நேரமாகவில்லையா ?

ஆம். டூமெக்ஸ் பேபி சோப்பினால் இன்னுமொரு தடவை ஸ்நானம் செய்வதென்பது எவ்வளவோ நல்லது. குளிப்பதற்கு கிடுகிடுக்கும் சிறுவனும் சீர்திருந்துகிறான். கண்ணெரிச்சலும், சரும ரோகங்களும் இனிமேல் அணுகாது. டூமெக்ஸ் பேபி சோப்பினால் எச்சமயமும் ஸ்நானம் செய்யலாம். இது மிருதுவானது. மேலும் சமனமூட்டும் தன்மை வாய்ந்தது. விவேகமுள்ள தாய்மார்கள் இளஞ் சிவப்பு நிறங்கொண்ட இச் சோப்பையே உபயோகிக்கிறார்கள்.





டூமெக்ஸ் பேபி சோப்

குழந்தைகளின் சருமத் திற்குச் சாலச் சிறந்தது

டூமெக்ஸ் ப்ரைவேட் லிட்.
வேவல் ஹவுஸ், பல்லார்ட் எஸ்டேட்,
பம்பாய்—1

அதிர்ச்சி

ரா.வீ.

தங்கத்தின் யௌவனம் அவளது தந்தையின் சாவுக்கென்றே காத்திருந்தது போலும்! மற்றவர்கள் என்ன எண்ணினார்களோ தங்கத்தின் தாயார் மட்டும் அப்படித்தான் எண்ணினாள். ஈமக்கடன்களெல்லாம் முடிந்த பின், ஒரு நாள் தாயாரும் மகளும் வீட்டைப் பெருக்கி மெழுகிச் சுத்தம் செய்யலாயினர். அப்பொழுது தாயாரும் மகளும் அருகில் நின்று அமர்ந்து வேலை செய்ய நேரிட்டது. தாயார் தன் அருமை மகளைக் கூர்ந்து கவனித்தாள்.

தங்கத்தின் தங்கமேனியை எண்ணெய்ச் சிக்கு ஏறிய ஆடைகள் அலங்கரித்தன. அவள் உடுத்தியிருந்த புடவையின் அடிப்புறம் அட்டக்கரியாகக் காட்சி அளித்தது. ரவிக்கை - அதாவது சட்டையின் கழுத்துப் பட்டையும் கைப்புறமும் காப்பி வடிகட்டும் துணியின் நிறத்தை அடைந்திருந்தன. தலைமயிர் எண்ணெயைக் கண்டு எத்தனையோ நாட்களாயின. ஆயினும் அது பறந்து வகிட்டை மறைக்காமல் வாரி விட்டிருந்தாள். சாக்குச் சுருணையினால் அழுக்குப் போக மெழுகிக் கொண்டிருந்தாள் தங்கம். மணிக்கட்டு வரை சாணத்தின் அழுக்கு ஏறியபொழுதிலும், அதற்கு மேல் உள்ள பாகம் அவளது சந்தன நிறத்தைப் பளிச்சிடக் காட்டிக் கொண்டிருந்தது. அவளது தாயார் செல்லம் இன்னொரு புறத்தில் சுருணை பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். முதல் தடவையாக மகளின் கரத்தைக் கூர்ந்து பார்த்த பொழுது, தாயார் சற்றுத் துணுக்குற்றாள். பிறகு தங்கத்தைத் தங்கம் தானா என்று அடையாளம் கண்டு கொள்ளப் பிரயாசைப்படுபவளைப்போல் பார்த்தாள்.



'அட! நம் தங்கம் தானா நீ? உனது குனிந்த பார்வையிலே மின்மினி போல ஏதோ பளிச்சிடுகிறதே! ஆமாம், உனக்கு வயது பதினேழு ஆகிவிட்டதல்லவா? அடுத்த வீட்டு ரங்கத்துக்கும் இதே பதினேழு வயது தான். அவள் அதற்குள் மூன்று குழந்தைகளுக்குத் தாயாராகி விட்டாள். ஆனால், குழந்தாய்! நேற்றுவரை நீ சொப்பும் மரப்பாச்சியும் வைத்து விளையாடிக் கொண்டிருந்தாயே! அதற்குள் என்ன இப்படித் திடீரென்றுமாறி

விட்டாய்? — ஆமாம்! தந்தையின் சாவு பெண்ணின் யௌவனத்துக்காகக் காத்திராதபொழுது பெண்ணின் யௌவனம் மட்டும் தந்தையின் சாவைத் தடுக்க முற்படுமா, என்ன? கணவனின் சாவைப் போலவே, பெற்ற பெண்ணின் பருவமும் விதவைக்குப் பெரும் சுகம் ஆகிவிடுகிறது!'

"என் தலையெழுத்து!" என்று செல்லம் தலையில் 'படீர்' என்று அடித்துக் கொண்டு பொங்கிப் பொங்கி அழ ஆரம்பித்து விட்டாள். தங்கம் கருணையைக் கீழ் வீசி எறிந்து விட்டுத் தாயாரின் அருகில் ஓடினாள். அழுகின்ற மகள் புலம்புகின்ற அன்னையைத் தன் சந்தன நிறக் கரங்களால் அணைத்துக் கொண்டாள். "அழாதே, அம்மா! இப்படி அழுது கண்ணீர் பெருக்கினால் பார்வையே போய் விடும்!" என்று தனக்குத் தோன்றிய சமாதானத்தையும் கூறினாள்.

அழுதுகொண்டிருந்த அன்னை யோசனையில் ஆழ்ந்தாள். பெண்ணின் மென்கரங்கள் எத்தனை நீண்டு விட்டன? அன்னையையே அரவணைத்துக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்து விட்டனவே! மகளின் உடலிலே என்ன உஷ்ணம்! மூச்சுக் காற்றிலே கொழுந்து விட்டெரியும் தீயின் தகிப்பு! தாயார் மீண்டும் மகளைப் பார்த்தாள். 'மகளே! நீ இதுவரை எங்கு இருந்தாய்?' என்று கேட்பது போலிருந்தது அவள் பார்த்த அந்தப் பார்வை!

பெண்ணென்று பிறந்து விட்டால், அந்தக் கணமே தாயாரின் உள்ளத்திலே எத்தனையோ இடத்துச் சம்பந்தங்கள் முடி போட்டுக் கொள்கின்றன; அவிழ்ந்து கொள்கின்றன. இது உலகம் அறிந்த உண்மை. செல்லமும் தன் மகள் தங்கத்துக்கு எங்கெங்கெல்லாம் சம்பந்தம் கூடுவதற்கு ஹேதுஇருக்கிறதென்று கணக்குப் போட்டுக் கோட்டை கட்டி வைத்துக் கொண்டாள். ஆனால் இப்பொழுது திடுதிப்பென்று ஏற்பட்டுவிட்ட ஒருபெரிய சிரமம் என்னவென்றால், இதுவரை கூடமாடக் கணவன் இருக்கிறான் என்ற மனத்தெம்பு இருந்தது. எல்லாம் சுலபமாக நடந்து விடும் என்ற நம்பிக்கை இருந்தது. என்ன இருந்தாலும் உறுதுணை என்று ஒன்று இருந்து விட்டால் அதன் விதமே அலாதிதானே! — இப்பொழுது கணவன் காலமாகி விட்டது கையொடிந்தாற் போலாகி விட்டது. அவன் இருந்தகாலத்தில் அவள் எத்தனையோ பிள்ளைகளைப் பற்றிச் சிந்தனை செய்திருக்கிறாள்.

'ஆறுமுகம் பரவாயில்லை. நானூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறான். நானூறு ரூபாய் சம்பளம் ஒரு சம்பளமா? நானூறு ரூபாய் சம்பளத்தில் தங்கத்துக்கு அவனால் என்ன பெரிதாகச் செய்து போட்டுவிட முடியும்? இந்தக் காலத்தில் நானூறு ரூபாய் வாய்க்கும் கைக்குமாகத்தானே இருக்கும்? சங்கரன் நல்ல அழகாயிருக்கிறான். அவனும் நல்ல வரன்தான் அழகிருந்தால் ஆயிற்றா? அழகை வைத்துக் கொண்டு கண்ணாடியில் வேண்டுமானால் அழகு பார்க்கலாம். அழகு வயிற்றுக்கு வழி சொல்லுமா? நம் தங்கத்துக்குத்தான் அழகுக்கென்ன குறைச்சல்? அவள் கண்களைப் போல் அழகான கண்களை யாராவது உலகத்தில் காட்டி விட்டுமே பார்ப்போம்! அப்படிக் காட்டிவிட்டால், என் கண்ணைப் பிடுங்கி அவர்கள் கையில் வைத்து விட நான் தயார். இது வெறும் பேச்சில்லை. கடவுள் மீது ஆணை!... ஆமாம் இப்பொழுதே நம் தங்கத்துக்கு என்ன அவசரம் கல்யாணத்துக்கு? இப்பொழுதுதானே இண்டர் முடித்திருக்கிறாள். பி. ஏ. முடித்துவிட்டால் எல்லாரும் தன்னாலே வேடன் அம்புக்கு இரையாகும் புறாப் போல் அவள் காலில் வந்து விழுகிறார்கள். 'நான் நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு! என் தங்கம் என்ன இருந்தாலும் பெரும் அதிர்ஷ்டக்காரிதான்!'

அன்று இப்படியெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தாள் செல்லம். இன்று அவள் அதிர்ஷ்டத்தை என்னவென்பது? தான் முன்பு யோசித்து வைத்திருந்த பிள்ளைகளைப் பெற்றவர்களின் காலில் போய் விழக்கூடத் தயாராகி விட்டாள்! விதி இப்படிச் சதி செய்து விட்டது! தங்கத்தின் அப்பா உயிரோடு இருந்த காலத்தில், எந்தெந்தப் பிள்ளைகளின் தகப்பன்மார்கள் வேலைக்குப் படையெடுப்பவர்களைப் போல், 'ஒரு வார்த்தை, தன் பிள்ளைக்குத் தருகிறேன் என்று சொல்ல மாட்டாரா?' என்றுகாத்திருந்தார்களோ, இன்று அவர்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. 'தங்கம் எப்படி இருக்கிறாள், எப்படி இருக்கிறாள்?' என்று எடுத்ததற்கெல்லாம் விசாரித்த தாய்மார்கள் அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. காரணம் என்ன? எல்லோரும் தங்கத்தின் தாயார் செல்லத்தை ஒரு விதவை என்றநோக்கோடு பார்த்ததுதான்! ஆனால் யாரும், 'விதவைகளும் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள்தாம்; பெண்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள்தாம்; நல்ல இடத்தில் பெண்களைச் சேர்த்து மகிழ்ச்சி கொள்ள விரும்புகிறவர்கள்தாம்!' என்ற எண்ணத்தையே கொண்டதாகத் தெரியவில்லை.

பெண்ணுக்கு ஒரு இடத்தில் வரன் என்று நிச்சயம் செய்து விட்டால் பெண்களின் தாய்மார்கள் திரும்ப யோசிப்பதில்லை, அந்த இடத்துச் சம்பந்தத்தை அறுத்துக் கொண்டு வேறு நல்ல இடத்தில் பார்ப்போமா என்று! ஆனால் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு அந்தக் காரியம் ஒரு கிள்ளுக்கீரை! அவர்கள் அதற்கெல்லாம் சிறிதும் அஞ்சுவதில்லை!

செல்லத்தின் விஷயத்திலும் அதேபோல் பிள்ளைகளைப் பெற்றவர்களின் நடத்தை ஆகி விட்டது! 'செல்லத்தின் கணவனோடு செல்லத்தின் மகனும் போய்விட்டான்' என்று நினைப்பவர்களாகவே அவர்கள் நடந்து கொள்ள முற்பட்டு விட்டார்கள்.

"செல்லக்கா!" — அவளுக்கு ஆறுதல் அளிக்க முன் வருபவர்கள், "அதனால்தான் நம் பெரியவர்கள், 'பகவானே! அவருக்கு முன்னால் என்னைக் குங்குமமும் நெற்றியுமாக மஞ்சள் கயிற்றோடு கொண்டு போய்விடு. அவருக்கு அப்புறமும் நான் வாழ்ந்தால் வாழ்க்கை வாழ்க்கையாக இராது. வேம்பாகக் கசந்து கல்லாகக் கனத்து விடும். வாழ்வெனும் வண்ணமலரை வண்ணப் பறவை வட்டமிடாமல், எச்சமிட்டுச் சீரழிக்க முற்பட்டால், எங்களது பூவுள்ளம் பொறுக்காது' என்று விழுந்து விழுந்து வேண்டிக் கொள்வார்கள்!" என்று முடிப்பார்கள்.





நைலான்ஸ் . ஜார்ஜட் . க்ரேப்ஸ் . ஸாட்டின் . ப்ரின்ட்ஸ்


சக்தி சில்குகள்

ஓர் போதார் தயாரிப்பு

சக்தி மில்ஸ்களில் தயாரிக்கப்பட்ட ஸில்க்குகளைவிட விதவிதமான ஸில்க்குகள், பல்வேறு வண்ணங்களிலும், அநேக ரகங்களிலும் வேறு எங்கும் கிடைக்காது. ஞாபகமிருக்கட்டும்—சக்தி ஸில்க்குகள் உயர்தரமானவை. எளிதில் சலவை செய்யக்கூடியது. சாயம் போகாதது. மேலும் சலவையில் சுருங்கிப்போகாதென்பதற்கு உத்திரவாதமுள்ளது. சக்தி ஸில்க்குகளை அணிந்து மோகனமாகத் தோன்றுங்கள்.

ஸ்ரீ சக்தி மில்ஸ் லிமிடெட், பம்பாய்

SSM-6



புதுமை!

விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர்

ரூபா 1

ரோஜா மணமுள்ள அழகுசாதனப் பவுடர்

ஒவ்வொரு வீட்டிலிருந்தும் செல்லம், "நான் வருகிறேன், அம்மா! வெறிச்சென்றிருக்கும் வீட்டில் தனியாக உட்கார்ந்திருக்கத் தங்கம் பயப்படுவாள்!" என்று கூறி எழுந்திருப்பாள். கல்யாணமாகாத கன்னியாகத் தங்கள் வீட்டில் தங்கம் இருக்கிறாள் என்பதை நினைவுபடுத்தவே, செல்லம் நாசூக்காக அப்படிப் பேச்சை முடிப்பாள்!

ஆனால் ஒரே ஒரு வீட்டில்தான் அவளது உபாயம் வெற்றி கண்டது. "உட்காரு, செல்லம்! அதற்குள் புறப்பட்டுவிட்டாயே! இத்தனை அவசரம் எதற்கு? 'நான் போகிறேன்' என்று சொல்லி விட்டுப் போகவா இவ்வளவு தூரம் வந்தாய்?" என்று கேட்டாள், அந்த வீட்டுக்குச் சொந்தக்காரி.

செல்லம் முழங்கால்களில் கைகளை ஊன்றிக் கொண்டு மெதுவாக எழுந்தவாறே "வருகிறேன், அம்மா! யாரும் இல்லாத வீட்டில் ஒண்டியாகக் குழந்தை எத்தனை நாழிகை தான் உட்கார்ந்திருப்பாள்?" என்றாள்.

"ஆமாம், அம்மா, ஆமாம்! தங்கம் தனியாக இருக்கிறாளோ!" ஞாபகம் வந்தவள்போலப் பானு கூறினாள்: "ஆண்டவன் அருளில் குழந்தை நன்றாயிருக்க வேண்டும். அவள் இப்பொழுது பெரியவளாகி யிருப்பாளே! நான் போன வருஷம் அவளை அனந்த நாயகியின் வீட்டில் பார்த்ததாக ஞாபகம். எப்படி இருக்கிறாள் அவள்? அப்பா செத்துப் போன துயரத்தில் அவள் உடைந்துபோய் விட்டாளோ? அவருக்கு அவள் ஆசைப் பெண்ணாயிற்றே!" என்றாள் பானு.

முழங்காலைப் பிடித்துக் கொண்டு எழுந்திருந்த செல்லம் மறுபடியும் மெதுவாக உட்கார்ந்தாள். "அதை ஏன் கேட்கிறாய், போ! அவளுக்கும் அவர்மேல் உயிர். அதனால் அவள் மெழுகாக உருகிப் போய் விட்டாள்!" என்று கூறினாள்.

"போக மாட்டாளா, பாவம்! அவளைப் பற்றிய கவலையெல்லாம் இனிமேல் உனக்குத் தான்!" என்றாள் பானு.

"ஆமாம், அம்மா! அவள் கவலையைப்பட எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?" இப்படிப் பேசியவள் மீண்டும் நன்றாகவே உட்கார்ந்து விட்டாள். "என் கவலையெல்லாம் அவளுக்கு எங்கேயாவது கல்யாணம் நிச்சயமாகிக் கழுத்தில் மூன்று முடிச்சு விழவேண்டுமே என்பதுதான்! வரதட்சிணை இரண்டு வருஷங்களுக்கு முன்னாலிருந்தே தயாராயிருக்கிறது. நெக்லேஸ் முதற்கொண்டு குங்குமம் வரை தயார் செய்து வைத்திருக்கிறேன். அவள் அதிர்ஷ்டம், நல்ல வரனாகக் கிடைக்க வேண்டும்!" என்றாள்.

"இந்தக் காலத்திலே அதிர்ஷ்டமாவது, மண்ணாங்கட்டியாவது, செல்லம்! அதை ஏன் கேட்கிறாய், போ!" என்று ஆரம்பித்தாள் பானு. "பக்கத்து வீட்டு ஆதிலட்சுமியைத் தான் உனக்குத் தெரியுமே! அவள் அப்பாவுக்கு எத்தனை பெரிய கடை, தெரியுமா? அவர் நினைத்தால் வண்டியைக் கூட வீட்டுச் சமையலறைக்குள் கொண்டு வரலாம், அவ்வளவு பணம் இருக்கிறது. ஐந்தாறு வருஷங்களாக அப்பாவும் - அம்மாவும் தங்கள் பெண்ணை யாராவது வந்து கொத்திக் கொண்டு போவார்கள் என்று வெகு அலட்



"ஹூம்! என் தலையெழுத்து... இந்தக் கிழிசலையேதான் தினம் கட்டிக்கணுமா?"

"வேண்டாமே! இன்னொரு கிழிசல் இருந்துதே, அதைக் கட்டிக்கோயேன்!"

சியமாக உட்கார்ந்திருந்தார்கள். யாரும் வழி தவறிக்கூட அந்த வழியாக வரவில்லை. கடைசியில் ஏதோ காமா சோமாவென்று கல்யாணத்தை நடத்தினார்கள். ஒரு பள்ளிக்கூட வாத்தியாரின் தலையில் தங்கள் பெண்ணைக் கட்டினால் போதும் என்று ஆகிவிட்டது. இப்பொழுது ஆதிலட்சுமி, பாவம்! பள்ளி வாத்தியாரின் கிளிக்கூண்டு போன்ற வீட்டில் உட்கார்ந்து கொண்டு, இரட்டை இரட்டையாகப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளிக் கொண்டிருக்கிறாள்!" என்றாள்.

"ஆமாம், நீ உன் பிள்ளை ஆத்மநாதனுக்குக் கேட்டுக் கல்யாணம் செய்து கொண்டிருக்கக் கூடாதோ?"—பானுவை ஆழம் பார்க்கும் நோக்கத்துடன் கேட்டாள் செல்லம்.

ஆனால் பானு அவளை ஆழம் கண்டு கொண்டு விட்டாள். எனவே, அலட்சியமாகக் கழுத்தை அசைத்து, "உம்! அதை ஏன் கேட்கிறாய்? எத்தனையோ பெண்களைப் பார்த்துவிட்டு அவன் ஒருத்தியைப் பொறுக்கி விட்டான். அவள் அப்பா ஆப்பிரிக்கா சென்றிருக்கிறார் அல்லவா? அவர் திரும்பி வந்ததும்... " என்றாள்.

"எங்கேயாவது கல்யாணம் என்று நடந்து குழந்தைகள் சௌக்கியமாயிருந்தால் சரி!" என்று சொல்லிவிட்டு முழங்கால்களில் கையை ஊன்றிச் செல்லம் எழுந்தாள். அவள் நப்பாசை தீர்ந்து விட்டது.

"புறப்பட்டு விட்டாயா, செல்லம்!"

"ஆமாம், பானு! நான் வரட்டுமா?"

"போய் வா! எதற்கும் கடவுள் இருக்கிறார். காப்பாற்றுவார். அவர் மேல் பாரத்தைப் போடு!" என்று உபதேசித்தாள் பானு.

வழி நெடுகச் செல்லத்துக்குத் தங்கத்தின் சிந்தனைதான். பானு சொல்வது போலக் 'கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!' என்று



சேஷசாயி சகோதரர்கள் லிமிடெட் கம்பெனியின் டைரக்டர் திரு கே. கே. ராமன் அவர்களின் புதல்வர் திரு ஆர். சேஷசாயி எம். ஏ. ஐரோப்பாவில் வர்த்தக நிர்வாகத்தில் விசேஷப் பயிற்சி பெற்று வெற்றியுடன் திரும்பினார். அவர் கல்கத்தா ஐ. ஸி. ஐ. ஸ்தாபனத்தில் வர்த்தக அதிகாரியாகப் பணியாற்றப் போகிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

முணுமுணுத்துக் கொண்டே செல்லம் தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

வெராந்தாவில் தங்கம் பழைய புகைப்பட ஆல்பம் ஒன்றை எடுத்து வைத்துப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா!''—தங்கம் அம்மாவைப் பார்த்ததும் கூப்பிட்டுக் கூறினாள் :—'உன்னோடு இடித்தாற்போல் நிற்கிறாளே இவள் கும்பகோணம் அத்தை கனகம்தானே? உனக்குப் பால்ய சிநேகிதி, உயிருக்குயிரான தோழி என்றெல்லாம் சொல்லியிருக்கிறாயே! வரட்டும், வராமல் போகட்டும்; இவள் நம் அப்பா செத்துப் போனதற்கு ஆறுதலுக்காகக்கூட ஒரு கடிதாசு போடவில்லையே!'' என்றாள்.

நாம் எங்கே அவளுக்குத் தெரிவித்துக் கடிதம் எழுதினோம்?'' என்ற செல்லம் சிறிது நேரம் ஏதோ யோசித்துவிட்டு, ''அவளுக்குத் தெரிந்திருந்தால் கடிதமா எழுதியிருப்பாள்? நேரே ஓடி வந்திருக்க மாட்டாளா? அப்படி வர முடியாமற் போனாலும் தன் பிள்ளை சங்கரனை அனுப்பி யிருப்பாளே! அவளுக்கு யார் நம் வீட்டில் நடந்ததைச் சொல்லி யிருக்கப் போகிறார்கள்?'' என்றாள்.

''அருணகிரி மாமாதான் கும்பகோணத்தில் எல்லோருக்கும் சொன்னாராமே! அன்றைக்கு நம் தந்தி கிடைத்ததும் காரை எடுத்துக் கொண்டுதெரிந்தவர்களுக்கெல்லாம் சொல்லி விட்டுத்தான் புறப்பட்டு வந்தேன் என்று அவர் சொல்லவில்லையா?'' என்றாள் தங்கம்.

''கனகத்தின் பெயரை அவன் சொல்லவில்லையே! யார் யாருக்கெல்லாம் தெரிவித்தாய் என்று கூட நான் கேட்டேனே! கனகத்துக்குச் சொல்லி யிருந்தால் அவன் பெயரை அவன் சொல்லியிருக்க மாட்டானா?''

''ஏன், அம்மா! நீயும் ஞாபகப்படுத்தாமல் இருந்து விட்டாய்?''

''எனக்கு அப்பொழுது புத்தி ஒரு நிலையில் இருந்தால்தானே, யார் யாருக்குச் சொல்ல வேண்டும் என்று சொல்ல? அவளைப் பார்த்து எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டன. அதனால் மறந்து விட்டது. இப்பொழுது அவள் பிள்ளை சங்கரனும் வளர்ந்து பெரியவனாகி யிருப்பான். அப்போதே இண்டரில் படித்துக் கொண்டிருந்தான். இப்போது எம். ஏ. படிக்கிறானோ, என்னவோ?'' என்றவள் சிறிது நேரம் தயங்கினாள். பிறகு, ''போய்ச் சற்று காகிதமும் பேனாவும் கொண்டுவா. அருணகிரிக்குக் கடிதம் எழுதிக் கனகத்துக்குச் சொல்லச் சொல்கிறேன். அவள்வீட்டு விலாசம் மறந்து விட்டது! இல்லாவிட்டால் நேர்ப்படவேகூடக் கடிதம் எழுதலாம்!'' என்றாள்.

கடிதத்தை எழுதி அவளே தன் கையால் கொண்டு போய்த் தெருக்கோடியில் இருந்த தபால் பெட்டியில் ஜாக்கிரதையாகப்போட்டுவிட்டுவந்தாள்.

மூன்றாம் நாள் விடியற் காலையிலேயே யாரோ கதவைத் தட்டினார்கள். தங்கம் போய்க் கதவைத் திறந்தவள், ''அம்மா! அருணகிரி மாமா வந்திருக்கிறார்!'' என்று மகிழ்ச்சியுடன் உரக்கக் கூவினாள்.

ஆனால் செல்லம் அதிகமாக வியப்பைக் காட்டிக் கொள்ளவில்லை. அமைதியாக, ''வந்திருக்கிறாரா? வரட்டுமே! நான்தான் வரசொல்லி எழுதியிருந்தேன்!'' என்றாள்.

''எதற்காக வரச் சொல்லி எழுதினாய்?'' என்று கேட்டுக் கொண்டே, அருணகிரி உள்ளே நுழைந்தார். ''வரச்சொல்லி எழுதும் பொழுது காரணத்தையும் கோடிகாட்டி எழுதினால் அல்லவா கவலையில்லாமல் இருக்கும்? என்னமோ ஏதோ என்று அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவந்தேன்! உடனே புறப்படுங்கள் என்று அவள் வேறு துளைத்து எடுத்து விட்டாள், யாருக்கு என்னமோ என்று! நல்லவேளையாக, நீங்கள் இருவரும் நலமாக இருப்பதைக் கண்டபின்தான் எனக்கு உயிர் வந்தது. நீயே சொல், 'தந்தியாகப் பாவித்து உடனே வா!' என்று மட்டும் எழுதினால், என்ன என்ன வெல்லாமோ இல்லாததை யெல்லாம் எண்ணத் தானே தோன்றுகிறது? ஆமாம் அப்படிப் பட்ட அவசரக் காரியம்என்ன வந்துவிட்டது, இப்பொழுது?'' என்று கேட்டவாறே பக்கத்தில் இருந்த ஊஞ்சலில் போய் உட்கார்ந்தார்.

''கூப்பிட்டால் காரணமில்லாமலா ஒருத்தி கூப்பிடுவாள்! முக்கியமான விஷயமாக இருக்கக்கொண்டுதானே உன்னை உடனே புறப்பட்டு வரச் சொல்லி எழுதி யிருக்கிறேன்!'' என்றாள் தமக்கை செல்லம்.

''என்ன விஷயமோ?''

''அருணகிரி! இனிமேல் உன்னைக் கூப்பிடாமல் வேறு யாரைக் கூப்பிடுவது?''

''அது சரி, என்னைக் கூப்பிடாதே என்று நான் எப்பொழுது சொன்னேன்? நீ கூப்பிட்டால் நான்தான் ஓடோடியும் வரக் காத்திருக்கிறேனே! ஆமாம், கூப்பிட்ட விஷயம் என்னவென்று சொல்லவில்லையே நீ?'' என்றார் அருணகிரி.

''சொல்லத்தானே கூப்பிட்டிருக்கிறேன்? சொல்லாமல் இருப்பேனா?'' என்ற செல்லம்

தொண்டுகளிலெல்லாம் தலைசிறந்து விளங்கும் தொண்டு வைத்தியத் தொண்டு. இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த டாக்டர் வி. ஐராவதம் சென்னையில் அக்டோபர் 1ந் தேதி இவ்வுலகை விட்டு மறைந்தார். 1936–ம் வருஷம் பல வைத்தியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தென்னிந்தியாவில் முதன் முதலில் தனிப்பட்ட முறையில் இரத்தப் பரிசோதனை நிலையத்தை நிறுவியவர் டாக்டர் ஐராவதம் அவர்களே.



அவரது பிரிவால் வருந்தும் அவர் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கத்தைப் பார்த்தாள். தங்கம் விஷயத்தைப் புரிந்து கொண்டு எழுந்தாள். ' நீ எங்கே புறப்பட்டு விட்டாய், தங்கம்? உட்காரு!'' என்றார் அருணகிரி.

'' ஆமாம். இங்கே இரண்டு பேரும் உட்கார்ந்து விட்டால்...? காப்பிக் கடை மூடிய வேண்டாமா? நீ போய்ச்சீக்கிரம் காப்பி போட்டுக் கொண்டுவா தங்கம்!'' என்றாள்.

தங்கம் சென்றபின் அருணகிரியிடம், '' தங்கத்தின் அப்பா செத்த பிறகு, நான் இரண்டு காரியங்கள் செய்ய வேண்டியது பாக்கியிருக்கிறது. ஒன்று தங்கத்தின் கல்யாணம். இரண்டாவது, என்னைத் தேடி எப்பொழுது எமன் வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பது!'' என்றாள் செல்லம்.

''என்ன அக்கா, அசட்டுப்பிசட்டு என்று.''

''அசட்டுப் பிசட்டு என்று ஒன்றும் பேசவில்லை. சொல்வதைக் கேளு. என்னைப் போன்ற விதவைகள் - புத்திரபாக்கியம் இல்லாத விதவைகள்—இதைத்தான் செய்கிறார்கள். இதைத் தவிர அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்? நான் உன்னை அழைத்த விஷயம் என்னவென்றால், தங்கத்துக்கு வரன் தேடிச் சீக்கிரமாக எப்படியாவது கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்பதற்காகத்தான்!''

''இதை நீ எனக்குச் சொல்ல வேண்டுமா, அக்கா?'' - அக்காவின் கையைப் பற்றிக் கொண்டு தம்பி அருணகிரி கூறினார்: ''உனக்குத் தெரியாத விஷயம் அல்ல. நானும் இரண்டு பெண்களைப் பெற்றவன். சாந்தியும், காந்தியும் பார்க்கப் போனால் நம் தங்கத்தைக் காட்டிலும் ஏழெழு ஐந்து ஐந்து வயது பெரியவர்கள்!''

'' அதற்காக ..?''

''வரன் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது. நான் கும்பகோணத்தில் இருக்கிறேன். பெரும் தொழிலும் நடத்துகிறேன். கார் இருக்கிறது. பங்களா இருக்கிறது. மாப்பிள்ளைதான் இல்லை. எல்லோரும் 'பெண்கள் அதிகமாகப் படிக்கவில்லையே!' என்று தட்டிக் கழிக்கிறார்கள்!''

'' ஆனால் நம் தங்கம் இண்டர் வரையில் படித்திருக்கிறாளே!''

''அது சரி. நீ இங்கே உட்கார்ந்துகொண்டு வரன் பார்த்தால் கிடைக்குமா? மாட்டைத் தண்ணீரில் போட்டுக் கொண்டு விலை பேசும் கதையாக அல்லவா இருக்கிறது?''

'' என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? கும்பகோணம் வந்துவிடட்டுமா? பெண்ணின் கல்யாணத்துக்காக நீ உலகத்தின் எந்த மூலைக்கு வரச் சொன்னாலும் நான் தயார்!''

'' வந்து விடேன், கும்பகோணத்துக்குத் தான்!'' என்றார் அருணகிரி.

'' அது சரி, இப்பொழுது தான் நினைவுக்கு வருகிறது. ஒரு வரன் இருக்கிறது!'' என்று ஆரம்பித்தாள் செல்லம். அதைக் கேட்கவும் அருணகிரிக்கு அப்படியே மூச்சு நின்று விடும் போலாகி விட்டது.

'' எங்கே இருக்கிறது?'' என்று ஆவலுடன் கேட்டார் அருணகிரி.

'' கும்பகோணத்தில்தான்!''

'' கும்பகோணத்திலா?'' இருக்கவே முடியாது என்பது போலக் கேட்டார் அருணகிரி.

''ஆமாம்! கும்பகோணத்திலேயே தான். அங்கே எனக்கு ஒரு தோழி இருக்கிறாள். உனக்கும் அவளைத் தெரிந்திருக்கலாம். கனகம் என்று பெயர்!''

''கனகமா? தெரியுமே!''

''அவளுக்கு ஒரு பிள்ளை இருக்கிறான். சங்கரன் என்று பெயர்!'' என்றாள் செல்லம் இலேசாகச் சிரித்துக் கொண்டே.

'' ஆமாம். ஆமாம்! அந்தப் பையனைக் கூடப் பார்த்திருக்கிறேனே! எம். ஏ. வோ என்னவோ படித்திருக்கிறானாம். நல்ல வேலை கிடைக்கக்கூடும் என்று பேசிக் கொள்கிறார்கள். அந்தப் பையன் நமக்குச் சரிப்பட்டு வருமோ?'' என்று கேட்டார் அருணகிரி.

செல்லத்துக்குத் தன் சிநேகிதி கனகத்தின் மேல் அபார நம்பிக்கை. தான் இருக்கும் நிலையைக் கேட்டால், தன்னை விட்டுக் கொடுக்க மாட்டாள் என்றே எண்ணினாள். எனவே, தனது தம்பியின் கேள்விக்கு மிகுந்த நம்பிக்கையுடன் பதில் கூறலானாள்:

''அவர்கள் அப்படி ஒன்றும் பெரிய பணக்காரர்கள் இல்லை, கர்வப்படுவதற்கு; இந்த இடத்தில் சம்பந்தம் செய்து கொள்ளலாமா வேண்டாமா என்று யோசிப்பதற்கு. நேர்மையான நல்ல நடுத்தரக் குடும்பம்தான். கனகத்துக்கும் எனக்கும் சிநேகிதம் அதிகம். அவள் மாட்டேன் என்று மறுக்க மாட்டாள். நான் இந்த வயதுக் காலத்தில் எங்கெங்கெல்லாம் போய்ச் சுற்றுவது? அதனால்தான் உன்னைக் கூப்பிட்டு அனுப்பினேன். உன்னோடு வரலாமென்றாலோ, தங்கத்தை எப்படித் தனியாக விட்டு வருவது? கூடவே அழைத்துக்கொண்டு வந்துவிடலாம் என்றாலோ, வரன் தேடுவதற்



"நல்ல ஆளப்பா நீ! ஒரு மனைக்கு பஞ்சையும் ஒரே தலையணையிலே அடைச்சுக் கட்டிட்டே! ம்ம்! இதுக்கு முந்தி நீ என்ன வேலை செய்து கொண்டிருந்தாய்?"
"கவர்ன்மெண்ட் பஸ்ஸிலே கண்டக்டராக இருந்தேன்!"

காகப் பெண்ணையும் கூடக்கூட அழைத்துச் செல்கிறேன் என்ற அவச்சொல் ஏற்படும். அதனால் நீ திரும்பிப் போனதும் முதல் காரியமாகக் கனகத்தின் வீட்டுக்குப் போ. நான் சொன்னதாக எல்லா விஷயங்களையும் கூறித் தங்கத்தின் கல்யாணத்தை முடித்து வைப்பதற்கான வழிவகையைத் தேடு!"

"சரி, அக்கா!" என்றார் அருணகிரி.

இட்டிலி காப்பி சாப்பிட்டு விட்டு அருணகிரி ஊருக்குப் புறப்பட்டு விட்டார். இருட்டும் நேரம்வரை அம்மாவும் பெண்ணும் உள்ளுக்குள் ஊறிய வெட்கம் காரணமாக ஒருவரை யொருவர் பார்க்கக் கூசிக் கண்ணு மூச்சி விளையாடிக் கொண்டிருந்தனர்.

"ஏண்டி, தங்கம்! இன்னுமா விழித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று மகளின் மௌனத்தைக் கலைத்தாள் அன்னை.

"ஆமாம் அம்மா! படித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றாள் மகள்.

"இன்றுதான் என் மனத்துக்கு நிம்மதியாயிற்று!" என்று தன் உள்ளத்து ரகசியத்தை அம்பலப்படுத்தினாள் செல்லம்.

ஆனால் பேச்சு வளரவில்லை. மீண்டும் மௌனம் நிலவியது.

இதே நிலையில் ஒரு நாள் ஓடியது; ஒரு வாரம் ஓடியது. ஒரு மாதமும் ஓடி விட்டது. கடைசியில் செல்லமே மீண்டும் அருணகிரிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினாள்.

மூன்று நான்கு நாட்களுக்குப் பிறகு, தபால்காரர் கதவைத் தட்டினார். தங்கம் கதவைத் திறக்க ஓடினாள். தபால்காரர் கொடுத்த கடிதத்தைத் தாயாரிடம் கொண்டு வந்து கொடுத்தாள். "அருணகிரி எழுதியிருப்பான் போலிருக்கிறது!" என்றாள் தாயார். "ஆமாம்! எழுத்தைப் பார்த்தால் அவருடையதாகத்தான் தோன்றுகிறது!" என்று ஆமோதித்தாள் தங்கம். அப்புறம் அவள் அங்கே நிற்கவில்லை. மெதுவாக அங்கிருந்து நழுவி விட்டாள்.

செல்லம் அவள் போவதைப் பார்த்து விட்டுப் புன்முறுவல் பூத்தாள். பிறகு கடிதத்தின் உறையைக் கிழித்தாள். பாதிக் கடிதம் படிக்கும் வரையில், அந்தப் புன்முறுவல் அவளுடைய உதடுகளிலேயே நெளிந்து விளையாடிக் கொண்டிருந்தது. பிறகு திடீரென்று பக்கென அணையும் விளக்கைப் போல அணைந்து அவிந்து விட்டது. செல்லம் உரக்கக் கதறிய வண்ணம் வெளியே வந்தாள். அந்தக் கூச்சலைக் கேட்டுத் தங்கமும் அந்தப் பக்கம் விரைவாக ஓடி வந்தாள்.

செல்லம் தன் கையிலிருந்த கடிதத்தைத் தங்கத்தினிடம் கொடுத்து, உரத்த குரலில், "உரக்கப் படி, உன் பலம் கொண்ட மட்டும் உரக்கப் படி. தெருவுக்குக் கேட்கும்படியாகப் படி. ஊருக்குக் கேட்கும்படியாகப் படி; உலகத்துக்கே கேட்கும்படியாகப் படி!" என்றாள் வெறி வந்தவள் போல.

"அம்மா!" தங்கம் தாயாரை அணைத்துக் கொண்டு ஏதோ கூற வாய் எடுத்தாள். ஆனால் செல்லம் அவள் வாயைப் பொத்தி ஒரு உலுக்கு உலுக்கி உதறித் தள்ளினாள். "உம், படி!" என்று பேய் போல் விழித்துக் கடிந்தும் கொண்டாள்.

தங்கம் பயந்து போய்க் கடிதத்தைப் படிக்கலானாள். அவளுடைய மாமா அருணகிரிதான் தமது அருமை அக்காவுக்கு எழுதியிருந்தார்:

"விசித்திரமான காரியம் ஒன்று எதிர்பாராத வகையில் நடந்து விட்டது. உனக்குக் கடிதம் எழுதுவது என்றால், நான் எப்படி எழுதுவது? நீ சொன்னபடி கனகத்தின் வீட்டுக்குப் போய் அவளுடன் பேசிக் கொண்டிருந்தேன். தங்கத்தின் பேச்சை எடுக்கலாம் என்று வாய் எடுக்கும் பொழுது சட்டென்று அவளே தன மகன் சங்கரனுக்கு என் மகள் சாந்தியைக் கேட்டு விட்டாள். ஒருகணம் என்ன செய்வது என்று விளங்காமல் திகைத்து விட்டேன். அப்புறம் யோசித்தேன், சாந்தி யார்? சாந்தியும் உன் மகள் தானே? தங்கத்தை விட ஏழு வயது வேறு பெரியவள். அவளுக்குக் கல்யாணம் கூடி வந்தால் நீ சந்தோஷப்படுவாய் என்று எனக்குத் தெரியும். அதோடு சாந்திக்கு இன்று நல்லகாலம் வந்திருப்பதுபோல நாளை தங்கத்துக்கும் நல்லகாலம் வராமலா போகப் போகிறது? அதனால், சாந்திக்கும் சங்கரனுக்கும் முடிபோட்டு விட முயற்சி செய்தேன். வைகாசி பதினைந்தாந் தேதி முகூர்த்தம் குறித்தாகி விட்டது. ஒரு வாரத்துக்கு முன்னதாகவே வந்து சேர். தங்கத்தையும் கூடவே அழைத்து வா. இன்னும் இரண்டு மூன்று வரன்கள் எனக்குத் தெரிந்து இருக்கிறார்கள். தங்கத்துக்காகக் கவனிப்போம்.

உன் ஆசீர்வாதத்தைக் கோரும்,

— அருணகிரி."

[ஸ்ரீ அம்ருதா ப்ரீதம் கௌரின் உருதுக் கதையைத் தழுவியது]

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

